ஸப்தஸ்வராலயா

SABDHASWARRALAYA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

Nadarajah & Company

312, 314 Grandpass Road,
Colombo - 14,
Sri Lanka.
Tel: 421012 - 320855
Fax: 438423.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழும் தாது வருடம் புரட்டாதித் திங்கள் இருபத்தேழாம் நாள் (13.10.1996) ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் அரங்கிலே நடைபெறும் நவராத்திரிக் கலைமகள் விழாவில் "ஸப்தஸ்வராலயா" தனது மூன்றாவது விழா மலரினை மெல்ல மொட்டவிழ்த்து நகை முகம் சிந்தி உங்களை வரவேற்குமுகமாக பல சுவை ததும்பும் புதுமைகளுடன் இம்மலரினை வெளியீடு செய்கின்றது.

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்து மலர்

இன்று கொழும்பில் இயங்கும் பல்வேறு இசைப்பள்ளிகளில் 'ஸப்தஸ்வராலயா'வும் ஒன்று. இவர்கள் ஒவ்வொரு ஆண்டும், நவராத்திரியின் பொழுது கலைவிழா ஒன்றை ஏற்பாடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிற்கான இவ்விழா, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி நடைபெற இருப்பதாக அறிகிறோம். இது அவர்கள் நடத்தும் ஐந்தாவது கலைவிழா. இவ்விழா சிறக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஸப்தஸ்வராலயா'வின் இசைப்பணி மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இப்பள்ளியின் அதிபர், ஆசிரியைகள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatta,
COLOMBO - 6.

இறைபணியில்
சுவாமி ஆத்மகனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிச் செய்தி

அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு – திருவள்ளுவர்

அகில புவனங்களைப் படைத்தும் காத்தும் மறைத்தும் அளித்தும் அருளும் இறைவன் பஞ்சகிருத்திய மூர்த்தியான நிலையில் ஸ்ரீ நடராஜ உருவம் அமைகிறது. சிதம்பர நடம்பயில் செழும்கழல் இறைஞ்சுவாம் என்பது திருவாதவூரர் புராணம் கூறுகிறது. எனவே ஆடற்கலை அரசனாக நடராஜப் பெருமான் விளங்குகிறார். எனவே வேதம், திருமுறை, கீதம், நிர்த்தம் என்பன முன்னாள் தொட்டு சிறப்பாகவும் நாதஸ்வரூபமாகவும் மக்கள் , விலங்கினம், பறவைகள், சர்ப்பங்கள் இந்த இசையில் திளைத்து மயங்கி இருப்பதையும் நாம் நன்கு அறியக்கிடக்கிறது. இவை கலை அரசி, தமிழ்மொழித்தாய், ஞானஸ்வரூபியான கலைச்செல்வி ஸ்ரீ சரஸ்வதி கடாக்ஷம் பெற்றால் தான் ஒரு தலை சிறந்த கலைஞராக விளங்கலாம். எனவே செல்வி நடராஜா நந்தினி அவர்கள் ஸப்தஸ்வராலயா என்னும் சங்கீத வித்தியாசாலையைப் பெருமையுடன் அறிவு தெளிவாக மழலைச் சொல்மாறாத குழந்தைகளை நெறிப்படுத்தி, அவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக அமைக்க பிரயாசை எடுத்து நடத்திவரும் அரும்பெரும் சேவையை போற்றவேண்டியது எமது கடன். எனவே இறைவன் நாதஸ்வரூபி. இறைவனோடு கலந்தது இசை நடனம், பாடல்கள், சுருதிலயம் என்பன. இந்தியாவில் திருவையாற்றில் நடக்கும் தியாகராஜசுவாமிகள் விழாவில் சென்று பார்த்தால் இசையின் திறமையையும் இசையைத் திறம்பட போற்றி வழிவகுக்கும் தன்மையையும் காணலாம். எனவே இவர்களால் இந்த வருடம் நடத்த இருக்கும் நவராத்திரி கலைவிழா தெய்வீகப் பெருவிழாவாக அமையவும் ஆசிரியை மாணவ மாணவிகள் சிறப்பு அம்சத்துடன் பொலிவு பெறவும் வேண்டி கலைச்செல்வி சரஸ்வதி தேவியின் மலரடி பணிந்து எமது மனப்பூர்வமான நல்லாசிகளை அன்புடன் சமர்ப்பிக்கிறேன்.

செல்வி நடராஜா நந்தினி அவர்கள் சிறப்பான குடும்பத்தைச் சேர்ந்தவர். முருகப் பெருமானைக் குல தெய்வமாக நினைத்து வணங்கிய பேரருளாளர் என்பதும் இங்கு குறிப்பிடற்குரியது. ஞான குழந்தை முருகன் துணையுடன் அவர்கள் தொண்டும் கலையுலகின் சிறப்பையும் முருகப்பெருமான் அவர்கட்கு தடையில்லாது நிறைவாக கருணை செய்வாராக.

சுபம்

பிரம்மஸ்ரீ பிரதிஷ்டா சிரோன்மணி
சாமி - விஸ்வநாதக் குருக்கள்
42/9, சுவிசுத்தராம வீதி,
கொழும்பு - 6, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை என்றால் இறைவன்

சங்கீதம் என்பது மிடற்றிசை (கீதம்) கருவியிசை (வாத்தியம்) ஆடல் நிருத்தியம் ஆகிய மூன்றையும் தன்னுள் கொண்டு விளங்குகிறது.

முழுமுதல் கடவுளாகிய சிவபெருமான் நாத வடிவினனாக இருந்து இசையாக பரிணமித்து இசைப் பயனாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறான். பிரணவ நாதமே சங்கீதத்தின் மூலம் ஆகும். 'உய்ய என் உள்ளத்து ஓங்காரமாய் நின்ற மெய்யா' என்னும் மாணிக்கவாசக சுவாமிகளின் வாக்கு இதற்கு சான்று பகர்கின்றது. மாணிக்கவாசகரின் சிவபுராணத்தில் இரண்டாவது சொல்லாக நாதன் என்பது அமைந்திருக்கிறது. இச்சொல் இறைவன் நாத வடிவினன் என்பதை நன்கு வெளிப்படுத்துகிறது. அன்னை பராசக்தியும் "நாத ரூப சௌந்தரி" என்று போற்றப்படுகிறாள். நாத ரூபமும் அதன் சௌந்தர்யமுமே உலகை மயக்கும் சங்கீதத்தின் ஜீவனாக விளங்குபவை. இலங்கை மன்னன் இராவணனின் இசைக்கு, எல்லாம் வல்ல இறைவன் மயங்கினான் என்று இராமாயணம் சொல்லுகிறது. இதன் காரணமாகவே சிவபெருமானுக்கும் 'கானப்பிரியன்' என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டுள்ளது.

இசை என்றால் இறைவன். இறைவன் என்றால் இசை என்று நால்வரின் பாடல்கள் விளக்குகின்றன. "ஏழில் ஓசை தித்தராகி........ வேதம் ஓதித் திரிபவனை", "பாடுவார் பசி தீர்ப்பானை", "ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் உள்ளானை", "யாழ் முயன்றிருக்கும் ஆரூர் அப்பனை" என்றெல்லாம் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பண்ணமைத்து செஞ்சொல்லால் பாடியிருக்கிறார்கள். இசையை இறைவனாக கொண்டால் இசையை போற்றுகிறவர்கள் இறைவனைத்தானே போற்றுகிறார்கள்! இசை வழியே சென்று இறைவனை அடைந்தவர்கள், நால்வர் மாத்திரமல்ல, தியாகராஜ சுவாமிகள் மாத்திரமல்ல எண்ணில் அடங்காதோர், இறைதரிசனம் பெற்றுள்ளனர்.

'ஸரிகமபதநி' என்கின்ற ஏழு ஸ்வரங்களுக்குள்ளே இறைவா நீ எத்தனை கோடி இன்பம் படைத்தாய். எத்தனை கோடி இராகம் படைத்தாய். இந்த ஏழு ஸ்வரங்களுக்குள்தான் எத்தனை சட்டதிட்டங்கள். சங்கீதம் என்றால் ஏதோ ஓர் பாட்டைப் பாடினால் முடிந்துவிட்டது என நினைக்கின்றோம். ஒரு கீர்த்தனத்தை சரியாக பாடுவதில் உள்ள சிரமங்கள் சங்கீதம் நன்கு படித்தவர்களுக்குத் தான் தெரியும். எந்த ராகத்தை எப்பொழுது பாடவேண்டும், எந்த பாட்டை எந்த ராகத்தில் பாடவேண்டும் என்று பல முறைகள் இருக்கின்றன. இது மட்டுமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்துக்கு தகுந்த ராகம் உண்டு
செய்யுளுக்கு தகுந்த ராகம் உண்டு
குணத்துக்கு தகுந்த ராகம் உண்டு
காலத்துக்கு தகுந்த ராகம் உண்டு

குறிஞ்சி நிலத்திற்கும் பாலை நிலத்திற்கும் சாதாரி என்று சொல்லப்படுகிறது.

வெண்பாவை சங்கராபரணத்தில் பாடவேண்டும். கலித்துறையை பைரவியில் பாடவேண்டும். ஆசிரியப்பாவை தோடியில் பாடவேண்டும். பிள்ளைத் தமிழை கேதார கௌளையில் பாடவேண்டும்.

குணம் என்று பார்த்தால் இரக்கத்துக்குரிய ராகங்கள் நீலாம்பரி, புன்னாகவராளி, ஆகரி கண்டாரவம், பியாகடம் என்பவையாகும்.

மகிழ்ச்சிக்குரிய ராகங்கள் காம்போதி, சாவேரி, தன்யாசி என்பன.

யுத்த ராகம் நாட்டையாகும். இது மட்டுமா வசந்த காலத்தில் தகுந்த ராகங்கள் வசந்தா, காம்போதி , அசாவேரி என்பவை.

மாலைவேளைக்கு உரிய ராகம் கல்யாணி காபி, கன்னடம் என்பவை.

விடியற்காலைக்கு ஏற்ற ராகம் இந்தோளம், நாட்டை, பூபாளம் என்பவை.

உச்சிவேளையில் பாடுவதானால் சாரங்கம், தேசாட்சரி என்பவை உசிதமானவை.

அப்பப்பா சங்கீதம் என்றால் லேசா? எத்தனை எத்தனை சொல்லி வைத்திருக்கிறார்கள் நமது முன்னோர்கள்.

இறைவன் விரும்பும் சங்கீதத்தை, இறைவனை சுலபமாக அடைய உதவும் சங்கீதத்தை, இடம், செய்யுள், குணம், காலம் அறிந்து பாட வேண்டிய சங்கீதத்தை, நன்கு முறைப்படி பயின்று அண்டியவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் நந்தினி வாழ்க வளர்க.

தெ. ஈஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸப்தஸ்வராலயா" இசை நிறுவனத்தின் குருவின் நெஞ்சத்தில் மலர்ந்திடும் உணர்வின் அலைகள்

இசையில் இறைவன் இரண்டறக் கலந்துள்ளான். நால் வேதங்களில் ஒன்றான சாம வேதமானது இசை வடிவமாயுள்ளது. சர்வேஸ்வரரான சிவபெருமான் சாமகானத்தில் மிகுந்த விருப்புடையவரென்பதனை வேதங்கள் விளம்புகின்றன. நாதத்தினை முறைப்படி உபாசிக்கும் ஒருவருக்கு வெகு விரைவிலேயே மோட்சம் கிடைக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை எனலாம். இசையோடு ஒன்றிணையும் வாத்தியங்களை நோக்கும் போது நாரதர் கையிலே மகதியாழும், வேணுகானமிசைத்து மகிழ்ந்திடும் ஆயர்பாடிக் கண்ணனின் கையிலே உள்ள புல்லாங்குழலும், உலகங்களைப் படைக்கும் பிரமனின் சக்தியாகிய நான்முகன் நாயகி, ஏழிசை வல்லபியாகிய கலைமகள் கையில் தவழ்ந்திடும் வீணையும், எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றன. தேவகானத்திலே எம்மை மூழ்க வைக்கின்றன என்றால் மிகையாகாது.

இவ்வுன்னத கலையினை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கக்கூடிய ஆற்றலையும் மனத்துணிவையும் தந்த இறைவனுக்கு முதலிலேயே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். என்னைக் கலையுலகில் பிணைத்துக்கொள்ள வழிவகுத்தது சென்னையில் உள்ள "கலாஷேத்ரா" நுண்கலைக் கல்லூரியாகும். (Kalakshetra College of Fine Arts, Madras) அங்கு என்னை அன்பான முறையில் சிறப்பாக வீணையிசையையும் திறமையாக வாய்ப்பாட்டு இசையையும் கற்றிட உதவிய எனது குருவினரையும் நினைக்காமல் இருக்க முடியாது. மிகவும் திறமையும் வளமான ஆற்றல் நிறைந்தவர்களுமான ஆசிரியைகள் கலைமாமணி "திருமதி இராஜேஸ்வரி பத்மநாதன், திருமதி K. N. எதிராஜவல்லி ஆகிய இருவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றி உணர்வினைத் தெரிவிப்பதோடு, சின்னஞ்சிறு வயதில் வீணையிசையின் மேல் ஆர்வம் வரக் காரணமாக இருந்தவரான "இன்னிசைச் செல்வி" செல்வி பராசக்தி விநாயகமூர்த்தி அவர்களையும் அதே வேளை இசை பயில உறுதுணையாக இருந்து இன்றுவரை இந்த இனிய இசைக்கலையினை வளர்ப்பதற்கு தேவையான ஆக்கமும் ஊக்கமும் நல்கி வரும் "கலாசூரி" திருமதி கௌரீஸ்வரி; இராஜப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் என் மனமார்ந்த உளமார்ந்த குரு பக்தியினைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைக் கட்டுப்பாட்டாளராக விளங்கிய சங்கீத வித்துவான் அமரர் திரு. A. S. நாராயணன் அவர்களும் தமக்குத் தெரிந்த பல நல்ல சங்கீத உருப்படிகளைக் கற்றுத் தந்ததோடு மாத்திரமன்றி நல்ல இசை நுணுக்கங்களையும் சொல்லித்தந்து இசையுலகில் தலை நிமிர்ந்து நடக்கவைக்க அரும்பணியாற்றியமை குறிப்பிடக் கூடிய ஒன்று. வயதிலும் அனுபவத்திலும் பெரியவராக இருந்து எம்மிடம் அன்புடன் இசைக்கலையினைச் சொல்லிக் கொடுத்த பாங்கு எம்மை விட்டு அகலாது. அவரின் மறைவு எம்மைப் போன்று வளர்ந்து வரும் இசைக்கலைஞர்களுக்கு எல்லாம் பேரிழப்பு ஆகும். அவ் இசை மேதையை இவ்விடத்தில் நினைவு கூருவதில் பெருமையடைகின்றேன்.

இசையைப் பற்றி நோக்கும் போது அகத்தியர், இராவணன், நாரதர் இவர்கள் மூவரும் இசை வல்லுனர்கள். தமிழ் இசைக்கு இலக்கணம் தந்த ஆதி மும்மூர்த்திகள் ஆவர். இசையில் ஒவ்வொரு இராகமும் வெவ்வேறு உணர்ச்சியை உணர்த்தும். ஆசை, ஆச்சரியம், கோபம், தைரியம், வீரம், வெற்றி ஆகியவைகளுக்கு ஆண் இராகங்களும், அன்பு, காதல், சிரிப்பு, தயை, துன்பம் முதலியவற்றை உணர்த்துவதற்குப் பெண் இராகங்களும் சமாதானம், பயம், வீழ்ச்சி முதலியவற்றை உணர்த்த அஃறிணை இராகங்களும் உபயோகிக்க வேண்டும் என்று நாரதர் குறிப்பிடுகின்றார்.

இவற்றைவிட குளிர்ந்த மழையினைப் பொழிய வைக்கும் சக்தி "அமிர்தவர்ஷனி" இராகத்திற்கும் நாகத்தினை நிலைமறந்து ஆடவைக்கும் சக்தி "புன்னாகவராளி" இராகத்திற்கும் ஆழ்ந்த உறக்கத்தைத் தருவதில் "நீலாம்பரி" இராகமும் நல்ல ஜீரண சக்தியினைக் கொடுக்க வல்லது "ஸ்ரீ இராகமும்" ஆகும்.

இசைக்கலை கடலைப் போன்றது. இதனை கற்க காலமும் போதாது. கற்க கற்க முடிவில்லாதது. இத்தகைய இசைக்கலையினை என்னிடம் கற்க வரும் மாணவர்கள் எனக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன். என்னிடம் உளப்பூர்வமான குரு பக்தியுடன் கல்வி கற்கும் அவர்களின் இசை என்றென்றும் அவர்களிடையே வளர்ந்து பரிணமிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு "ஸப்தஸ்வராலயா" வினை உருவாக்க அன்றும், இன்றும், என்றும் என்னுடன் இணைந்த பெரியோர்களின் ஆசியும் இறைவனின் திருவருளும் கிடைப்பது போன்று இனிவரும் காலங்களிலும் அவர்களின் ஆசிகளும் வாழ்த்துக்களும் இவ்விசை மன்றத்திற்கு கிடைக்க வேண்டும் என்று கூறி எனது உரையினைப் பூர்த்தி செய்கின்றேன்.

"இசையினால் மகிழ்ந்திடும் இறைவன்
தன் ஆசியினை நித்தம் வழங்கி எம்மை வளர்த்திடுவான்"

"ஸப்தஸ்வராலயா",
ஆசிரியை,
செல்வி நந்தினி நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலத்தை மயக்கிடும் இசை ஞானத்தினை
காலங்கள் கோலம் தூவிட கலைமகளின்
கைவீணையின் நாதமாக விளங்கி மின்னிடும்
எம் "ஸப்தஸ்வராலயா"

இறைவனின் அற்புத ஸ்ருஷ்டியாக விளங்கிடும் இப்பிரபஞ்சத்தில் அதியுன்னதமான வர்ணம் மிளிரும் ஓவியமாக ஒளி வீசிடும் இயற்கை எழில் இவற்றை மெருகேற்றுவது போல் அமைந்து, ஜதி சொல்லி சலசலத்து வெள்ளிப் பாளம் உருகிடும் உணர்வை உருவாக்கிடும் நெடிய மலையுச்சி அருவிகளும், தென்றலானது வண்டினம் துளைத்திட்ட மூங்கில் புல் வழியே சென்று மென்மையான பண்ணினை இசையாக்கி மகிழ்ந்திட; புல் தருமோ இசை என மலைப்பவர்க்கு, புள்ளினமும் இசைத்திடுமே என்று கோகிலமான குயிலினங்களும் பஞ்சமத்தில் கூவி இசை பாடிட! வாய் பேசா விலங்கினமும் குரல் அசைவால் ஏழிசையிலும் சிறப்புடன் விளங்கிடும் அழகே ஓர் தனிக்கலை!

மயூரமும் "ஸட்ஜத்தை" தன் குரலசைவால் வெளிப்படுத்தி, ஜதியுடன் தன் அழகுத் தோகையை விரித்தாடி நடனத்திலும் பெருமையுற்று அகம் மகிழ்ந்திட, உழவுத் தொழிலுக்கு உதவிடும் காளையான எருதும் "ரிஷபத்தை" தன் குரல் வழி கூறிடும் வேளையில், வெள்ளாடு பால் பொழிந்து தந்தும் தன் கம்பீர தோரணையாக "காந்தாரத்தை" தன் பக்கமாகக் கவர்ந்திட, தன் இணை பிரிந்தால் உயிர் பிரிந்து விடும் என்ற பாசப்பிணைப்பினையுடையதும் பனித்துளியை மாத்திரமே தாகத்திற்காக அருந்தி உயிர்வாழும் கிரௌஞ்சமாகிய அன்றில் பறவையும் "மத்திமத்தை" தனதாக்கிக் கொள்ள, இனிமையான பேதமற்ற "பஞ்சமத்தை" பெருமகிழ்வுடன் பெற்றுக் கொண்ட கோகிலமும் தன் களிகூர தேனினுமினிய குரலிலே கூவி வசந்தத்தினை வரவேற்று மகிழ்ந்திடவே, கம்பீரமாக சிலிர்த்து வேகமாக ஓடிப் போர்ப்படை வீரன் போல் ராஜ மரியாதையோடு அரசர்களை சுமந்து செல்லும் குதிரையும் "தைவதத்தை" தைரியமாகக் குரல் வழியாக இசைக்க, பிளிறிடும் குரலிலே தும்பிக்கையுடன் ஆடி அசைந்து மலைக்குன்று போல் விளங்கிடும் கஜமுகனின் தோற்றத்தையுடைய யானையும் "நிஷாதத்தை" ஒலித்திட, இவ்வியற்கையோடிணைந்த ஸப்தஸ்வரங்களை ஆறறிவு படைத்த மனிதன் தன் குரலிசையில் ஒன்றிணைந்து இன்னிசை பாடிட, நாமும் அவ்விசையினை எம்மால் இயன்ற அளவு மெருகேற்றி அன்புடன் இறைவனுக்குப் பாமாலையாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பேரவாவால் உருவாக்கப்பட்டது எம் "ஸப்தஸ்வராலயா" என்று கூறுவதிலே பெருமையடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடெடுத்துப் படிக்காத இயற்கை விலங்கினங்கள் இசை படிக்க ஆறறிவு படைத்திட்ட மனிதன் இசையினை உணர்ந்து இரசிக்கும் திறனற்றவனாக இருந்தால் புலன்கள் அற்ற கல்லைவிடக் கேவலமாகி விடுவான் என்பதில் ஐயமில்லை.

இவ்விசைக் கலையைக் கவினுறவே கற்க சென்னை சென்று வீணையிசையோடு, வாய்ப்பாட்டிசையையும் கவனமுடன் கலாஷேத்ராவிலே கண்ணியமுடன் பயின்று டிப்ளோமா பட்டம் பெற்று தாயகம் திரும்பிய எம் குருவான செல்வி நந்தினி நடராஜா அவர்கள் அயராது தான் கற்ற கலையினை, தம் இனிய தாய் நாட்டிலே வளர்த்திட விரும்பி 1989ம் ஆண்டு ஜுன் மாதம் 3ம் திகதி தனது வகுப்பை ஆரம்பித்தார். அன்று தொட்டு இன்று வரை வீரத்தை, செல்வத்தை, கல்வியை மங்காமல் வாரி வழங்கிடும் பெண் தெய்வங்களாகிய வீரதுர்க்கையையும், செல்வத்தின் திருமகளையும், நாவினிக்க ஆயகலைகள் அறுபத்திநான்கினையும் தெவிட்டாமல் நல்கிடும் நவரச நாயகியாம் நாமகளையும் துதி பாடிப் பரவிடும் கோதையர் நாமெல்லாரும் ஆண்டுதோறும் புரட்டாதி மாதமதில் மேவிடும் நவராத்திரி நன்னாளிலே "ஸப்தஸ்வராலயா" பொலிவுறும் அழகை இரசித்து நுகர்ந்திடும் பொழுதினிலே கோலமிட்டு, பொம்மைக் கொலு வைத்து, நவதானியம் விதையூன்றி, இன்னிசை வாத்யமெல்லாம் ஒலி செய்து மெய்மறந்து இரசித்து மகிழ்ந்து குதூகலிக்கும் வனிதையராக கலை நிகழ்ச்சிகள் செய்வதை, காலங்கள் தோறும் எம் மனக்கண் முன் நிழலாடும் கோலங்கள் ஆகிடும் என்பதில் ஐயமில்லை.

1992ல் மிக அமைதியாக ஆழ்கடலலையோசை போல் தனது இல்லத்தில் 1வது கலைவிழாவினைக் கொண்டாடி மகிழ்ந்து, பல இரசிகர்களும் இவ்வின்பத்தினை இசைநிகழ்வை அநுபவிக்க வேண்டுமென்ற பேரவாவினால் தனது இரண்டாவது நவராத்திரிக் கலை விழாவினை 1993ல் கொள்ளுப்பிட்டியில் உள்ள "சசாக்காவா" மண்டபத்தில் கொண்டாடி கலகலப்பாக மகிழ்வெய்திய எம்மை வழிநடத்திய இறையருளால் மூன்றாவது ஆண்டான 1994ம் ஆண்டிலே எம் கலைவிழாவினை வித்தியாசமாக புதுமையாகச் செய்ய வேண்டும் என்னும் ஆவலிலே "ஸப்தஸ்வராலயா" என்ற பெயரினைச் சூட்டி ஒரு மலரினை வெளியிட்டு புத்தம் புது மலராக அரும்பி சுகந்த பரிமளம் போன்று மணம் பரப்பச் செய்து பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலே அவையோரை வசீகரிக்கும் வண்ணம் கொண்டாடினோம். 1995ல் எம் பூரிப்பு எண்ணிலடங்கா வண்ணம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! தமிழகத்தின் பிரபலமான கர்நாடக இசைக் கலைஞரும், தென்னிந்தியத் திரைவானில் பின்னணிப் பாடகரும், மலையாளம் பெற்ற மைந்தனாம் "கலைமாமணி டாக்டர் பத்மஸ்ரீ K. J. ஜேசுதாஸ் அவர்களின் மலை ஆழம் போல் நிறைந்த ஆசியும் இசைக்கலைஞர்களை ஊக்கப்படுத்தி வளர்த்திட வேண்டும் என்றும் தன்னைப் போன்று பல கலைஞர்களுக்கும் இறைவன் அருளாசி நல்க வேண்டுமென்று அற்புதமான ஆசியுரையினை நல்கியமை எம்மையெல்லாம் பெருமகிழ்வுக்குள்ளாக்கியது. இவை எமது இரண்டாவது மலருக்குப் பெருமையளித்தது. அவ்வாண்டிலே நாம் மருதானையிலுள்ள எல்பின்ஸ்டன் அரங்கிலே இவ் விழாவினைச் சிறப்புறக் கொண்டாடினோம்.

இவை தவிர இன்முகத்துடன் எம்மை வழிநடத்தும் எம் குருவின் திறமையால் அன்றோ செல்லக் குழந்தைகள் போல் நாம் கூடி ஆடிப்பாடிக் குதூகலிக்கின்றோம் என்றால் அவை மிகையாகாது. இக் கலைவிழாவினைத் தவிர இன்னோரன்ன மன்றங்கள், பாடசாலைகள், கோவில்கள் போன்றவற்றில் மேடை நிகழ்ச்சிகள் கொடுக்கும் பாங்கும், வீணைகளுடன் வாணிகள் போன்று பட்டுடன், மொட்டு விரிய மணம் வீசும் மல்லிகை, முல்லை கூந்தலிலே சூடி பொட்டுமிட்டு மெட்டு வழியே கைவிரலசைவில் கட்டிளம் கன்னியர் வீணையினை மீட்டிடும் வேளை! ஆஹா....... மறக்குமோ? எம் நெஞ்சம் இவற்றினை.

இவ்வாறு எம்மை வழிநடத்திவரும் எம் ஆசிரியையாகிய செல்வி நந்தினி நடராஜா அவர்கள் அன்றும், இன்றும், என்றுமே பல நல்ல இசைக் கலைஞர்களை உருவாக்கி தம் இசைப்பணியை எமக்கெல்லாம் வளர்த்திட வேண்டும் என்று மனங்குளிர வேண்டுகின்றோம். பல்வேறு இராகங்கள் தோன்றிடினும் அவையெல்லாம் ஜீவஸ்வரமான ஸரிகமபதநி என்னும் ஏழு ஸ்வரங்களுக்கு நிகராக விளங்குவது போன்று எம் "ஸப்தஸ்வராலயா" சரித்திரத்தில் இடம்பெற இவ்வாலயத்தில் குதூகலித்திடும் மாணவ மாணவியரான நாம் எல்லாம் வல்ல விக்ன விநாயகனைப் பிரார்த்தித்து இனிவரும் காலங்களில் கடல்கடந்தும் புகழ் பரப்பி இசைத் தொண்டாற்றிட வேண்டும் என்று நித்தம் பேரவாவுடன் விரும்பிடும் நாம் எல்லோரும்

"ஸப்தஸ்வராலயா"
மாணவ, மாணவியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்குமோ மாணவ நெஞ்சம்!

தங்களில் உருவாகி
எங்களை உருவாக்கினீர்
சிந்தனை தெளிவு நல்ல
சீரிய ஒழுக்கம் பண்பு
எந்நேரமும் நெஞ்சத்தில்
பணியைப் பற்றியே சிந்தனை
தன்னலம் கருதாச்சேவை
சொன்ன சொல்மாறா நேர்மை
சிறந்தவுங்கள் ஆசிரிய சேவை
சீரிய மனித பண்பு
பண்பென்ற சொல்லுக்கோர்
பதம் (செல்வி) நடராஜா ஆசிரியர் அவர்களே
மாணவர்களன்றி மற்றும்
அனைவரும் புகழக் கேட்டோம்
காலங்கள் பல சென்றாலும்
வாழ்க உங்கள் கலைச்சேவை!

கை. அகல்யா

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை விளக்கே!

கலை விளக்கே! தமிழ் விளக்கே!
கவின் விளக்கே! நீ வாழ்க!
"ஸப்தஸ்வராலயா" என்னும் இனிய
ஒளிவிளக்கே நீ வாழ்க!

இயல் வளர்ப்பாய் இசை வளர்ப்பாய்
நாட்டிய நாடகமும் வளர்ப்பாய்
பாரிலுள்ளோர் புகழ்ந்திடுவார்
வாழிய வாழியவே!

இசையெனும் அமுது வைத்தாய்
கருத்துடையார் அக மகிழ்ந்தார்
கலை என்னும் சரம் தொடுத்தாய்
கலை அறிந்தோர் மகிழ்ந்தார் கலை விளக்கே!

–ஆக்கம்–
கை. அகல்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையும் இசையும்

ஓங்காரமாய் விளங்கும் நாதம் என்பதற்கிணங்க இவ்வுலகம் உருண்டை வடிவம். இவ்வடிவம் இறைவனின் படைப்பு. இறைவனின் சக்தியே வடிவத்தின் உட்பொருள். இவ்வுலகின் அண்ட வெளியின் கண் ஓம் என்ற நாதம். நாதம் இயற்கையானது. இறைவனின் சிருஷ்டிப்பு. நாதமே இசைக்கு ஆதாரம். இதன் கண் இறையும் இசையும் தொடர்புள்ளது என்று தெளிவுபடுகின்றது.

சப்த ரிஷி மண்டலத்தில் ஏழு முனிவர்கள் இருந்து தவம் செய்யும் ஏழு மலைகள். அந்த மலைகளிலிருந்து எழுந்த முனிவர்களது ஓம் என்ற ஓசை வித்தியாசமான நாதமாய் ஒலித்தது. அந்தத் தொனி ஏழு வித்தியாசமான நிலைகளைக் கொண்டது. ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஸ்ருதியில் அமைந்த ஏழு ஸ்வரங்களாகக் கணிக்கப்பட்டன. இந்த ஏழு ஸ்வரங்களே கர்நாடக சங்கீதத்திற்கு ஆதார ஸ்வரங்கள் என்பது வரலாற்று உண்மை.

நாதமானது காற்றினாலும், தீயினாலும் உண்டாக்கப்பட்டதும் செவிக்கு இனிமையைக் கொடுப்பதுமாகும். கிருஷ்ணபகவான் ஆநிரைகளை மேய்த்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் நதிக்கரையினில் வண்டால் கோதப்பட்ட மூங்கில் அங்குமிங்கும் அசைய துவாரங்கள் வழியே காற்று ஊடுருவப்பட்டு மூங்கிலின் உட்பகுதியின் உஷ்ணமும் காற்றுடன் கலந்து உண்டான நாதம் பகவானின் காதில் ஒலிக்க அம் மூங்கிலை எடுத்து ஊதினார். அதிலிருந்தே வேய்ங்குழலிசை உண்டானது என்றும் வரலாறு கூறுகின்றது.

ஆலயங்களில் மங்கள இசை ஒலிக்கின்றது. வேத பாராயணம் நடைபெறுகின்றது. அருட்பாக்கள் பாடப்படுகின்றன. எல்லாமே இசையாகவே ஒலிக்கின்றன. இறைவன் இசைப் பிரியன் என்பதாலே தான் இராவணனின் இசையின் மகத்துவத்தால் இறைவன் வயப்பட்டு அவன் செய்த கொடிய செயலையும் மன்னித்து அருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் கைலயங்கிரியில் நந்தி மத்தளம் கொட்ட நாரதர் யாழ் மீட்ட நர்த்தனம் புரிகிறான். இறைவனின் தாண்டவம் ஐந்தொழில் அம்சங்களையும் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வகைப் பல தாண்டவங்கள் இறைவனும் சக்தியும் சேர்ந்து உலகுய்யும் வண்ணம் ஆடியுள்ளார்கள்.

சமய குரவர்கள் திருமுறைகள் பாடினார்கள் இறைவனடிப் பேரின்ப வாழ்வினைப் பெற்றிட அவன் பதம் இறைஞ்சி நின்றார்கள். சம்பந்தக் குழந்தை ஞானப்பாலூட்டிய அன்னை தந்தையை நோக்கி பாடிய போது இறைவனும் இறைவியும் குழந்தையின் இசையின்பத்தில் மூழ்கினார்கள். இறைவனின் சந்நிதானமடைய சுந்தரர் பித்தா எனப் பாடி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்.

அப்பர் சுவாமிகள் மார்பால் அரைந்து அரைந்து சென்று அவனைத் தரிசித்து புகழ்பாடி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். மாணிக்கவாசகர் தேனமுது சொட்டும் திருவாசகத்தின் மூலம் இறை புகழ்பாடி இன்பப் பேற்றையடைந்தார். அருணகிரிநாதர் முருகன் அருளால் முத்து முத்தாகத் திருப்புகழினைப் பாடி ஈற்றில் அவர் தோளில் கிளியாக இருந்து இன்னும் அவர் புகழ் பாடிக் கொண்டேயிருக்கின்றார். இறைவனடியார்கள் இறைவனை நாயகனாகவும் தங்களை நாயகியாகவும் பாவனை செய்து சிருங்காரப் பாடல்களை பாடியுள்ளார்கள். இறைவனை நினைந்து நெஞ்சுருகி இசைபாடி ஆட்கொள்ளப்பட்டார்கள்.

எனவே இவ்வகைச் சான்றுகள் இறைவனுக்கும் இசைக்குமுள்ள தொடர்பினை தெள்ளென விளக்குகின்றது. இசை இறைவனையே இசைவித்து அருள்பாலிக்க மூலப் பொருளாக விளங்குகின்றது என்பது கண்கூடு.

அகலிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

☆

☆☆

DATA MANAGEMENT SYSTEMS LTD

221/5, Dharmapala Mawatha, Colombo 7, Sri Lanka
Telephone: 699585, 695092

Fax: 699586

With Best Compliments From

✱

✱✱

The First Vegetarian Hotel In Town
Greenlands Hotel (Pvt) Ltd

8 A, Shruberry Gardens, Colombo 14.

With Best Compliments From

✣

✣✣

M/s. J. M. D. R. International Importers

No. 170, Maliban Street,
Colombo 11.

T.P: 438081

With Best Compliments From

Pettah Essence Suppliers

Suppliers to confectioners & Bakers
Importers of all kinds of Food colours
Essences, Chemicals, Groceries etc

P.O.Box 2053
18/1, Dam Street,
Colombo 12
Sri Lanka.

T'Phone: 326235, 449269, 434859
Telex: 22948 ESSEN CE
Fax: 434859

With Best Compliments From

✱

✱✱

M/S. USHA TRADERS

No. 170A, Maliban Street,
Colombo 11.

T.P: 437263

அனைவராலும் போற்றப்படும்படி முக்கியமானவனாக வாழ்வதை விட மனிதத் தன்மையுடன் வாழ்ந்து வருவது தான் முக்கியமானது. – சார்லஸ் டி சௌஜா (Charless D Souza)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கலையில் ஸ்ருதியின் பங்களிப்பு

இசைக்கலை என்பது ஸ்ருதி சம்பந்தமாக வாய்ப்பாட்டு, வீணை, வயலின், நாதஸ்வரம், புல்லாங்குழல் போன்றவை மூலமும் தாள சம்பந்தமாக மிருதங்கம், தவில், கஞ்சிரா, கடம் போன்ற வாத்தியங்களின் மூலமும் கையாளுகின்றார்கள். சங்கீத ஞான வளர்ச்சிக்கு இசைக் கருவிகள் பெரிதும் உதவியாக இருக்கின்றன. சுத்த இசை என்பதின் பெருமையை எல்லோர்க்கும் உணர்த்துவது இசைக் கருவிகள் ஆகும். சிவபெருமான் கையில் டமருகமும் (உடுக்கு), கண்ணபிரானின் கையில் குழலும், சரஸ்வதி கையில் வீணையும் இருப்பது இசைக்கருவிகளின் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது. தற்காலத்திலே மேல்நாட்டு இசைக்கருவியான ஒகன் வாத்தியத்தையும் கர்நாடக சங்கீதத்திலும் பாவித்து வருகிறார்கள்.

நரம்புக் கருவிகள், துளைக்கருவிகள், தோற்கருவிகள், கஞ்சற்கருவிகள் என நால் வகையாக இசைக்கருவிகள் பிரிக்கப்படுகின்றன. இசைக்கருவிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இசைக் கருவிகளை சுருதி கூட்டுவதற்கு வசதி கூடிய வாத்தியங்கள் எனவும், அமைப்பிலேயே சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியங்கள் எனவும், இருவகையாகப் பிரிக்கலாம். உதாரணமாக தந்தி வாத்தியங்கள் நமக்குத் தேவையான சுருதிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால் நாதஸ்வரம், புல்லாங்குழல், கடம் போன்ற வாத்தியங்களின் ஸ்ருதி அவைகளை உற்பத்தி செய்யும் காலத்திலேயே நிச்சயப்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. அவை நிச்சயப்படுத்திய சுருதிக்கு மாறாக வேறு சுருதிக்குச் சேர்த்துக்கொள்ள முடியாது. வாய்ப்பாட்டிலும் ஆண்களின் குரலுக்கும், பெண்களின் குரலுக்கும் இயற்கையிலேயே வேறுபாடு உள்ளது. ஆண்களும், பெண்களும் சேர்ந்து பாடும் நிகழ்ச்சியில் பெண்கள் மேல் சுருதியிலும், ஆண்கள் கீழ் சுருதியிலும் பாடுவதை நாம் கேட்டு உணர்ந்து இரசிக்கக் கூடியதாக இருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இவ்வகையில் சங்கீத வளர்ச்சிக்கு இசைக்கருவிகள் மிகவும் உதவி இருந்தன. இசைக்கருவிகளை ஸாஸ்த்திர முறைப்படி வகுத்தளித்தவர்கள் தென்னிந்தியர்களே என்றால் மிகையாகாது. இங்கு வேரூன்றிய இக் கர்நாடக இசைக் கலையானது கடல் கடந்த பல நாடுகளிலும் தன் புகழ் மணம் பரப்பி கலையை வளர்த்துக் கொண்டதில் சிறிதேனும் ஐயமில்லை எனலாம்.

சுபமஸ்த்

ம. கௌசல்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச் சுவை வினாடி - வினா

01. "வணக்கம்" என்று சிலர் வெறுப்பாகச் சொல்லுவதேன் ?
02. பெண்களுக்கு இந்தக் காரம் பிடிக்கும் – இது எந்தக் காரம் ?
03. வாயால் பாடுகின்ற பாட்டு எது ?
04. வாத்யக் கருவிகளில் மிருதங்கத்திற்குத் தான் மதிப்பு அதிகம். எப்படி?
05. பாம்பிற்குப் பிடித்த ஊர் எது ?
06. நீண்டதாக இருக்கும் வாத்தியக் கருவி எது ?
07. ஒரு தினத்தில் ஒன்பது இரவு வருவது எப்போது ?
08. எந்தப் பாலைக் குடிக்க முடியாது ?
09. திருமணம் செய்து கொள்ளாத ஊர் எது ?
10. ஒட்டி அணிந்து கொள்ள வேண்டிய ஆபரணம் ?
11. எந்த இசைக் குழலுக்கு காய்ச்சல் வரும் ?
12. இந்திய நாட்டைச் சேர்ந்த பெண் எந்த நாட்டியம் ஆடுவாள் ?
13. இனிமையான தட்டு எது ?
14. சமையலோடு சம்பந்தப்பட்ட கோழி எது ?
15. வீட்டிலே இருக்கும் பெண்களுக்கான கரை எது ?

–ஆக்கம் –
ச. பிரதீபா.

விடைகள் :-

(01)	நமஸ்"காரம்"	(06)	புல்longகுழல்	(11)	நாத"சுரத்"திற்கு
(02)	அலங்"காரம்"	(07)	"நவ"ராத்திரியில்	(12)	பரத நாட்டியம்
(03)	வாய்ப்"பாட்டு"	(08)	மனப்பாலை	(13)	இசைத்தட்டு
(04)	மிரு"தங்கம்"	(09)	"கன்னி"யாகுமரி	(14)	நெருப்புக் கோழி
(05)	"நாகப்" பட்டினம்	(10)	'ஒட்டி' யாணம்	(15)	அடுப்பங்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

AMEER HARDWARE STORES

Fork Lifts 2.5, 3, 6, & 10 Ton Cranes &
Boom Trucks For Hire

406, Sri Sangaraja Mawatha, Colombo 10.
Tel: 435837, 435173, 344546Fax: 446672 C/o A.H.S.
Telex: 21804, 22494 G. M. W.C/o A.H.S.
Site: 480/12, Sri Sangaraja Mw., Co. 10. Tel: 440615

With Best Compliments From

SRI MAGA MARKETING

Imports Exports

222/6, Keyzer Street,
Colombo 11.
T.P: 347733, 342719
H. L: 078 40768

With Best Compliments From

Rajsree Jewellery

446, GRANDPASS ROAD, COLOMBO 14.
T'Phone: 332446

රාජ්ශ්‍රී ජුවලරි ராஜ்ஸ்ரீ ஜுவலரி

With Best Compliments From

மாளிகாவத்தை
இந்து பொதுப்பணி மன்றம்
248/9, ஸ்ரீ சங்கராஜா மாவத்தை
கொழும்பு 10.

With Best Compliments From

Karuna Shirt Centre

Wholesale Dealers in Readymade Shirts

235/3, Olcott Mawatha,
Colombo 11
T.P: 448756

With Best Compliments From

Ganamalar Stores

102/2, Wolfendhal Street,
Colombo 13.
T.P: 436929

With Best Compliments From

G. T. S. Tradings

Wolfendhal Street,
Colombo 13.

With Best Compliments From

A. Shanmugarajah
&
Vijayakumar
Prashan Garments

No. 117/2, 4th Cross Street,
Colombo 11.

With Best Compliments From

Nemko Trading Centre

No. 24, Quarry Road,
Colombo 12.

With Best Compliments From

nanda stores

General Merchants

11, St. John's Road,
Colombo 11.
Phone: 327746, 423671

மிகவும் சுலபமான காரியத்தை முதலில் செய்வதைத் தவிர்த்து கடினமான காரியத்தை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
– (நெப்போலியன் ஹில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையின் மகத்துவம்

மாமதுரை என்னும் ஊரில் கலையரங்கம் என்னும் ஓர் கிராமம் உண்டு. இங்கு வாழ்பவர்கள் கலைகளிலேயே அதிகம் நாட்டமுடையவர்களாக இருந்தனர். இக் கிராமமே அக்காலத்துக்குரிய பல கலை ஞானிகளை உருவாக்கியது. இங்கு கல்விச் செல்வம் இல்லாதவர்கள் அநேகம். ஆனால் கலைச் செல்வம் இல்லாதவர்கள் குறைவு. இதனால் இக்கிராமத்திற்கு 'கலையரங்கம்' எனும் பெயர் வந்தது. இக்கிராமத்தில் சத்தியாகர், இலட்சுமி என்ற தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். இக்கிராமத்திலுள்ள பரம ஏழைக் குடும்பங்களில் இவர்களின் குடும்பமும் ஒன்றாகும். சத்தியாகர் ஒரு இசை மேதை. இவர்களுக்கு குழந்தைச் செல்வமே கிடையாது. இதனால் தங்களுக்கு ஒரு குழந்தை வேண்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சிவனைத் தியானித்து வந்தனர். இதன் பயனாக இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதனால் சிவபெருமானின் முதல் எழுத்தைக் கொண்டு இக்குழந்தைக்கு சிவகலையரசி என்று பெயர் சூட்டினர். சிவ அருளால் இக்குழந்தை சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தது. இக்குழந்தை பிறந்த அதே தருணமே தனவந்தர், தயாபரி என்ற செல்வந்த தம்பதிகளுக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு தாச்சாயினி என்று பெயர் சூட்டினர். இவர்கள் இருவருமே சிறந்தபடியாக வளர்ந்து வந்தார்கள். சிவகலையரசிக்கு சிறு வயது முதலே கலையில் கொள்ளைப் பிரியம். இவள் தனது பெயரைப் போல் இசைக் கலையில் அரசியாக விளங்கினாள். ஆனால், தாச்சாயினியோ இசை சத்தம் கேட்டாலே எட்டாதூரம் ஓடிவிடுவாள். இவ்வாறு இருக்கையில் இருவரும் ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்தனர்.

குரல்வளம் மிக்க சிவகலையரசியை எல்லோரும் புகழ்வர். இதானல் எப்பொழுது பார்த்தாலும் தாச்சாயினி கலையரசியைத் திட்டியபடியே இருப்பாள். ஆனால் சிவகலையரசியோ மிகுந்த பொறுமைசாலி. மறுவார்த்தை பேசாமல் இருப்பாள். இவ்வாறு நாட்கள், வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி கால தேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருண்டோடிக் கொண்டிருந்தான். இருவருக்கும் ஏறத்தாழ பதினெட்டு வயதாகியது. இந்நிலையில் கலைநிகழ்ச்சி ஒன்றிலே சிவகலையரசி தேனிலும் இனிய தனது குரலினால் எல்லோரையும் தன்வசமாக்கும் வகையில் பல பாடல்களைப் பாடினாள். இது தாச்சாயினிக்கு எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல இருந்தது. இதனால் அவளது உள்ளத்தில் ஆத்திரம் பொங்கியெழுந்தது. சிவகலையரசியைப் பற்றி பொய்ப் பிரச்சாரங்களைப் பரப்பினாள். அவளது நன்நடத்தை இதனால் பெரும் பாதிப்புற்றது. நாளடைவில் அவளை எல்லோரும் வெறுத்தனர். எல்லோரும் அவளை ஒதுக்கி வைத்தனர். இதனை அறிந்த சிவகலையரசியின் தகப்பனாரும் படுத்த படுக்கையாய் கிடந்தார். இதனையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த தாச்சாயினிக்கு இன்பக்கடல் பொங்கியது. இதனைப் பொய்யென நிரூபிப்பதற்காக பலமுறைகளைக் கையாண்டும் சிவகலையரசிக்கு ஒன்றும் பயனளிக்கவில்லை. இறுதியாகத் தான் வணங்கிய கலைவாணியே இதற்கு சாட்சிபகர்வாள் என்று உறுதியளித்தாள். மறுநாள் பட்டுப்போன ஒரு செடியை எடுத்துச் சென்று தெய்வ சந்நிதியின் முன்வைத்து "நான் பாடும்போது இச்செடி தளிர்க்கவேண்டும் அவ்வாறில்லையேல் நான் நன்னடத்தையற்றவள் என்று ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறி பாடத் தொடங்கினாள். அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் வகையில் அம்மரம் தளிர்க்கத் தொடங்கியது. அங்கு கூடியிருந்த அனைவரும் அவள் நிரபராதி என ஒப்புக் கொண்டனர். தாச்சாயினி தான் செய்த தவறுகளை ஒப்புக் கொண்டாள். பின்பு தாச்சாயினியும் சிவகலையரசியிடம் முறையாக இசையை கற்கத் தொடங்கினாள். நாளடைவில் இவர்களிருவரும் நெருங்கிய நண்பிகளாயினர். இவர்களைப் போல் நண்பிகள் அப்பாடசாலை முழுவதிலும் இருக்கவில்லை. இறுதியில் இசையினால் இரு உள்ளங்கள் இணைந்தன.

"இசையின் மகத்துவத்தை அறிந்து
அதனைப் பெருமையாக இசைப்போம்"

A. மேரி கிஷாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

Jewell Craft

22CT JEWELLERS & GEM MERCHANTS

403, Galle Road,
Wellawatte
Colombo 6.
Tel: 595338

Head Office:
Vijaya Jewellery
104, Main Street,
Maskeliya
Tel: 052-7205

With Best Compliments From

அசல் 22 கரட் பவுண் தங்க நகைகள்
இன்றைய நவீன டிசைன்களில்
எமது கைதேர்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு எமது
குளிரூட்டப்பட்ட காட்சி அறைகளில் வைக்கப்பட்டுள்ளது
இன்றே விஜயம் செய்யுங்கள்

ஸ்ரீ முத்துமீனாட்சி ஜுவலரி
(குளிரூட்டப்பட்டது)
152 B, செட்டியார் தெரு, கொழும்பு 11
தொலைபேசி- 433164, 329104

With Best Compliments From

Wimalsons Trade Centre

No. 27, Wolfendhal Street,
Colombo 13.
T.P: 433137, 332336

With Best Compliments From

jeelanees

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
No. 206, 4th Cross Street,
Colombo 11.
T'Phone: 422922

With Best Compliments From

Buhary & Co
Jewellers
154, Second Cross Street, Colombo 11, Sri Lanka.
DEALERS & EXPORTERS OF
• Gems • Antique & Modern Jewellery • Gems & Jewellery Display Material • Antique Brassware
Tel: Office: 321849/ 440732 Residence: 573704
Telex: 21974 MONTIEN CE attn: BUHARY
Cable: BURANDCO Colombo
Fax: 94-1-574001 or 94-1-445559

With Best Compliments From

Farwin & Company

Wholesale Dealers & Commission Agents
No. 216, 4th Cross Street,
Colombo 11, Sri Lanka.
Phone: 423029, 325171

With Best Compliments From

YOUR CHOICE

Wholesale & Retail Dealers in Textiles

126, 3rd Cross Street,
Colombo 11. Tel: 423870

With Best Compliments From

SUBRAMANIAM & CO.
සුබ්‍රමනියම් සහ සමාගම
சுப்பிரமணியம் அன் கோ.
Commission Agents for all
kinds of Local Produce
198, 4th Cross Street, Colombo 11.
T.P: 323844

With Best Compliments From

Karuna Mattress Centre

MATTRESSES & FURNITURES

194, Sea Beach Road,
Colombo 11.
Phone: 435767, 334024

With Best Compliments From

ICED FISH
Anitha (L.R)

COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
PETTAH, COLOMBO FORT.

பெற்றோர்கள் தான் குழந்தைகளின் நிரந்தரமான ஆசிரியர்கள் அவர்களுக்கு விடுமுறையே கிடையாது.
– (எம். கோர்க்கி M. Gorky)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி.

ஆக்கம் :- ரா. தர்ஷினி.

1 கா	2 க	3 லி	4 ☒	5	6
7	8	9 ☒	10 ☒	11	12
13	14	15 ☒	16	17 ☒	18
19	20	21	22	23	24
25 ☒	26 ☒	27 ☒	28 ஹ	29	30
31	32	33	34	35 ☒	36 ☒

இடமிருந்து வலம் ⟶

1. நிஷாதத்தின் தீவிர ஸ்வரஸ்தானம் (3)
5. சதுஸ்ர ஜாதி திரிபுடை தாளத்தின் மறுபெயர் (2)

வலமிருந்து இடம் ⟵

12. ஓர் நரம்புக் கருவி (2)
22. திரியாங்கங்களில் ஒன்று (2)
30. பரதக் கலையில் வரும் அழகிய சொற்கட்டுக்களை அழைக்கும் முறை (2)
34. ஸப்த ஸ்வரங்களில் 2ம் இடமிருப்பது (4)

மேலிருந்து கீழ் ↓

1. ஐம்பை தாள வர்ணம் அமைந்த இராகம் (4)
2. சங்கராபரணத்தின் பிரதி மத்திம இராகம் (4)
6. சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவர் (கடைசி எழுத்து இல்லை) (5)

கீழிருந்து மேல் ↑

29. மூன்று என்பதைக் குறிக்கும் வடமொழிச் சொல்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

விடைகள்:-

இ. வ.⟶ 1. காகலி. 2. ஆதி.

மே. கீ.↓ 1. காம்போஜி. 2. கல்யாணி 6. தியாகராஜ

வ. இ.⟵ 12. யாழ் 22. லகு 30. ஜதி 34. ரிஷபம்

கீ. மே.↑ 29. திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கலை நமக்கு நவின்றிடும் பண்புகள்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலே நனி சிறந்ததுவே" என்பது பாரதிதாசன் கருத்து. உயிருக்கு நிகரான இன்னொன்று கலை என்ற பாரதிதாஸன், "ஓடையிலே என் சாம்பல் ஓடும் போதும் என் கலையே சலசலத்து ஓடவேண்டும்" என்று சங்க நாதம் செய்தார். அத்தகைய கலைகளில் ஒன்றே இசைக்கலை.

"இசைக்கிளகான் கசைக்குமிளகான்" என்ற ஓர் பழமொழி உண்டு. கல் நெஞ்சம் கூட இசை கேட்டால் இளகி விடும் என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். இலங்கேஸ்வரரின் வீணை இசையைக் கேட்டு அந்த ஈஸ்வரன் கூட நெகிழ்ந்து வரம் கொடுத்ததாக இதிகாசங்கள் சான்று பகருகின்றன.

இசையினைப் பயின்று வருவதால் அன்பு, அடக்கம், பக்தி, புத்திக்கூர்மை, ஞாபகசக்தி, திருப்தி போன்ற நற்பண்பு மலர்ந்து தீய பண்பு எம் மனதை விட்டு அகன்று விடுகின்றது. மனிதனுக்கு இறைவன் அருளிய குரல் பேசுவதற்கு மட்டுமன்றி பாடுவதற்கும் அமைக்கப்பட்டுள்ளது.

மானிடப் பிறவியின் நோக்கம் இறைவனுடன் ஒன்று சேர்தல். இதை இசையினால் அடைந்தார்கள் நம்முன்னோர்கள். இறைவனே பாடுவதற்கு அடியெடுத்துக் கொடுத்தான் என்றால் அவனுக்கு இசை மேல் எவ்வளவு ஆர்வம் இருந்திருக்க வேண்டும். இவ்வற்புதமான இசையையும் தாய் போல் காப்பதாய் திட சங்கற்பம் பூண்க.

"வாழ்க இசை வாழ்க" பாரினில் என்றென்றும்"

"மாணவ குழாம் எங்கள் வழிதனைப் பாரீர்"

"கூத்தோடு இயலிசை வளர்த்திட வாரீர்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

GOLDEN CERAMIC

Importers of: Wall Tiles & Floor Tiles, Sanitaryware,
pvc Pipes, Fittings & Plumbing Fixtures

117, Messenger Street,
Colombo 12,
Sri Lanka.

Telephone: 439016, 338007
Fax: 335637

With Best Compliments From

WELL WISHER

With Best Compliments From

S. K. Nathan & Company

No. 71, 4th Cross Street,
Colombo 11.

With Best Compliments From

New Khalpaka Hotel

25, 5th Cross Street,
Colombo 11.

With Best Compliments From

SRI DEVI CHEMICALS

125, Bankshall Street,
Colombo 11.

Tel: 320314, 432443

மனதிருப்தி நமக்கு இயற்கையாக கிடைத்த செல்வம். ஆடம்பரம் செயற்கையாக உருவாக்கிக் கொண்ட பஞ்சம்
– (ஸாக்கிரட்டீஸ் Socraties)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றினிலே வரும் கீதம்

"ஏண்டி கவிதா என்ன ரெண்டு நாளா ஒரே சோம்பலா இருக்கே ஹோம்வேர்க் ஒண்ணும் இல்லையா?" என்று கேட்டாள் அம்மா. இரண்டு நாட்களாகவே மகள் கலகலப்பில்லாமல், எதையோ பறிகொடுத்தது போல இருந்ததை கவனித்தே வந்தாள். "ஹோம்வேர்க் ஒண்ணுமில்ல எனக்கு தலைவலி" என்று பதில் கூறிவிட்டு நகர்ந்தாள் கவிதா. ஏதோ அம்மாவை சமாளித்தாலும் அவள் மனதினுள் கொந்தளித்துக்கொண்டிருக்கும் போராட்டத்தை அவளால் சமாளிக்க முடியவில்லை.

அவள் மனப்போராட்டத்துக்கு காரணம்..... வருடந்தோறும் அவள் பாடசாலையில் நடக்கும் கலைவிழா அந்த வருடமும் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆண்டு விழாவுக்கு நிகழ்ச்சிகளை தயாரிப்பதில் ஆசிரியர்களும், மாணவர்களும் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். கவிதா படிப்பில் திறமைசாலி. ஆனால் அவளிடமுள்ள தயக்கமும், யாரிடமும் கலகலப்பாக பேசிப்பழகாத அவள் இயல்பும், அவள் கலைவிழா நிகழ்ச்சிகளில் மற்றவர்களைப் போல கலந்து கொள்ள முடியாமல் தடைப்படுத்தின. எதிலும் ஒட்டாமல் தானும், தன்படிப்பும் என்று ஒரே வட்டத்துக்குள் சுழலும் கவிதாவால் தனது திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. மற்ற மாணவிகள் "நான் இதைச் செய்கிறேன் அதைச் செய்கிறேன் என்று தமது திறமையை பறைசாற்றிக் கொண்டு நிகழ்ச்சிகளில் பங்களிப்பு செய்யும் போது தன்னை யாரும் கேட்கவில்லையே என்ற மனக்குறையோடு எதையாவது வாசிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வாள். இத்தனை வருடங்களும் இப்படித்தான் ஓடின. ஆனால் இந்த வருடம்?.... இது பள்ளி இறுதியாண்டு. இந்த வருடமும் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால், தன் திறமை குடத்துள் விளக்குத்தானா? இதை எண்ணி எண்ணி சோர்ந்து போனாள் கவிதா. இரண்டு நாட்களாக வீட்டில் கூட யாருடனும் பேசப்பிடிக்கவில்லை. படிக்கப்பிடிக்கவில்லை. பாடசாலைமீது கூட வெறுப்பாக இருந்தது.

கவிதா சங்கீத வகுப்பில் சேர்ந்து முறைப்படி இசையை கற்பவள்தான். கீர்த்தனைகளையும் வர்ணத்தையும் இரசித்து பாடுபவள்தான். ஆனால் அவள் சங்கீதம் கற்பவள் என்பதே வகுப்பில் யாருக்கும் தெரியாது. வருடந்தோறும் பாட்டு போட்டிகளில் சங்கீதமே கற்காத மாலதிதான் கலந்துகொண்டு பாடுவாள். பரிசையும் தட்டிக்கொள்வாள். ஆசிரியர்களும் மாலதியை விட்டால் திறமையாகப் பாடக்கூடிய வேறுயாருமே அந்த பாடசாலையில் இல்லை என்பது போல, பாட்டு என்றதும் மாலதியைத்தான் கூப்பிடுவார்கள். மாலதியின் திறமையை பாராட்டி ஆசிரியர்களும் சகமாணவிகளும் ஆர்ப்பாட்டம் செய்யும்போது, கவிதா மௌனமாக பார்த்துக் கொண்டு இருப்பாள். இவ்வளவு பாராட்டுக்கும் மாலதி தகுதியானவள் என்று கவிதாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இதை அம்மாவிடம் சொன்னால், "இங்க பாரு கவிதா! திறமையோ, அழகோ யார்கிட்ட இருந்தாலும் நாம அத பாராட்டவும் ரசிக்கவும் தெரிஞ்சுக்கணும். அதவிட்டுட்டு நாம எரிச்சல்பட்டு நம்மள தாழ்த்திக்க கூடாது. பதிலா நம்ம திறமையை வளர்த்துக்கப் பார்க்கணும்" என்பாள். அம்மா சொல்வதை ஏற்றுக்கொண்டாலும், தன் திறமையை எப்படி வெளிப்படுத்துவது? அதே நேரம் தானாகவே தன்னைப் பற்றிச் சொல்லி நிகழ்ச்சிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்கவும் தயக்கம் விடவில்லை. "வருடம் வருடம் இதே மாலதிதானா? வேறு யாரும் பாடக்கூடியவர்கள் வாருங்கள்" என்று ஆசிரியர்கள் கேட்க கூடாதா? என்று கவிதாவுக்கு அங்கலாய்ப்பு.

சுரத்தேயில்லாமல் கவிதா பாடசாலைக்கு போய்வந்து கொண்டிருந்தாள். கலைவிழா நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியோர் ஒத்திகையில் மும்முரமாக இருக்க, மற்றவர்கள் படிப்பதிலும் அரட்டையடிப்பதிலும் பொழுதைப் போக்கினர்.

அன்று பாடசாலையில் சிறு சலசலப்பு. ஆசிரியர்களும் ஏதோ கூடிப்பேசியபடி இருந்தனர். கலைவிழாவுக்கு இன்னும் ஒரு வாரமே இருந்தது. கலைவிழா நிகழ்ச்சிகளை தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபடும் ஆசிரியை வசுமதி வகுப்புக்கு வந்தபோதுதான் விஷயம் புரிந்தது. இம்முறை பாட்டு நிகழ்ச்சியில் மாலதியால் கலந்து கொள்ள முடியாதாம் குடும்ப விஷேடத்துக்கு மாலதியின் குடும்பம் இந்தியா செல்ல வேண்டியிருப்பதால் கலைவிழாவில் மாலதியால் கலந்து கொள்ளமுடியாதாம். அதனால் வேறு மாணவியை தேர்ந்தெடுக்க வேண்டுமாம். இத்தனைபேர் படிக்கும் இடத்தில் பாட ஆள் இல்லை என்றால் அது அவமானமில்லையா? இத்தனை சொல்லியும் கவிதா உட்பட யாரும் பாட முன்வரவில்லை.

அதே நேரம் அதிபரும் வகுப்புக்கு வர ஆசிரியை சங்கடத்துடன் விஷயத்தை கூறினாள். அமைதியாக கேட்ட அதிபர் ஒவ்வொருவராக வந்து தனக்கு தெரிந்த எதையாவது பாடும்படி கூறினார். அதிபர் பேச்சை தட்ட யாருக்கு தைரியம் வரும்? நீலா, கீதா, ரேவதி என்று ஒவ்வொருவராக தனக்குத் தெரிந்ததை பாடிவிட்டு வந்தார்கள். கடைசியில் கவிதாவின் முறை வந்தது. வாயைத் திறக்காதவள் என்னதான் பாடப்போகிறாள் என்று எல்லோரும் ஆவலுடன் கவிதாவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்கும் அமைதி. அந்த அமைதியிடையே ஓரிரு நிமிட தயக்கத்தின் பின், வெகு இயல்பாக

"சுட்டும் விழிச் சுடரோ! கண்ணம்மா
சூரிய சந்திரரோ

கவிதாவின் குரல் ஒலித்தது.

எல்லோர் முகத்திலும் வியப்பு. ஆசிரியை வசுமதியின் முகத்தில் பிரகாசம். இத்தனை நாளும் தவமாய் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏங்கிய சந்தர்ப்பம் அல்லவா இது! ஐந்து ஆறு வருடங்களாக பயின்ற சங்கீதத்தின் பயிற்சியும், இசையில் அவள் கொண்டிருந்த ஈடுபாடும் கலைவிழாவில் அவளை பங்குபெறச் செய்துவிட்டன.

சாதாரண கல்லை பார் போற்றும் சிற்பமாக மாற்றுகிறான் சிற்பி. அந்த சிற்பியை போன்றவர்கள்தான் ஆசிரியர்கள். படிப்பைத் தவிர ஒன்றுமே தெரியாது என்று மற்றவர்கள் எண்ணியிருந்த கவிதாவின் பாடலுக்கு கலைவிழாவுக்கு வந்தவர்கள் எல்லோரும் மெய்மறந்து இருந்தார்கள் என்றால், அந்த பெருமைக்கு கவிதாவின் குரல் நயம் மட்டுமல்ல அவளை அந்தளவுக்கு உருவாக்கிய சங்கீத ஆசிரியை பாரதியைத்தான் சாரும். கலைவிழாவின் முதல் நிகழ்ச்சியாக, கவிதாவின் இசை காற்றினிலே வரும் கீதமாய் மிதந்து கொண்டிருந்தது.

எழுதியவர்:
P. தீபவாணி பெரியசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச் சுவை

(1) ஒருவர்: இந்த தியேட்டர்ல மட்டும் கூட்டம் இல்லையே அப்படி என்ன படம் போகிறது ?

மற்றவர்: உள்ளே வாடா உதைக்கிறன்.

★★★

(2) ஒருவர்: பாக்ஷின் பக்கிரி பாட்சாவுக்கு நாக் அவுட் மன்னன் நாகுவுக்கும் குத்துச்சண்டை நடந்ததே முடிவு என்ன ?

மற்றவர்: நாக் அவுட் மன்னனின் நாக்கு – அவுட்

★★★

(3) சிறுவன் I: எங்க நீ போறாய் ?

சிறுவன் II: கிணற்றுக்கு

சிறுவன் I: அதுக்கு ஏன் கால்ல ரூலர் வைத்துக் கட்டியிருக்கிறாய்?

சிறுவன் II: ஆழமறியாது காலை விடாதே என்று பழமொழி இருக்கில்லையா?

★★★

ஆக்கம்
செல்வன் ம. அம்சராஜ்.

கண்டு பிடியுங்கள்

1. ங், கீ ( ) ம், ச, த
2. அ, கி, ண ( ) ரு, நா, ரி, ர், த
3. த, ங், க ( ) மி, ம், ரு
4. வ, ண ( ) ர்,ம்
5. கீ, த், னை ( ) ர், த
6. கீ, ல, ம் ( ) க்ஷ, த, ண
7. வா, ம் ( ) ர, தே
8. தி, ஞா, ன ( ) ச, ப, ம்,ரு, ந், த,ர்
9. ரு, தி, ப் ( ) க, பு, ழ்
10. ச, யா, ல, ஸ் ( ) ப், வ, த, ரா

ஆக்கம் – கீர்த்தனா குணாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிர் I

1. பக்கத்தில் கட்டம் போடப்பட்டிருக்கும் பெட்டிக்குள் 1–9 வரையிலான இலக்கங்களை எழுதலாம். எழுதிய எண்ணை திரும்ப எழுதக் கூடாது. முக்கியமான நிபந்தனை என்னவென்றால் எந்தப் பக்கம் கூட்டினாலும் 15 என்ற எண் வர வேண்டும்

புதிர் II

2. 8 என்னும் எண்ணை 8தரம் எழுதி அதை எப்படியாயினும் மாற்றி வைத்துக் கூட்டினால் 1000 வரும். எப்படி?

விடைகள்

புதிர் I ற்கான விடை

2	7	6
9	5	1
4	3	8

புதிர் II ற்கான விடை

888
88
8
8
8
———
1000

காமடி

1 "எதுக்காக ஆபரேஷன் தியேட்டர் வாசல்ல 'இன் - அவுட்' போர்டு வெச்சிருக்காங்க ?"

"அதுவா........ ஆபரேஷனுக்கு அப்புறம் பேஷண்ட் உயிரோட இருக்கிறாரா? இல்லையான்னு சிக்னல் தெரிஞ்சிக்கத்தான்.

2 ஆலையிலிருந்து திரும்பிய கணவன்,
"இன்னிக்கு என்ன சமையல் ?
மனைவி:- "தக்காளி ரசம்"
கணவன்:- "அடிச்சக்கை"
மனைவி:- "அடிச்சக்கை மட்டும் இப்போ இருக்கு .... ரசத்தை நான் குடிச்சிட்டேன்."

3 "நீ பாசா ?"

"புது புக்ஸ் வாங்குற செலவை நான் எங்கப்பாவுக்கு வெக்கலெ...!"

4 "மிஸ்டர் எழுந்திருங்க.... இந்த சீட் என்னுது .... நான் ஏற்கனவே என் கைக் குடையை இங்க போட்டு வைச்சேன்......"

"நல்லாயிருக்கே நியாயம் ! உங்க கைக்குடையை B.M.I.C.H. பில்டிங் மேல்கூட போட்டு வைப்பீங்க, அதுக்காக அந்த கட்டிடம் உங்களுக்கு சொந்தம் ஆயிடுமா ....? "

5 "எல்லா டெஸ்ட்டிலும் மணி மட்டும் எப்படிடா பாஸ்மார்க் வாங்குறான் ?"

"இதிலென்ன ஆச்சரியம் ? அவன் பிறந்ததே டெஸ்ட் ட்யூபில் தானே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

TASTYY

(Edible Oil, Tined fish, salt ect)

S. P. S. Seeniwasagam Chetty (p) Ltd

2nd Floor, Hideki Building,
408, Galle Road, Colombo 3, Sri Lanka
Tel: 573488, 434738,576184, 576185 Fax: 437019, 576695

With Best Compliments From

*

* *

SAMUEL, SONS & COMPANY LIMITED

Engineers, constructors, Manufacturers, Merchants
164, Messenger Street, P.OBox 46, Colombo 12, Sri Lanka
Tel: 432341-4 Fax: 448068 GRAMS: 'ECHIRON'
MARKETING & INDUSTRY SERVICES DEPT. DIRECT TEL: 421513, 430578

With Best Compliments From

V. இளங்கோ ME

M. தவபுதல்வி SJT

J. ரவி SJT

V.சந்திரன் SPS

S. கனகரட்னம் LS

5th Cross Street, Colombo 13.

With Best Compliments From

Central Agency

IMPORTERS, GOVERNMENT & CORPORATION SUPPLIERS
DEALERS IN HARDWARE & SANITARYWARE

22, Quarry Road, Colombo 12. Tel: 327870, 432450 Fax: 336735
ShowRoom
2-59-1st Floor, Majestic City, No. 10, Station Road, Colombo 4. Tel: 595728

With Best Compliments From

KRISHO MULTI TRADES (PVT) LTD.,

22-2/7, Quarry Road,
Colombo 12,
Sri Lanka.

Phone: 437305
Fax: 94-1-433159
Attn: KRISHOR

இந்த உலகத்தில் இரண்டே பேர்கள் தான் நல்லவர்கள் . அவர்களில் ஒருவன் இறந்து விட்டான். இன்னொருவன் இன்னும் பிறக்கவில்லை — (சீன நாட்டுப் பழமொழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு படுத்துக

தாலாட்டுப் பாடல்	மாதா
திவ்யநாம கீர்த்தனை	நீலாம்பரி
லயம்	சங்கராபரணம்
சுருதி	பிதா
ஸப்த்தம்	எட்டு
அஷ்டகம்	ஏழு
பிரக்ருதி	ரிகமதநி
விக்ருருதி	ஸ, ப
லலிதகலை	சங்கீதம்
சுருதி கூடியது	அருணகிரிநாதர்
அப்பியாச வரிசைப்படி	தீவிரம்
லஷ்சணகீதம்	காம்போஜி
ஜம்பை தாள வர்ணம்	முஹாரி
இனிமை தருவது	இரண்டு
இயற்கைஸ்வரம்	ஹெச்சுஸ்தாயி
திருப்புகழ்	மாயா மாளவ கௌளை
நெடில் ஸ்வரம்	சங்கீதம்

ஆக்கம்
ஜெ. தர்ஷிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெ. ரேணுகா



இடமிருந்து வலம்

(1) ஷண்முகனே என்னும் கீர்த்தனையின் இராகம்.
(5) வைதீக கான உருப்படிகளில் சிறந்தது.
(6) ஏழிசையாம் இன்னிசையைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவது (குழம்பியுள்ளது)
(8) ஜாதிகளைக் கொண்ட உறுப்பு.
(9) சதுஸ்ர ஜாதியைக் கொண்ட ஒரு தாளம்.
(12) காலையில் பாடும் மனதுக்கு சந்தோஷத்தை தரும் இராகம் இது.
(13) நடனத்தில் பிடிக்கும் ஒரு முத்திரையின் பெயர்.

மேலிருந்து கீழ்

(1) செவிப்புலனிற்கு இன்பத்தை ஊட்டும்.
(3) துத்தம் என்று தமிழில் வழங்கும் ரி என்ற ஸ்வரத்தின் பெயர்.
(4) 1011 என்னும் அங்கங்களைக் கொண்ட தாளம் இது.
(8) தாளத்திற்கு இன்னுமொரு பெயர்.
(9) ஸ்ரீ கணநாதா என்னும் கீதத்தின் இராகம்
(10) ஆ என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் இராகம்
(11) பாட்டின் ஸ்ருதியை கொண்டு செல்வது

விடைகள் :– மேலிருந்து கீழ்
1. சங்கீதம்
3. ரிஷபம்
4. துருவம்
8. லயம்
9. மலஹரி
10. ஆரபி
11. தாளம்

விடைகள் :– இடமிருந்து வலம்
1. சண்முகப்பிரியா
5. கீர்த்தனை
6. ஸ்வரம்
8. லகு
9. மட்டியம்
12. பிலஹரி
13. பதாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

COLONIAL HARDWARE STORES
Importers & General Hardware Merchants
427, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Phone: 431950, 435414, 334197,347981, 347983, 347989 Telex: 321561/ 321583 Teleco CE
Attn: Colonial Fax: 334090

With Best Compliments From

INDUSTRIAL STEEL SERVICES
GENERAL HARDWARE MERCHANTS
424, Old Moor Street,Colombo 12, Sri Lanka.
Tel: 323167, 423538
Fax No: 94-1-590095
E.Mail: Muthu @ Sri Lanka Net

With Best Compliments From

MERCANTILE
Hardware Stores
425, Old Moor Street Phone: 327624 - 448863
Colombo 12. Fax: 440304 - 437016

With Best Compliments From

JEEWADARA HEALTH SERVICE SOCIETY
Ashoka Buddhist Center
823/A, Srimawo Bandaranayake Mawatha,
Colombo 14, Tel: 01 523726
Sri Lanka. 01 526862

With Best Compliments From

THAHIRS
Importers & General Hardware Merchants
Specialised in Steam Boiler Fittings and Waterwork Materials
No. 5 & 7, Quarry Road **Tel: 421076, 432465, 324628, 449788**
Colombo 12.
Shri Lanka. **Fax: 94 -1- 449788**
Telex: 21583 TELECO CE Att: THAHIRS

With Best Compliments From

Lekha Jewellers
144/1G, Sea Street, Colombo 11
(1st Floor Opposite People's Bank)
Tel: 449647

පළමුවෙනි මහල,
144/1G, සෙට්ටි වීදිය,
කොළඹ 11.
මහජන බැංකුව ඉදිරිපිට

லேகா ஜுவலர்ஸ்
1ம் மாடி,
144/1G, செட்டியார் தெரு,
கொழும்பு 11

With Best Compliments From

FARWIN AND COMPANY
WHOLESALE DEALERS COMMISSION AGENTS
216, Fourth Cross Street, Colombo 11.
Phone: 25171

With Best Compliments From

WELL WISHER

With Best Compliments From

Quick Take Away
Devilles Contnental Style
Mixed Nooldles
Salads
Mixed Fried Rice
Rice and Curry
Indoor, Pakistan Food
Opening Time
11 a.m to 10.30 p.m.
Address: **Star Lite Restaurant**
Sri Gunananda Mw., Kotahena, Colombo 13.
Tel: 342317, 347244

With Best Compliments From

The Meihandar Press Ltd
161, Sea Street
Colombo 11.

ஒவ்வொருவனும் தன் வீட்டை சுவர்க்கத்தின் வாசல்படியாக இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
– (ஜான். ஓ. பிரியன் John O. Brien)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத்தேவி அருள்வேண்டி

வீசும் காற்று அலைமோதி
மூங்கில் மீது இசைபாடி - இயற்கை
காட்டும் வர்ண ஜாலம்
என்னைக் காதல் கொள்ள வைக்குதம்மா!
பார்க்கும் இடம் யாவும் நீக்கமற நிறைந்த இசை
இறை பாருக்கு தந்த பரிசம்மா!
இசை நாட்டம் கொண்ட மனிதன்
முகவாட்டம் இங்கு இல்லை
கலைக் கோயிலிங்கு நாங்கள்
இசை பூசை செய்து வந்தோம்
கலாதேவி உன்னைத் துதி போற்றுகின்றோம்
இசைவானில் எங்கள் கலைச்சேவை என்றும்
மிளிர்கின்ற பொன்னாய் மெருகேற வேண்டும்
சப்தஸ்வராலயாவின் சப்தங்கள் எல்லாம்
இசையாக மாறி எங்கும் ஒலிக்க வேண்டும்
கலைத் தாயே உந்தன் கருணையை வேண்டுகின்றேன்.

வனித்தா திருநாமம்

* * * * *

இசை என்னும் தேனருவி

பார் ஆளும் பாவேந்தனும்
பணிந்துன்னை ரசித்திடுவான்
கவிக்குயில் கானத்தில்
கவலைகளைத் தொலைத்திடுவார்
நற்றமிழ் நக்கீரனும்
நல்லிசை கேட்டிடுவார்
கனிந்திட்ட கன்னியவளும்
கற்சிலையாய் நின்றிடுவார்
மண் தருவார் பொன்தருவார்
மண்டியிட்டு மகிழ்ந்திடுவார்
ஈடில்லை இணையில்லை உன்னருகே
தேடிடுவோர் நெஞ்சமெல்லாம்
நிறைந்திட்ட இசையருவி

செல்வி ஸ்ரீதர்ஷனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனிய உதயம்

அன்றும் வழமைபோல் தனது வேலைகளையெல்லாம் முடித்து விட்டு தனது படுக்கையில் வந்தமர்ந்தாள் நித்யா. காலையிலிருந்து எவ்வளவு தான் பம்பரமாய் ஓடித்திரிந்து வேலை செய்தாலும் சித்தியின் ஒவ்வொரு சொற்களும் அம்புகளாய் வந்து தாக்கின. நித்யாவின் குடும்பமொன்றும் வசதியான குடும்பமல்ல. உயர்தரம் கற்றுப் பின்பு நடனக் கல்லூரியில் சேர்ந்து பரத நாட்டியம் பயின்று வந்தாள். அப்பொழுதுதான் நித்யாவின் பெற்றோர்கள் இருவரும் ஒரு விபத்தில் இறந்து போனார்கள். நித்யாவிற்கு இது பேரிடியாக இருந்தது. தாயையும் தந்தையையும் ஒரே தடவையில் பறிகொடுத்து அநாதையாக நின்றாள் நித்யா. கூடப்பிறந்தவர்கள் எவரும் இல்லாத நிலையில் நித்யாவை அவளது சித்தி தன்னுடனிருப்பதற்குச் சம்மதித்தாள். சித்தியின் வீட்டிற்கு மகிழ்ச்சியோடு வந்த நித்யாவிற்கு போகப் போகத்தான் சித்தியின் சுயரூபம் தெரிய வந்தது. வீட்டின் அனைத்து வேலைகளும் நித்யாவின் மேல் சுமத்தப்பட்டது. அது மட்டுமன்றி ஒரு வேலைக்காரியை விட மோசமாக நித்யாவை நடத்த ஆரம்பித்தாள் சித்தி. வேறுவழியின்றி அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருந்தாள் நித்யா. "ஏய் நித்யா ஏன் அந்த விளக்கு எரிஞ்சுகிட்டிருக்கு" என்ற சித்தியின் குரல்கேட்டு சுயநினைவிற்கு வந்தாள் நித்யா. விளக்கை அணைத்துவிட்டு படுத்துக்கொண்டாள்.

இருளெனும் போர்வைக்குள்ளிருந்து கதிரவன் மெல்ல எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தான். வழக்கம் போல நித்யா தனது வேலைகளில் மும்முரமாகியிருந்தாள். அன்று வெள்ளிக்கிழமை யாதலால் வேலைகளெல்லாம் முடித்துவிட்டு கோயிலுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் சித்தி கோயிலுக்குப் போகிறதும் வாறதுமாக இருக்கணும் இங்க மத்த வேலையெல்லாம் அப்படியே இருக்கும் புரியுதா என்றாள். சரி என்று தலையசைத்துவிட்டு கோயிலுக்குப் புறப்பட்டாள் நித்யா. கருவறை வாசலில் தனது தோள்களில் யாரோ கை வைத்ததை உணர்ந்த நித்யா திரும்பினாள். அங்கு அவளது பள்ளித்தோழி விஜிதா நின்றிருந்தாள். இரண்டு வருடங்களுக்குப் பிறகு தோழியைச் சந்தித்த மகிழ்ச்சியை இருவரும் பங்கிட்டுக் கொண்டனர். என்ன நித்யா நான் எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள் போட்டேன் உனக்கு நீ அதற்கொன்றும் பதில் போடவில்லையே என்றாள் விஜிதா. என்ன சொல்ற நீ. எனக்கு ஒரு கடிதமும் வந்து சேரலையே என்ற நித்யாவிற்கு அப்போது தான் புரிந்தது தனது சித்தியின் வேலைதான் இவையெல்லாம் என்று. விஜிதாவிடம் தனது சோகக் கதையைச் சொல்லி முடித்தாள் நித்யா. உனது நிலமையைப் பார்க்க எனக்கு ரொம்பக் கஷ்டமாகயிருக்கடி என விஜிதா கூறினாள். நித்யா நான் ஒன்று சொல்கிறேன். ஊர்ல எங்கப்பா ஒரு நாட்டியப் பள்ளி நடத்துகிறார். அதில் உன்னை ஒரு ஆசிரியையாக நான் சேர்த்துக்கச் சொல்கிறேன். அங்கே ஒரு விடுதிகூட இருக்கிறது. நீ அங்கேயே தங்கிக்கலாம். அப்பா உனக்குரிய ஊதியத்தைத் தருவார். நீ அதை வைத்து சுகமாக இருக்கலாம். எதற்கும் நான் நாளைக்குக் காலையில் ஊருக்குப் போறேன். நீ காலையிலேயே எங்க மாமா வீட்டிற்கு வந்து விடு என்றவள் தனது மாமாவின் விலாசத்தை நித்யாவிடம் நீட்டினாள். கண்கலங்கி நின்ற நித்யாவைப் பார்த்து விஜி சொன்னாள். ஏய் அசடு மாதிரி அழுதுகிட்டு நிற்காத, போய் தேவையானதெல்லாம் எடுத்துவை. உன்னைப் பழைய நித்யாவாகப் பார்க்க ஆசைப்படுகிறேன் என சொல்லிப்புறப்பட்டாள். சித்தியின் நினைவு வர வேகமாக வீட்டையடைந்தாள் நித்யா. வாசலிலேயே காத்திருந்தாள் சித்தி. நித்யா வந்ததும் வராததுமாக கன்னத்தில் பளார் என்று ஒரு அறைவிழுந்தது. நான் அவ்வளவு சொல்லியும் நேரம் கழிச்சு வர உனக்கு என்ன திமிர் எனத் தொடங்கி அடுக்கிக் கொண்டே போனாள் சித்தி. நித்யா எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் நாளை விடியலுக்குள் முடிக்க வேண்டிய வேலைகளில் அவளது கவனத்தைச் செலுத்தினாள். நாளை மலரப் போகும் உதயம் நித்யாவிற்கு நிச்சயம் ஒரு இனிய உதயமாக இருக்கும்.

ஸ்ரீதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை மிக்க ஸங்கீதம்

தெய்வீகமானது கீதம்!
தென்றலில் அசைவது கீதம்!
தெவிட்டாத தேனமுது கீதம்!
தெரிவையர் இசைப்பதும் கீதம்!

இசைப்பவனை பரவசப்படுத்துவது கீதம்!
இசை ரசிகனை மெய்மறக்கச் செய்வதும் கீதம்!
யோக நிலையைக் கூடவரச் செய்வதும் கீதம்!
யோக வாழ்வைத் தருவதும் கீதம்!

வாடா மலர்மாலையாகக் கோர்க்கப்பட்டது கீதம்!
வாடாமல் மனம் இருக்க இசைப்பதும் கீதம்!
சிந்தையை அடக்குவது கீதம்!
சிந்தனா சக்தியை வளர்ப்பதும் கீதம்!

தமிழைப் பரப்ப உதவுவது கீதம்!
தமிழால் பக்தியைப் பரப்புவதும் கீதம்!
தன்னலமற்ற ஒலி கீதம்!
தண்மை நிலை கொண்டதும் கீதமே!

இறைவன் புகழ் கூறுவது கீதம்!
இறைபக்தி ஒழுக உதவுவதும் கீதம்!
இறைபக்தர்களாக பரமன் அருள்பெறுவதும் கீதம்!
இறையை வெல்லும் நாதவித்தையும் கீதமே!

இராகமும் தாளமும் இணைந்தது கீதம்!
இதிகாசப் புராணங்களை விளக்குவதும் கீதம்!
இறைநாமங்களை இராகமாகக் கொண்டதும் கீதம்!
இறைநாமங்களைத் தாளமாகக் கொண்டதும் கீதமே!

பக்தியைப் பேசவும் கேட்கவும்
பக்திச்சுவை நிரம்பிய இசைப்பாடல்களை இரசிக்கவும்
பக்திப் பேரானந்த நிலையாகிய அநுபூதி நிலையை அடையவும்
பாடல்களால் தழைத்து வளர்ந்து வியாபித்திருக்கும்
"ஸப்தஸ்வராலயா" உங்களுக்கு வழங்குவதும்....
இப் பெருமைகளைப் பெற்ற சங்கீதமே!

வி. அருண்ணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

LANKA SRI STORES

Importers Wholesalers Dealers in Groceries
Oilmen Goods Plasters & All Kinds of Paper
and Stationery

19 Dam Street, Colombo 12, Sri Lanka.
Tele: 431871
Telex: 22958 KPKSON CE
Fax: 94 1 435193

With Best Compliments From

සුභානි ජුවෙල්ස්
சுபானி ஜுவல்ஸ்

Subani Jewels

(For Gems and 22ct Gold Jewellery)

96, Sea Street,
Colombo 11, Sri Lanka. T'Phone: 330053

With Best Compliments From

Shanthosh Jewellery

No. 167/B2, Sea Street,
Colombo 11.

Thiyagarajaa Achary & Son

Residence
100/9, Jampettah Street,
Colombo 13.
Tel: 341838

With Best Compliments From

Jayalalitha

Jayalalitha Jewellery Mart
65, Sea Street, Colombo 11, Sri Lanka
Telephone: 449177, 422548

With Best Compliments From

Ramanee Jewelart

ரமணி ஜுவலார்ட்
130, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

රමණී ජුවල්ආට්
130, චෙට්ටි වීදිය,
කොළඹ 11.

130, Sea Street, Colombo 11
T'Phone: 422687

With Best Compliments From

AMUTHAA TRADES

IMPORTERS & EXPORTERS

General Merchants & Commission Agents
Manufacturing H.D.P.E.Film & Bags,
C.B.E.Bulbs Agent

84, Sri Kathiresan Street, Colombo 13.
Phone: 423172

With Best Compliments From

RAMSETHU & Co.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

65, 4th Cross Street,
Colombo 11, Sri Lanka.
Phone: 323686

With Best Compliments From

R. Muthusamy
(Partner)

PEARL PHARMACY

Dispensing, Chemists, Druggists

14A, New Chetty Street,
Colombo 13. Phone: Resi 331608

With Best Compliments From

BRILLIANT INSTITUTE
136, Sangamitha Mawatha, Colombo 13.
T.Phone: 347728

Year 1 to Year 5
Year 6 Year 7
Year 8 Year 9
Year 10 Year 11
Typing & Shorthand
Organ
A/L Classes
Commerce Maths
Science Arts

Professional Classes
London Classes
Year 1 to Year 5
Year 6 Year 7
Year 8 Year 9
Year 10 Year 11
Computer Classes

With Best Compliments From

LIBERTY MOTOR STORES

488, Sri Sangaraja Mawatha,
Colombo 10, Sri Lanka.
Phone: 446454, Fax: 446454

K. D. Dharmadasa
Proprietor

SKF Distributor
Liberty Motor Stores

உங்களுடைய பிரச்சினைகளை உங்களுடன் கோவிலுக்கு எடுத்துச் செல்லுங்கள். அவைகளை அங்கேயே விட்டு விட்டு வந்து விடுங்கள்.
– (பெர்னார்ட் பென்ஸன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிர்களை விடுவித்தால் புண்ணியம் உண்டு.

புதிர் 1

1	9
7	3
7	4
3	5

ஏதாவது ஓர் அடுக்கில் உள்ள ஒரே ஓர் எண் எழுதிய துண்டை மட்டும் புத்திசாலித் தனமாய் மாற்றி வைத்து (தலைகீழாகவும்) இரண்டு அடுக்கிலும் உள்ள எண்ணின் கூட்டுத்தொகை சமமாய் இருக்கும்படி செய்ய உங்களால் முடியுமா ? ....

புதிர் 2



1 தொடக்கம் 12 வரையிலான எண்ணைப் பயன்படுத்தி குறுக்காகவும், நெடுக்காகவும் கூட்டினால், 26 வரும்படி இங்குள்ள கட்டங்களில் எழுதுங்கள் பார்க்கலாம்.

புதிர் 3



இங்கு 24 சிறு குச்சிகளைக் கொண்டு 6 சதுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கலைத்து விட்டு இதே 24 குச்சிகளைக் கொண்டு இதே அளவில் உங்களால் 9 சதுரங்களை உருவாக்க முடியுமா ?

புதிருக்கான விடைகள்.

புதிர் 1

இரண்டாம் கட்டத்தின் மேலுள்ள 9 என்னும் எண்ணை 6 ஆகத் தலைகீழாக மாற்றி வைத்தால் கூட்டுத் தொகையானது 18 ஆக இரண்டு கட்டங்களிலும் வரும்.

புதிர் 2

	1	4	
11	6	7	2
8	10	3	5
	9	12	

புதிர் 3



ஆக்கம் செய்தவர்

செல்வி. ச. பிரம்ம ராஜேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையில் உயர்ந்தவன்

ஒரு ஊரில் ரங்கசாமிக்கும் ராஜேஸ்வரிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் கண்ணன் என்று பெயர் வைத்தனர். ரங்கசாமி ஊரில் உள்ள குழந்தைகளிற்குப் பாட்டு சொல்லிக் கொடுப்பவன். மிக வறுமையான குடும்பம். ஆனால் மிகச் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். கண்ணனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். கண்ணன் சிறுவயது முதலே அப்பாவின் பாட்டைக் கேட்டு இசைமேல் ஓர் ஆர்வம் இருந்தது. அவனிற்கு வயது எட்டாகி விட்டது. அவனது அப்பா அவனை ஊரில் உள்ள ஓர் பாடசாலையிற் சேர்த்தார். அவன் சிறு வயதிலேயே இசைமேல் ஆசை, ஆர்வம், மதிப்பு இருந்ததால் அவன் பாடசாலை செல்ல மறுத்து விட்டான். இவனது முதலாவது பிறந்த நாளின் போது அவனிற்கு பரிசாகக் கொடுத்த புல்லாங்குழலை அவன் எந்நேரமும் வாசித்துக் கொண்டே இருப்பான். இவன் வயதுப் பிள்ளைகள் படிக்கையில் இவன் மட்டும் தனிமையில் இருந்து புல்லாங்குழல் வாசிப்பான். இவன் செய்கை பெற்றோரிற்கு மிகவும் கவலையாக இருந்தது. ஒரு நாள் கண்ணனின் தந்தை பாட்டுச் சொல்லிக் கொடுத்து விட்டுத் திரும்புகையில் பாம்பு கடித்து காப்பாற்ற யாரும் இல்லாததால் இறந்து போனார். இச்சோகத்தை இருவராலும் தாங்க முடியவில்லை. அவ் வீடு இருள் மயமாகக் காணப்பட்டது. கண்ணன் சிறுவதிலேயே தனிமையை நாடினான். அவனது அம்மா அவனைப் பாடசாலை சென்று படிக்கச் சொல்லியும் அவன் கேட்கவில்லை. தாய், ஊரில் உள்ள வீடுகளில் கூலிவேலை செய்ததால் தான் அவர்கள் வயிறு நிரம்பியது. இவ்வாறு சில நாள் கழித்து அவனது தாயும் நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவர்கள் சாப்பிட்டு இருநாட்களாகி விட்டன. கண்ணனிற்கு என்ன செய்தவதென்றே தெரியவில்லை. விபரம் தெரியாதவன் தாய்க்கு மருந்து வாங்கவும் வழி இல்லை. அவனால் அதற்கு மேல் பட்டினியாகவும் இருக்க முடியவில்லை. ஊரில் எல்லோரிடமும் பிச்சை எடுப்பவன் போல் உதவி கேட்டுக் கெஞ்சினான். யாரும் உதவ முன்வரவில்லை. ஊரில் உள்ள ஒரு மரத்தின் கீழ் இருந்து அழுதான். அவனது கவலையின் மருந்தாகப் புல்லாங்குழலை எடுத்து வாசித்தான். அவன் தன்னையே மறந்து வாசித்துக் கொண்டிருந்தான். ஏதோ ஞாபகத்தில் கண்ணைத் திறந்தான். அவனைச் சுற்றி ஊர் மக்கள் கூடி இருந்தனர். அவன் இசையில் எல்லோரும் மெய்மறந்து வாய் திறந்த வண்ணம் இருந்தனர். அவனது இசையை பாராட்டிக் காசு கொடுத்தனர். அவனுள் ஒரு திறமை உண்டென அவனிற்கே தெரியாது. அன்று அவர்கள் வீட்டில் சாப்பிட்டு மகிழ்ந்தார்கள். நல்ல புல்லாங்குழல் வாசிக்கும் சிறுவன் என்று இவனது புகழ் ஊர்ஊராகப் பரவியது. இதைக் கேட்டு ஓர் இசைஞானி இவனை அழைத்துச் சென்று இவனது திறமையை அறிந்து இவனிற்கு இசை முழுவதையும் கற்றுக் கொடுத்து எல்லா ஊர்களிலும் பாராட்டத் தக்கவாறு புகழின் உச்சக் கட்டத்திற்குக் கொண்டு சென்றார். அச்சிறுவயதிலேயே அவன் புகழ் அடைந்து விட்டான். அதன் பிறகு கச்சேரிகளில் இவனைப் பாடச் சொல்லிப் போட்டி போட்டுத் தேடி வந்தனர். மிக வறுமையில் வாழ்ந்தவர்கள் இப்போது மிகச் செல்வந்தராக வாழ்ந்தார்கள். அவனது அம்மாவைக் கண்கலங்காமல் காப்பாற்றி வந்தான். அவனது எதிர்காலம் நல்வகையில் அமைந்தது.

மேனகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

Pattakannu Subbiah Achary & Sons

Jewellers - Estd. 1912
S. Thiagarajah
Managing Partner

Cables: "Sovereigns" Colombo
Telephone: 323818, 422304 & 423168
Telex: 22235 - 22236 COLBE CE
Fax: (941) 433780

"Sovereign House"
102, New Chetty Street,
Colombo 13, Sri Lanka.

With Best Compliments From

POLYMATE

FREE LANKA INDUSTRIES LTD,

Colombo Agent

NEW FREE LANKA STORES (PVT) LTD
43/2, New Moor Street, Colombo 12.
Tel: 24820 - 435786

With Best Compliments From

"KAVIPREM"

N. Kavitha
No. 78, Lower Bazzar,
Punduloya

With Best Compliments From

Mr & Mrs S. Velauthapillai

With Best Compliments From

SUISSE

Jewellers

Ultra Modern Designers
and
Diamond Cutting Centre

No. 192, Sea Street, Colombo 11

Tel: 423033

பெரிய காரியங்களைச் செய்ய விரும்புகின்றவன் கஷ்டங்களை அனுபவித்தே தீர வேண்டும்.
– (ப்ளூடார்க் Plutarch)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை தந்த வாழ்வு

எந்நேரமும் குருவிகளின் கீச்சிடும் குரல் இசையும் காற்றின் நாதமும் அருவிகளின் சலசல ஓசைகளும் எப்போது பார்த்தாலும் இனிமையான இசையாலும் நிறைந்து ஆங்காங்கே நிழல்கள் நிரந்தரமாய் படுத்திருக்கும் அந்த திருவையாறு என்னும் குக்கிராமத்தில் விறகு வெட்டி பிழைத்து வந்தனர், ராகவன் பார்வதி என்னும் இரு உள்ளங்கள். இரண்டு ஆண்டுகளாக மகப்பேறு இல்லாத அந்த இருஜோடி கண்களும் ஆனந்தக் கண்ணீரில் மிதந்தன. காரணம் பார்வதி கருவுற்றிருந்தாள். இக்குழந்தைக்காக ராகவனும் பார்வதியும் ஏறி இறங்கிய கோயில்களோ எண்ணற்றன.

கலைவாணியின் அருளால் அன்று அதிகாலை நேரம் அந்த அமைதியான சூழலும் கோயில் மணிகளின் நாதமும் இயற்கை அன்னையின் தாலாட்டில் இராகவன், பார்வதிக்கு ஒரு அழகான பெண் குழந்தை பிறந்தது. மிக்க மகிழ்ச்சியாக அந்த குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்ட பெற்றோர், அக்குழந்தைக்கு மதுரவாணி என பெயரிட்டனர். ராகவன் தினமும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி விற்று வந்ததனால் அந்தக் குடும்பத்தில் உணவு பிரச்சினை மட்டும் இருக்கவில்லை. இப்படியே பல ஆண்டுகள் நகர்ந்தன.

கரிசல் காட்டுப் பருத்தி தானே, வெடிக்கையில் தாவணி வந்தது. மதுரவாணி பார்ப்பதற்கு அழகானவளாகவும், அறிவு, அடக்கம், தெய்வ பக்தி, அன்பு, பொறுமை, இவ்வாறான குணங்களிலும் சிறந்து விளங்கினாள். ஒரு நாள் காட்டுக்குச் சென்ற ராகவன் விஷப்பாம்பு கடித்து இறந்தான். அவன் இறந்ததின் பின்பு அதை எண்ணியே பார்வதியும் நோயினால் பீடிக்கப்பட்டாள். இந்த நிலையில் தினமும் விறகு வெட்ட மதுரவாணியே காட்டுக்குச் சென்றாள். காட்டில் ஒரு குருகுலம் இருப்பதை கண்டாள். மதுரவாணி அக் குருகுலத்திற்கு அருகில் சென்று கொண்டிருக்கையில் காற்றோடு கலந்து வந்த வீணை இசையை கேட்டாள். அந்த இசையை ரசித்து மெய்மறந்து கேட்கும் போது அவளுக்குள் ஒரு உற்சாகமும், ஆர்வமும் தெளிவும் பிறந்தது. தானும் இந்த இசைக்குரிய வீணையை வாசிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஆனால் ஏழைப்பெண்ணான எனக்கு அந்த பாக்கியம் கிடைக்குமா? என யோசிக்கலானாள். அவள் இப்படி தினமும் வந்து வீணை இசையை ரசித்து வரலானாள்.

இதற்கிடையில் நோயில் கிடந்த தாய் பார்வதி இறந்து போனாள். இதனால் கவலையுற்ற மதுரவாணி கத்தி அழக்கூட உறவுகள் இல்லாத நிலையில் கண்ணீர் வடிக்கலானாள். அவளின் சின்ன இதயத்தில் ஒரு இடி விழுந்தது போல் இருந்தது. பூமாதேவி சிலருக்கு தாயாகவும், எனக்கு மட்டும் பூதனையாகவும் இருக்கின்றாள். ஏன் தாய் தந்தையை என்னிடம் இருந்து பிரித்தாள் என அவள் மனதில் எத்தனையோ கேள்விகள் எழுந்தன. இந்த நிலையில் எங்கு போவது என்று தெரியாத மதுரவாணி திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்று நடக்கலானாள். வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியின்றி குருகுல வாசலிலேயே அமர்ந்து கொண்டு வீணை இசையில் மனம் லயித்தாள். நேரம் சென்று இருள் சூழ்ந்து இரவு ஆனது. அதே நேரம் தற் செயலாக அந்த குருகுலத்தை நடத்தி வரும் வயதான ஆசான் வாசலிலே அமர்ந்து கொண்டு இசையைக் கேட்டுக் கொண்டிருக்கும் மதுரவாணியைக் கண்டு அருகில் வந்தார். அவர் மதுரவாணியை நோக்கி அன்புடனும், ஆதரவுடனும், குழந்தாய்! உனக்கு வீணை வாசிப்பதில் ஆர்வமா ? எனக் கேட்டார். அதற்கு அவள் ஆம் என்னும் பதிலுடன் தலையை மட்டும் வேகமாக அசைத்து தனது ஆர்வத்தை தெரிவித்தாள். ஏழைப் பெண் என ஊகித்து அறிந்த அந்த ஆசான் மிகவும் இரக்கப்பட்டு அவளுக்கு அன்று முதல் வீணை வாசிக்க கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். நாட்கள் நகர்ந்தன மதுரவாணி அந்த ஆசான் மூலம் பல நுணுக்கங்களை வீணையில் கற்று அறிந்தாள். காலப்போக்கில் ஊரே அவளின் வீணை இசையில் லயித்தது. தினமும் கோயிலுக்குச் சென்று இறைவியான சரஸ்வதிதேவி முன்னிலையில் தனது மனக் குறைகளை வீணை மூலமே தெரிவித்து வந்தாள்.

சில நாட்களின் பின் அந்தக் குருகுலத்திற்கு ஒரு இசை மேதையான ஆசான் ஒருவர் வந்தார். வழக்கம் போல அன்றும் தனது மனக்குறைகளை தெரியப்படுத்துவதற்காக கலைவாணியின் முன்னால் வீணையை எடுத்து மடியில் வைத்து சுருதியை மீட்டத் தொடங்கினாள். மதுரவாணி அந்த குருகுலத்திற்கு வந்த இசை மேதையான ஆசான், மதுரவாணியின் வீணை இசையில் லயித்தார். அப்போது அங்கே வந்த குருகுல ஆசான், "நண்பரே ஏன் இவ்விடத்திலேயே நின்று விட்டீர்கள்?" அதற்கு அவர் இந்த இசை எங்கிருந்து வருகின்றது இதை யார் மீட்டுகிறார்கள். ஓ..... அதுவா எனது வளர்ப்பு மகளும் மாணவியுமான மதுரவாணியே என குருகுல ஆசான் பதிலளித்தார். இவ்வளவு கலைத் திறமையுடைய பிள்ளையை ஏன் இப்படியே வைத்திருக்கிறீர்கள்; அதற்கு குருகுல ஆசான் அவளுக்கு என்னையும் இந்த குருகுலத்தையும் தவிர இந்த உலகத்தில் யாரையும் தெரியாது. என கவலையோடு ஆண்டவனாய்ப் பார்த்து வழிவிட்டால் தான் என்றார். ஆண்டவன் வழிவிட்டு விட்டான். நண்பரே உமக்கு ஆட்சேபனை இல்லையென்றால் மதுரவாணியை என்னுடன் அனுப்புகிறீரா ? பெரும் சந்தோஷமடைந்த குருகுல ஆசான் அதை மதுரவாணியிடமே கேட்கலாம் எனக்கூறி மதுரவாணியிடம் அழைத்துச் சென்று விஷயத்தை அவளிடம் கூறினார்கள். மதுரவாணி அவர்களின் விருப்பப்படி தனது சம்மதத்தையும் தெரிவித்தாள். மதுரவாணிக்கு தன்னை அறியாமலேயே அவளின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. ஓடோடிச் சென்று வீணையை எடுத்து கலைவாணிக்கும் அந்த குருகுல ஆசானுக்கும் நன்றி கூறும் முகமாக சுதி மீட்டினாள்.

விடியற்காலை மூவரும் ரயில் ஏறினார்கள். மதுரவாணி மட்டுமல்ல அவளது இசைப் புலமையும் பெயரும் புகழும் ஒவ்வொரு இடங்களாக மாறிமாறிப் போய் கொண்டே இருந்தது. அதுமட்டுமல்ல பல வித்துவான்களையும் மேதைகளையும் உருவாக்க நினைத்தாள். நினைத்தது மட்டுமல்ல அவர்கள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள் !

விஜயவாணி செல்லப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A= Yellow
B= Black

C= Brown
D= Yellow

R.Rubini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழிசை

"இசையால் வசமாகா இதயமெது!
இறைவனே இசைவடிவம் எனும் போது"!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றியதாம், இசையின் சிறப்பினை சிந்தித்தறியத் திகழ்ந்தனவாம் பழந்தமிழேடுகள்

"காலம் பல கடப்பினும்
கோலம்பல பூண்டினும்
என்றும் அழியா சஞ்சீவி தானோ"!
ஏகாந்த இசை சங்கீதம்"!

ஐம்புல உணர்விற்கு இன்புணர்வூட்டுவதோடு இசையெனும் இயற்கைச் சக்தியானது பிரபஞ்ச ஐம்பூதங்களுடனும் பின்னிப் பிணைந்திருப்பது தெய்வாதீனமே!

அகிலாண்ட லோகமும் இயற்கை இசையின் வசப்படும் என்பதை "யோகநிதியான" பரஞ்சோதி முனிவர் அவர்கள்,

"தருக்களும் சலியா, முந்நீர்ச்
சலதியும் கலியா, நீண்ட
பொருப்பிழி அருவிக் காலும்
நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத
இன்னிசை அமுதம் மாந்தி
மருட்கெட அறிவன் மாட்டி
வைத்த சித்திரமே யொத்த"

என வியந்து நல்கினர். சங்கீத பூர்வீக வல்லாளர்களாம் காசிபன், நாரதர், மதங்கன், தும்புரு, கம்பனார், இராவணேஸ்வரன், அஸ்வதரன், நந்தியெம்பெருமான், ஆஞ்சநேயர், அகத்தியர், ஔவையும் கட்டிக் காத்த முத்தமிழாம் இயல், இசை, நாடகத்தின் நலத்திறமான பழந்தமிழிசையானது கண்களால் பார்க்க, செவியால் கேட்க, அறிவால் பொருளுரை ஈடுபட்டமைதலே ஒருமித்த "பாட்டு" என கூறும் பண்டைய அறுவகை இலக்கணமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் சொல்
பொதிய மால் வரைப் பொழிலென இருண்டும்
உலவா முனிவோர் உடைப்பெனச் சிவந்து
வீழ்புனல் அருவியில் வெளுத்தும் தோன்றும்
எழுத்துரு அறியா இயல்பினர் தாமும்
அறியும் மாற்றம் அனைத்தும் வெண்நிறமே"

என குறித்தது.

பழமையால் பதப்படுத்தப்பட்ட இசையின்பம் பண்ணால் பாடப்பட்டு பக்திநெறிக்கு வித்தாக அமைந்தது; இதனை

"பாவோடணைதல் இசை என்றார் பண் என்றார்
மேவார் பெருந்தான மெட்டானும் - பாவாய்
எடுத்தல் முதலா இரு நான்கும் பண்ணிப்
படுத்தமையாத பண்ணென்று பார்"

ஆதார ஏழு ஸ்வரங்களை மையமாகக் கொண்டு இயற்கை இசையினின்றும் ஜனித்ததே காந்தர்வ வேதமாகிய "சங்கீதம்" இந்த சங்கீதமானது

"இசையால் வசமாகாத உயிருண்டோ இவ்வுலகில்"

எனக் கொள்ளத்தக்க வகையில் அனைத்து ஜீவராசிகளின் விழிப்புணர்வுகளையும் தொட்டுவிட்டது. பண்பாடுவதிலிருந்து தெளிந்த தமிழையும் இசையோடு சேர்ந்து இறைவனைப் பாட வழிவகுத்தோர் நம் சைவ நாயன்மார்கள்.

பக்திக்கு வித்திட்ட கண்ணப்ப நாயனார், பதிகம் பாட முன்வைத்த காரைக்காலம்மையார் தொட்டு இறைவன் புகழ் இசையோடு போற்றப்பட்டமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சாமகானப் பிரியனான இறைவனை சம்பந்தப் பிள்ளை

"கண்காட்டு நுதலானுங் கனல் காட்டும் வகையிலும்
பெண் பிறைகாட்டுஞ் சடையானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்காட்டு மிகையானும் பயிர் காட்டும் புயலானும்
வெண்காட்டிலுறைவாம் விடை காட்டும் கொடியோனே" என்றும்

"பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்துருகி
நெக்கு நெக்காட வேண்டும் நான் போற்றி"

என "ஏழிசையாய் இசைப்பயனாய்" இறைவனை இசையொடு போற்றிப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே இசைபாடி இறைவழிகாட்ட அப்பர் சுவாமிகளும்,

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" எனவும்

"பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என அருணகிரிநாதரும்

"பாற்கடலுடன் பையத்துயின்ற பரமனடி பாடி
ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
வாயினால் பாடி மனதினால் சிந்திக்குக"
என இசை பரப்பிய ஆண்டாளும்

"இம்மை தேயரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்க் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாவதற்கு
யாதுமையுற வில்லையே"

என நமக்குத் தேவையான உணவும், உடையும், துன்பமில்லாத வாழ்வு நல்க இறைவனைப் பாடினால் கிடைக்கும் என்ற கருத்தே இதனால் புலப்படுகின்றது.

இறைவனுக்கு உவப்பான இசை என சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளிடம் பகவான் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி திருவாரூர் பதிஈசன் திருவாய் மலர்ந்தருளியது இப்படி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அர்ச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நாம்
சொற்றமிழ் பாடு"

இத்தகைய தெய்வீக இசையும் நல்குரலோடு தெளிவிசை ஞான பயிற்சியொடு, பாடுபொருள் கருத்தூன்றி, மனவொருமைப்பட சுவையொடு பாடு திறனோனே பாடக ஸ்தானன் இலக்கண நூலாம் "பஞ்சமரபு" தனில் நல்குரலின் தன்மையானது,

'பெருங்குரல் கட்டை நழுவல் விலங்கல்
ஒதுங்கி ஒதுங்கல் புரைத்தல் விருப்பில்லாக்
காருளி காக சுரமென்னும் இவ்வெட்டும்
ஆகா எனச் சொன்னார் ஆய்ந்து"

இவ்வாறு கூறப்படுகிறது. இந்த இசைக்காகவே வாழ்ந்து பாடியவர்கள் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்ஷிதர், ஸ்யாமா சாஸ்திரிகள், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர் இவர்களின் அடிச்சுவடே நம் கர்நாடக சங்கீதத்தின் கலைத்திறமைக்குச் சான்று

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையாலும் இசை சிறப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளது. இத்தெய்வீக இசையின் ஒவ்வோர் அணுத்தன்மையையும் இயற்கையுணர்வுடன் ஒப்பிட்டு அழகாக ஆழ்ந்த சிந்தனையுடன் பாடிப் பரவசமடைய; சாயுச்சிய முத்தி நிச்சயம்.

"வீணாலாதன தத்வஜ்ஞ; ஸ்ருதி சாஸ்த்ர விசாரத;
தாளஜ்ஞச் சாப்ரயேஸேன மோக்ஷ மார்க்க ஸகச்சதி!!

சந்ரபிரகாஷினி கதிரேசப்பெருமாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி நிரல்

PROGRAMME PARADE

1. பூஜை
   Pooja

2. பஜனை
   Bhajans

3. வரவேற்புரை- செல்வி இசைக்கிதர்ஷினி கனகசபாபதி
   Welcome speech -
   Miss. Esaki Tharshini Kanagasabapathi

4. வீணை - ஆரம்பப்பிரிவு மாணவிகள்
   Veena - Beginners.

5. பக்திப் பாடல்
   Devotional song

6. வீணை -மூன்றாம் ஆண்டு மாணவிகள்
   Veena - Third year Students

7. வில்லுப் பாட்டு - "காப்பியம் போற்றும் கண்ணகி"
   Villu Pattu - "Kaviyam Pottrum Kannaki"

8. வீணை - இரண்டாம் ஆண்டு மாணவிகள்
   Veena - Second year Students

9. அபிநயப் பாடல்
   Action Song

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. வீணை - மூன்றாம் ஆண்டு மாணவிகள்
Veena - Third year students.

11. நாடகம் - பஞ்சவர்ணக் கிளிகள்
Drama - Panjavarna Killigal.

இடைவேளை
Inter Mission

12. வீணை - நான்காம் ஆண்டு மாணவிகள்
Veena - Fourth year Students

13. பாட்டு - 4ம் ஆண்டு மாணவிகள்
Vocal - 4th year Students.

14. நடனம் - கோவிந்தனும் கொஞ்சும் இளம் வஞ்சிகளும்
Dance - Govindhanum Konchum Ellam Vanchigalum

15. நன்றியுரை
செல்வன் மகேந்திரன் அம்சராஜ் (தமிழ்)
செல்வி கீர்த்தனா குணாளன் (ஆங்கிலம்)
Vote of thanks
Master Mahendren Amsaraj (in Tamil)
Miss Keerthana Gunalan (in English)

16. மங்களம்
Mangalam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி நிரல்

1. பூஜை

★★★

2. பஜனை

பங்குபற்றுவோர்:-

செல்வன் மகேந்திரன் அம்சராஜ்
செல்வி பிரியவதனி சண்முகநாதன்
செல்வி தர்ஷிக்கா ஜெகன்நாதன்
செல்வி இசக்கி தர்ஷினி கனகசபாபதி
செல்வி கீர்த்தனா குணாளன்
செல்வி தர்ஷினி ராதா கிருஷ்ணன்
செல்வி சுகர்ணா பாலசுப்பிரமணியம்
செல்வி உஷாந்தினி லோகநாதன்
செல்வி வனிதா திருநாமம்
செல்வி அகல்யா கைலைமலை நாதன்

★★★

3. வரவேற்புரை

★★★

4. வீணை

ஆரம்பப் பிரிவு மாணவிகள்

பங்குபற்றுவோர்:-

செல்வி திலகவதி தம்பிமுத்து
செல்வி கஜலட்சுமி சோமசுந்தரம்
செல்வி சோனியா தியாகராஜா
செல்வி யோகேஸ்வரி முத்துக்குமாரன்
செல்வி ஆசினி முத்தையா
செல்வி கல்பனா செல்வானந்தன்
செல்வி ஸ்ரீ ஜனனி கணேஸ்வரன் குருக்கள்
செல்வி மேரி கிஷாந்தி அமிர்த நாதன்
செல்வி விஜயவாணி செல்லப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பக்திப் பாடல்

பங்குபற்றும் மாணவிகள்:-

செல்வி கார்த்திகா சிவலிங்கம்

செல்வி சுபாஷினி வேணுகோபால்

செல்வி சுபாஷினி ஆதிமூலம்

செல்வி கௌசல்யா மகேந்திர ராஜா

செல்வி லோகா சங்கரன்

செல்வி மாதுரி ஜெகன்நாதன்

செல்வி வாசுகி கோபாலகிருஷ்ணக் குருக்கள்

★★★

6. வீணை

மூன்றாம் ஆண்டு மாணவிகள்

பங்குபற்றுவோர்:-

செல்வி தர்ஷினி ராதாகிருஷ்ணன்

செல்வி கீர்த்தனா குணாளன்

செல்வி தர்ஷிக்கா ஜெகன்நாதன்

செல்வி உஷாந்தினி லோகநாதன்

செல்வி பிரதீபா காலகண்டன்

செல்வி பிரியவதனி சண்முகநாதன்

செல்வி இசக்கி தர்ஷினி கனகசபாபதி

செல்வி சுகர்ணா பாலசுப்பிரமணியம்

செல்வி பிரம்ம ராஜேஸ்வரி சங்கரன்

★★★

7. வில்லுப் பாட்டு - (காப்பியம் போற்றும் கண்ணகி)

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வீணை

இரண்டாம் ஆண்டு மாணவிகள்

பங்குபற்றுவோர்:-

செல்வி சசிகலா முத்துசாமி
செல்வி ஸ்ரீ தர்ஷினி முத்துசாமி
செல்வி சுபாஷினி ஆதிமூலம்
செல்வி ஸ்ரீதேவி குணபாலன்
செல்வி தீபவாணி பெரியசுந்தரம்
செல்வி நிரூபா லோகேஸ்வரன்
செல்வி லோகா சங்கரன்
செல்வி கௌசல்யா மகேந்திரராஜா
செல்வி அகலிகை சண்முகநாதன்
செல்வி மேனகா ரட்ணவேல்
செல்வி கார்த்திகா சிவலிங்கம்
செல்வி மாதுரி ஜெகன்நாதன்
செல்வி வாசுகி கோபாலகிருஷ்ணக் குருக்கள்

★★★

9. அபிநயப் பாடல்

பங்குபற்றுவோர்:-

செல்வி கல்பனா செல்வானந்தன்
செல்வி யாசினி முத்தையா
செல்வி ஸ்ரீ ஜனனி கணேஸ்வரன்
செல்வி ஆதித்தியா தனராஜா
செல்வி ரூபிணி ரெங்கநாதன்
செல்வி சோனியா தியாகராஜா
செல்வி கஜலஷ்மி சோமசுந்தரம்

★★★

10. வீணை

மூன்றாம் ஆண்டு மாணவிகள்

பங்குபற்றுவோர்:-

செல்வி வனிதா திருநாமம்
செல்வி தர்ஷினி வேல்சாமி
செல்வி அகல்யா கைலைமலைநாதன்
செல்வி சரோஜினி விஜயானந்தன்

★★★

11. நாடகம் - ("பஞ்சவர்ணக் கிளிகள்")

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவேளை

12. வீணை

நான்காம் ஆண்டு மாணவிகள்

பங்குபற்றுவோர்:-

செல்வி உமாசங்கரி சோமசுந்தரம்
செல்வி பிரவீணா ஜெயராஜ்
செல்வி சுகிர்தா சுப்பிரமணியம்
செல்வி ஜெயகௌரி சீத்தாராமன்
செல்வி வடிவாம்பிகை சோமசுந்தரம்
செல்வி தயாபரை நவரட்ணசிங்கம்
செல்வி ராதிகா ராமசாமி
செல்வி அனுசூயா தில்லை நடராஜா
செல்வி அம்பிகா அகஸ்தியா பிள்ளை

★★★

13. பாட்டு

நான்காம் ஆண்டு மாணவிகள்

பங்குபற்றுவோர்:-

செல்வி பிரவீணா ஜெயராஜன்
செல்வி ஜெயகௌரி சீத்தா ராமன்
செல்வி தயாபரை நரட்ணசிங்கம்
செல்வி சுகிர்தா சுப்பிரமணியம்

★★★

14. நடனம் - ("கோவிந்தனும் கொஞ்சும் இளம் வஞ்சிகளும்")

★★★

15. நன்றியுரை

★★★

16. மங்களம்

★★★

பக்கவாத்தியம்

மிருதங்கம்		செல்வன் பதஞ்சலி பத்மலதன்
கடம்	-	செல்வன் ப. ரதிரூபன்
தபேலா	-	செல்வன் வரதராஜன் முரளீதரன்
வயலின்	-	திருமதி கமலா அச்சுதன்
புல்லாங்குழல்	-	திரு க. சிவபாலரட்ணம்
ஓகன்	-	செல்வன் கொர்ணலியஸ் ஜக்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யார் தெரியுமா?

" என் பெயர் இரண்டு எழுத்தாலானது, எனக்கு ஏழு நரம்புகள் உண்டு. கலை அபிமானிகள் என்னை மிகவும் விரும்புவர். நான் இசைக் கருவிகளில் ஒரு வகையாவேன். சரஸ்வதியின் கையில் தவழுவேன். நான் யார் தெரியுமா? கண்டு பிடியுங்கள்.

விடை – வீணை

****

இயற்றியவர்களும் இயற்றிய நூல்களும்

				விடைகள்	
1.	பெரிய புராணம்	1.	திருவள்ளுவர்	1.	(2)
2.	திருப்புகழ்	2.	சேக்கிழார்	2.	(4)
3.	தேவாரம்	3.	மாணிக்கவாசகர்	3.	(5)
4.	சிவஞானபோதம்	4.	அருணகிரிநாதர்	4.	(6)
5.	திருக்குறள்	5.	திருஞானசம்பந்தர்	5.	(1)
6.	திருவாசகம்	6.	மெய்கண்டதேவர்	6.	(3)
7.	சிவப்பிரகாசம்	7.	அருணந்தி சிவாச்சாரியர்	7.	(8)
8.	இருபா இருபஃது	8.	உமாபதி சிவாச்சாரியார்	8.	(7)

****

1 ரா		ம்		2	சை	
பு					3 ம	
		4 பா		பு		
6 த		5 பூ	ம்		கா	ர்
	7			9 ம		கை
8 ச	ர		வ			10
	11 த	க		மி		
	ம்		ப்	12 ச		

மேலிருந்து கீழ்

5. இது ஒரு பாடலின் இராகம். (தலைகீழாக)
6. இசைக் கருவிகளில் ஒன்று (தலைகீழாக)
7. நாட்டியத்தின் மறுபெயர்.
9. இது இரவில் தோன்றும்.
10. நெருப்பை அணைத்தால் இதுவரும் (தலைகீழாக)

இடமிருந்து வலம்

1. நாகம் என்ற சொல்லின் "நா" என்னும் எழுத்தை அகற்றி "ரா" என்னும் எழுத்தைப் போட்டால் வரும் சொல்.
2. சிலர் இதை விரும்பிக் கேட்பர்.
3. உழவர்கள் எதிர்பார்ப்பது.
4. இந்துக்கள் இதை தெய்வமாக வணங்குவர்.
5. மணிமேகலை பிறந்த இடம்.
8. இவரை நாமகள் என அழைப்பர்.
11. சதுஸ்ர ஜதியின் சொற்கட்டு.
12. ஏழு என்பதை இப்படியும் அழைப்பர். (மாறிக்கிடக்கின்றது).

ஆக்கம்
S. பிரியவதனி

விடைகள்:– இடமிருந்து வலம்

1. ராகம். 2. இசை.
3. மழை 4. பாம்பு.
8. சரஸ்வதி 9. மங்கை
11. தகதிமி 5. பூம்புகார்
12. சப்தம்

மேலிருந்து கீழ்

5. பூபாளம் 6. தம்பூரா
7. பரதம் 9. மதி
10. புகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

NEW STAR INTERIORS (PVT) LTD

No. 184, Dutugemunu Street,
Kohuwala, Nugegoda, Sri Lanka.
Tel: 94-1-810515/ 852317 Fax: 94-1-588869/ 852317
Showroom:
112, Maya Avenue,
Colombo 06, Sri Lanka.
Tel: 94-1-588869 Fax: 94-1-810515/ 588869
* Office Chair Specialists, * Importers and dealers in plyboard, particleboard, MDF board products and Quality Furniture Components.

With Best Compliments From

PETTAH SPORTS CO.,

No. 4, Bankshall Street, (2nd Floor)
Colombo 11, Sri Lanka.
T'Phone: 423035, 436369
Fax: 344460

With Best Compliments From

KANNAN CLEARING & FORWARDING AGENCY
&
SUN FREIGHTERS

CUSTOMS HOUSE AGENT

Residence:
65/111, Crow Island
Mattakkuliya Road, Colombo 15.
Tele: 522732

Office:
Multi Plaza Complex
93-2/10, 12 Main Street,
Colombo 11.
Tele: 421967, 331491 Fax: 331491

With Best Compliments From

LANKA STORES

No 66, Nuwara Eliya Road,
Gampola.

T.P: 52639, 52424

With Best Compliments From

Latha Trading Co.

GENERAL MERCHANTS

No. 59, Dam Street, Colombo 12,
T.P: 434907

உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களுக்கு நினைத்தப்படி பேசவும் நடந்து கொள்ளவும் சுதந்திரம் இருக்காது.

– (ஸால்லஸ்ட் Sallust)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பின் உயர்வு கூறல்

ஒலியெழுந்தால்
பல்லாயிரம்
கதை சொல்லும்
இவள் விழிகள்
திருக்குறளாம்

நல்லோசை
எழுந்திடுமே
இவள் குண்டலம்
தானசைத்தாள்

பின்னலில்
சிறப்பெய்தும்
இவள் கூந்தல்
நாலடியார்

தோளிரண்டை
வலம் வருமே
காப்பிய மணி
மேகலையாம்

இவளிடையே
சுற்றி வரும்
சீவக சிந்தா
மணியே

நல்லிசையும்
வெளிவருமே
இவள் கை நிறை
வளையாபதியால்

மாமதுரை
நடுநடுங்கும்
இவள் சிலம்பில்
ஒலியெழுந்தால்

அகல்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

UTHAYA AGENCEY

General Merchants & Commission Agents for Local Produce

උදයා ඒජන්සි   உதயா ஏஜன்சி

111, 4th Cross Street
Colombo 11.

With Best Compliments From

R. ARUMUGAM

REKA TRADING COMPANY

GENERAL MERCHANTS

258, P. Keyzer Street, Tel: 334053
Colombo 11.

With Best Compliments From

"Prabu Tailoring"

நவநாகரீக சாறி ஜக்கட்டுகள்
தைப்பதற்கு நாடுங்கள்
'பிரபு ரெயிலரிங்'

A1, F15 புளுமெண்டால் தொடர்மாடி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
T.P. No. 335174

With Best Compliments From

S. THANGAM ACHARY & SONS
T. UTHAYAKUMAR
GOLD SMITH

200, Sri Kathiresan Street, Tel: 431824
Colombo 13. 332462

With Best Compliments From

ගව්රි ජුවලර්ස්   கௌரி ஜுவலர்ஸ்

Gowiri Jewellers

Gold Jewellery Cutting Buyers & Sales
Orders Undertaken

192/1, 1st Floor, Sea Street,
Colombo 11.

With Best Compliments From

T. T. NADES
(Proprietor)

UNI LANKA TRADERS

Importers & Distributors of All kinds of
Incense & Incense Sticks

9, Old Town Hall, Pettah, Colombo 11.
Phone: 439365

With Best Compliments From

V. SRIDHARAN
(Director)

Kaarunya Institute
No.2, Theatre Road,
Nawalapitiya.

Classes for:
* Year 9 (J.T.C) Year 10, O/L Commerce
* A/L Business Study Accounting
(Personal Classes)

With Best Compliments From

DEV AND SRI ENTERPRISES (PTE) LTD.

*Importers, Indenting & Commission Agents
Stockists of Hardware Etc.*

19, Abdul Jabbar Mw., Tele: 446130, 438772
Colombo 12. 3270 44
Sri Lanka. Fax: 581724

With Best Compliments From

Gowri
JEWELLERY

DEALERS IN 22KT JEWELLERY

5/29, Kotahena Super Market
Colombo 13. Phone: 338134, 343448

With Best Compliments From

DEVI TRADING COMPANY

No. 60, Fourth Cross Street,
Colombo 11.
T.P: 422034

தனக்கென நாடுவது பற்றுதல். பிறர்க்கென நல்குதல் அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையால் வசமாகா இதயம் எது

"கௌசல்யா சுப்ரயா ராம பூர்வ" என்ற ஸ்லோகம் ரேடியோ அலைவரிசை மூலம் வீட்டை முழுவதும் ஆக்கிரமித்திருந்த விடிகாலை வேளையில் ஊரே நித்ராதேவியின் ஆதிக்கத்தில் இருக்கும்போது ஒரு வீட்டில் ஒரு பெண் மட்டும் கண்விழித்திருந்தாள். அபிராமி என்ற அந்த பெண் மட்டும் சங்கீதத்தை சாதகம் பண்ணிக்கொண்டிருந்தாள்.

அபிராமி மலஹரி இராகத்தில் அமைந்த "ஸ்ரீ கணநாதா" என்ற பிள்ளையார் கீதத்தை கருத்துணர்ந்து மொட்டை மாடியிலிருந்து பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய அன்றாட வேலைகளில் இதுவும் ஒரு வழக்கமாக இருந்தது. அவள் சந்தோஷமாக பாடிக் கொண்டிருந்த வேளையிலே அவளின் அம்மா பவானி "அபி அபி" என்று கூப்பிட்டது கேட்கவில்லை. திடீரென்று சுருதியின் நாதம் நிற்கவே திரும்பிய அவள் தாயின் கோபமான பார்வையை கண்டு அஞ்சிவிட்டாள்.

"அபி உனக்கு ஒரு முறை சொன்னா புரியாது தினமும் இப்படி காலையிலேயே எழும்பி கத்திகிட்டு எங்களையும் தூங்க விடாமல் கரைச்சல் கொடுக்கிற. எல்லாம் அந்த மனுசன் கொடுக்கிற செல்லம் தான் சின்ன பொண்ணு வைஷ்ணவி ஆசையாக T. V. Game வாங்கி கேட்டதிற்கு காசு இல்லை என்று சொன்ன அப்பா பெரிய பெண் Electrical சுருதி பெட்டி வேணும் என்று கேட்ட அடுத்த நாள் வீட்டுக்கு சுருதி பெட்டி வந்துட்டு அப்படி என்ன தான் அந்த இசையிலே இருக்கோ என்று கழுத்தை ஒரு முறை நொடித்துக் கொண்டு கீழே சென்றாள்.

கீதம் பாடியபோது அபிராமிக்கு உண்டான சந்தோஷத்தை அம்மாவின் பேச்சு பறித்துவிட்டது. அவள் ஸ, ப, ஸ என்று பாடி பாட்டை முடித்துக்கொண்டு மனசோர்வுடன் அம்மாவை பின் தொடர்ந்து சென்றாள். அடுப்பங்கரையில் அம்மா இருப்பதை கண்டு அபி மெதுவாக சென்று டம்ளரில் காப்பியை ஊற்றிக் கொண்டு வெளியே வந்தாள். வீட்டு வாயிலில் இருந்த பவளமல்லிகையின் மணத்தை நுகர்ந்த படி ஒரு கல்லில் அமர்ந்து காப்பியை குடித்தாள். "அப்படி என்னதான் இந்த இசையில் இருக்கோ" என்று அம்மா கேட்டது நினைவுக்கு வர "இசையால் வசமாகா இதயம் எது" என்று இருக்கும் போது ஏன் எங்க அம்மா மட்டும் அதை வெறுக்குறாங்க. இந்த நிலை மாறும் அவளே மனதில் நினைத்து கொண்டாள்.

அதன் பின் ஸ்கூல் போகவே நேரம் சரியாக இருந்தது அபிக்கு. அம்மா செய்து வைத்த உணவை சாப்பிட்டு விட்டு அபியும், வைஷ்ணவியும் அப்பா பரமசிவத்துடன் வீட்டை விட்டு கிளம்பினார்கள். அபி 11ம் ஆண்டு படிக்கும் மாணவி, வைஷ்ணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7ம் ஆண்டு படிக்கிறாள். அக்காக்கோ இசையில் ஆர்வம் என்றால் தங்கைக்கோ விளையாட்டில் ஆர்வம். சங்கீத ஆசிரியை முதல் நாள் சொல்லி கொடுத்த உருப்படியை ஒரு பிசகும் இல்லாமல் பாவ, ராக தாளத்துடன் அழகாக அடுத்த நாள் பாடிக் காட்டுவாள். அதனால் சங்கீத ஆசிரியைக்கு அபியை எண்ணி ஒரே பெருமைதான். சரஸ்வதிதேவியின் கடாட்ஷத்தினை அபிராமி நிறைய பெற்றிருந்தாள்.

அன்று வகுப்பில் 3ம் பாடம் நடக்கும்போது ஸ்கூலின் உதவியாளன் வந்து டீச்சரிடம் ஒரு தாளை கொடுத்து விட்டு சென்றான். டீச்சர் அதை படித்து விட்டு பிள்ளைகளிடம் திரும்பினாள். பிள்ளைகளே நான் சொல்வதை கவனமாக கேளுங்க. வருகிற நவராத்திரிக்கு பள்ளியிலே கலைவிழா வைக்கப் போறாங்களாம். அதற்கு விருப்பமானவங்க நிகழ்ச்சிகளை வழங்கலாமாம். உங்களில் யாருக்காவது ஆசையாக இருந்தால் பெயர் கொடுக்கலாம் என்று ஆசிரியை சொன்னார்.

இதை கேட்டு அபிராமி சந்தோஷமடைந்து எழும்பி தன் பெயரை பாடல் பிரிவுக்கு போடும்படி கூறிவிட்டு அமர்ந்தாள். மற்ற நண்பிகள் எல்லாம் டீச்சரிடம் சொன்னது அவள் காதில் விழவில்லை. அவள் மனம் முழுவதும் நான் பாடப்போறேன். அம்மாவுக்கு தெரியாமல் பாடி பழகிய நான் இன்று எல்லோரும் நிறைந்த ஒரு சபையிலே பாடபோறேன். இதை நினைக்க எவ்வளவு சந்தோஷமாக இருக்கு என்று நினைக்கும் போதே அவள் மனதில் ஒரு பக்கத்தில் ஏதோ சிறுவலி. அதுதான் பவானி அம்மாள் பற்றியது. வீட்டில் பாடினாலே ருத்ரதாண்டவம் ஆடும் அம்மா மேடையேறிபாட சம்மதிப்பாளா ? என்பதாகும். சரி அதை பிறகு பார்ப்போம். முதல் நிகழ்ச்சிக்கு என்ன பாடுவோம் என்று சிந்தித்து கொண்டிருந்தாள். டிங், டிங் என்ற மணியோசையில் சிந்தனை கலைந்தாள்.

ஸ்கூல் விட்டு வீட்டுக்கு வரும் போது தங்கையிடம் தான் பாடப்போவதை பற்றி கூறினாள். உடனே வைஷ்ணவி "அக்கா நீ பாட்டுக்கு பாட பெயர் கொடுத்திட்ட அம்மா இதுக்கு சம்மதிப்பளா?" அதை நினைச்சாதான் பயமாக இருக்கு வைஷ்ணு. நம்ம கவிதா இருக்கிறாள் தானே அவ டான்ஸ் ஆட போகிறாள். அதற்கு அவங்க அம்மாதான் ஐடியா கொடுப்பாங்களாம். அவ எல்லார் கிட்டையும் சொல்றா வைஷ்ணு. எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. நம்ம அம்மாவும் நல்லவங்க தான் படிப்புக்கு தர ஒத்துழைப்பை இசைக்கு மட்டும் ஏன் தரமாட்டேன்கிறாங்க. "அக்கா அம்மாவுக்கு சங்கீதம் தெரியலைதானே அதனாலதான் ஒத்துழைப்பு தரலையாக்கும். அப்படி சொல்லாத வைஷ்ணு சங்கீதம் தெரியாட்டி பரவாயில்லை. நான் விடிய காலையில் எழும்பி பயிற்சி பண்ணுறபோது கொஞ்சம் ஒத்துழைக்கலாம் தானே. நீ நல்லா பாடுகிறாய் நல்ல பயிற்சி பண்ணு இப்படியெல்லாம் கூட சொல்லலாம் தானே. சரி பரவாயில்லை என்னைக்காவது ஒரு நாள் அம்மாவும் என் இசை ஆர்வத்தை அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்பாங்க . அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு வைஷ்ணு என்று சொல்லி இருவரும் வீட்டை அடைந்தனர்.

அபிராமி பல யோசனையின் பின் பிள்ளையார் கீதமும், சரஸ்வதி கீர்த்தனையையும் பாட முடிவு செய்து பயிற்சி பண்ணினாள். இவ்வாறு நாட்கள் நகர்ந்தன கலைவிழாநாளாகிய Oct 20ம் திகதிக்கு இன்னும் மூன்று தினங்கள் இருந்தது. ராத்திரி படுக்க போகுமுன் அப்பாவிடம் தான் கலைவிழாவுக்கு பாடப் போவதை பற்றி சொல்லி சம்மதம் வாங்கினாள். "அபிகுட்டி தனியாகவா பாடப்போறம்மா" என்று அப்பா கேட்க, அபி "ஆமா" என்று சொன்னாள். "அப்பா" என்ன அபி என்று அப்பா கேட்டார். அம்மா நான் பாடுவதற்கு சம்மதிப்பாளா ? அதை நினைச்சா பயமா இருக்குப்பா. நீ கவலைப்படாதம்மா நான் உங்க அம்மாகிட்ட சொல்லி சம்மதம் வாங்கி தருகிறேன். நீபோய் தூங்குமா என்று சொன்னார். அபி இப்பதாம்பா என் மனசு நல்லாருக்கு குட்நைட் அப்பா என்று சொல்லி விட்டு படுக்கைக்கு சென்றாள்.

காலையில் படுக்கையை விட்டு எழும்பு முன் பிள்ளையாரை வணங்கி இன்னைக்கு எல்லாம் நல்ல படியாக நடக்கணும் என பிரார்த்தித்து விட்டு எழுந்தாள். கலண்டர் இன்று 20ம் திகதி என்பதை நினைவு காட்டியது. அவசரமாக அவள் வேலைகளை முடித்துவிட்டு அம்மாவிடம் தான் பாடப்போவதை கூறுவதற்காக அம்மாவைத் தேடி சென்றாள். அம்மாவின் பின் குட்டி போட்ட பூனைபோல சுற்றிக்கொண்டிருந்தாள். அம்மா "என்ன பிள்ளை இன்னைக்கு நம்ம பின்னாலேயே சுற்றுகிறது என்ன விஷயம் என்று கேட்டாள். அபி பட பட வென சொல்ல வேண்டியதை சொல்லி முடித்தாள் முதலில் வர மறுத்த அம்மா பிள்ளையின் விருப்பத்தால் சரி என்று சொன்னாள். அபிராமி அம்மாவை கட்டிகொண்டு கொஞ்சினாள்.

எத்தனை மணிக்கு நிகழ்ச்சி என்று அம்மா கேட்டாள் 3.30 மணிக்கு தான் அம்மா என்று கூறிவிட்டு அபி அவள் வேலையை கவனிக்க போனாள். சாயங்காலம் 3.30 மணிக்கு மண்டபம் நிறைய ஆட்கள் குழுமி வழிந்தனர். நிகழ்ச்சி ஆரம்பமாகியது. பாட்டு, நடனம் என ஒவ்வொன்றாக நடந்தது. மண்டபத்தின் இரண்டாம் வரிசையில் அபியின் பெற்றோர் இருந்தனர். அடுத்ததாக 11ம் ஆண்டு மாணவி அபிராமியின் கானம் இடம்பெறும் என ஒலிபெருக்கியிலிருந்து ஒலித்த குரலை கேட்டு யாவரும் ஆவலோடு எதிர்பாத்து மேடையை நோக்கினர். திரைவிலகியது. அபிராமி பாவாடை தாவணி அணிந்து நிமிர்ந்த நிலையில் சம்மணமிட்டு கானம் இசைக்கத் தொடங்கினாள். "ஸ்ரீ கணநாதா" என்ற பிள்ளையார் கீதத்தை கருத்துணர்ந்து பாடினாள். அவளின் இசையில் மயங்கினர் சபையினர். பலத்த கரகோஷம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக அவள் கீர்த்தனை பாட ஆரம்பித்தாள். அதை கேட்டு அரங்கிலிருந்தவர்களிடையே ஒரே சலசலப்பு ஏற்பட்டது.

திரும்பிய பவானி அம்மாவின் காதில் இரு பெண்மணிகள் பேச்சுவார்த்தை கேட்டது. அந்தப் பெண்ணை பாரு எவ்வளவு அழகா பாடுது. சரஸ்வதிதேவியே வந்து பாடுறமாதிரியில்லை. அவங்க அம்மா நல்ல ஒத்துழைப்பு கொடுப்பாங்க போல அது தான் அந்த பொண்ணு இப்படிபாடுது. அவங்க அம்மாவுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். அவங்க புண்ணியம் பண்ணியிருக்கணும் இப்படி ஒரு பொண்ணு கிடைக்க என்று அப் பெண்மணி கூறுவதை கேட்டு அவள் கண் கலங்கியது. அம்மா "அக்காவைப் பாருங்க எவ்வளவு அழகா பாடினா" என்று சொன்ன வைஷ்ணயின் குரல் கேட்டு அவள் திரும்பினாள்.

நான், என் பொண்ணு இசையை படிக்க என்ன செய்தேன் ஒன்னுமே செய்யவில்லையே. இந்த நவராத்திரி நாளிலிலேயே அவளை இசை படிப்பதற்கு என்னாலே முடிந்த அளவுக்கு உதவி செய்யபோகிறேன். அவளை முதன்முதலாக ஒரு நல்ல குருவிடம் ஒப்படைக்கப் போகிறேன். அதுதான் நான் இசைத் தாய்க்கு செய்கிற பணி என்று நினைத்து கொண்டாள். அவளாலேயே அவள் காதை நம்பமுடியா வண்ணம் கரகோஷத்தின் சத்தம் அரங்கை பிளந்தது.

அப்பொழுது அவள் கையில் வந்து விழுந்த கண்ணீர் துளியை கண்டு அதிசயித்தாள். நான் அழுதிருக்கின்றேன் இந்த இசை என்னை இளக வைத்துள்ளது. "என்னங்க" "என்னங்க" நம்ம பொண்ணு எவ்ளோ அழகா பாடினா. அவளை முதல் வேலையாக ஒரு நல்ல குருவிடம் ஒப்படைக்கப் போகிறேன் என்று சொல்லி தன் மகள் மேடையிலிருந்து இறங்கி வருவதைக் கண்டு ஓடிச்சென்று கட்டியணைத்து உச்சிமுகர்ந்தாள். அம்மா என்ன இது என்று கேட்ட மகளிடம் பதில் கூற முடியாது அவளின் தொண்டையை சந்தோஷம் அடைத்து விட்டது.

அடுத்த நாள் காலையிலே பவானி அம்மா எழும்பினாள். படுக்கையில் புரண்டு கொண்டிருந்த அபியை எழுப்பினாள். சாதகம் பண்ண நேரமாகலியா ? அபி சீக்கிரம் எழும்பு, என்று கூறிய அம்மாவை சந்தோஷத்தோடு அபிராமி பார்த்தாள். அபி நான் சீக்கிரம் போய் சமையலை முடித்துவிட்டு உனக்கு ஒரு நல்ல குருவை தேட போகிறேன். அவரிடம் உன்னை ஒப்படைக்கப்போகிறேன் என்று சொன்ன அம்மாவை பார்த்து மனதிலே நினைத்தாள். நான் நம்பிய இறைவன் என் அம்மாவை மாற்றி விட்டான். "இசையால் வசமாகா இதயம் எது" எனும் கருத்தை அவள் மனம் உணர்த்தியது.

உமாசங்கரி &
வடிவாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

THANUJA

ICED FISH MERCHANTS

Colombo Central Super Market
Colombo 11.
No. 76, Vivekananda Hill, Colombo 13.
T. P: 078-47485, 334301

With Best Compliments From

Ramanee Jewelart

ரமணி ஜுவலார்ட்
130, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

රමණී ජුවල්ආට්
130. හෙට්ටි වීදිය.
කොළඹ 11.

130, Sea Street, Colombo 11
T'Phone: 422687

With Best Compliments From

MALA TEX

55/B/6 3rd Cross Street,
Colombo 11.

With Best Compliments From

Cloth Centre

151, Keyzer Street,
Colombo 11.
Tel: 42349, 448056

With Best Compliments From

DEITA METLICS

Importers Stockists of quality
Engineering Tools General Hardware Bolt & Nuts

401, Sri Sangaraja Mawatha,
Colombo 10.
T.P: 331369, 434525

With Best Compliments

PRINT LOGAN

70, Ginthupity Street,
Colombo 13.

With Best Compliments From

DURGA OIL STORES

225, Central Road,
Colombo 12.

With Best Compliments From

FONSEKA OIL STORES

28, Wolfendhal Street,
Colombo 13.
T.P: 446436, 330261

With Best Compliments From

METRO SPORTS

97, Main Street, Colombo 11, Sri Lanka
T'Phone: 324056, 334467
Cable: "COLOMBO"
Fax: 336657

With Best Compliments From

VELMURUGAN STORES

General Merchants & Commission Agents

No. 26, St. John's Road, Colombo 11.
T'Phone: 430572 - 337177

அனைத்தையும் தன்னகத்து அணைத்துக் கொள்ள வல்லது அன்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ.... என் இனிய வீணையே!

மீட்டும் விரல்களோடு - நீ
நேசம் புரிகையில்
ஸ்வரஜாலம் ஸ்வரநாதம் படிக்கும்
காவிய ஜனனம்!

தந்திகள் மீது
தத்தும் பிள்ளைகளாய் - விரல்கள்
திருக்குறளை ஒரு தரம் மழலையாய்த் திருப்பும்
இசைக் கோயிலில் உன்னதம் படைக்க
உன் ஒரு நாதம் போதும்!

ஓ என் இனிய வீணையே
உனது ஏழு ஸ்வரங்களும் வீணையில் சங்கமித்து
கானமழையாய் பொங்கியெழும் கடல் போல் - உன்
தத்தும் இனிய நாதம் - மலரில்
தேன்குடிக்கும் வண்டுகள் போல் ரீங்காரமாய் செவியில் கேட்கும்!

நீ பிரபஞ்சத்தின் திசைகளைத் தேடி
ஸ்வரமெழுப்பும் போது உனது உடலே
கலைமகள் கையில் வீற்றிருக்க - நீ
புவியையே உனக்குள் வயப்பட வைக்கின்றாயே
இது நியாயமா?

கிருஷ்ணகுமாரி முத்தையா

* * * * *

கலைமகளின் கைப்பொருள்

உயிர்களின் உறவுக்கு
நரம்புகள்
ஒலிகளின் நாதத்திற்கு
நரம்புகள்
விரல்களின் ஓட்டத்தில்
நாதத்தின் விழுதுகள்!
நரம்புகளின் நளினத்தால்
நல் இராகங்களின்
விம்பங்கள்

நரம்புகளின் ஆட்சியில்
இந்த அகிலத்தின் கீதங்கள்
சுழல்கின்ற பாரில் இது
சுகங்களின் சுமைகள்
என்றே
கலைமகள் உன்னை
கரங்களிலே ஏந்தினாளோ?

வனித்தா திருநாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

◆
◆ ◆

E. Ramakrishnan

27/23, Madampitiya Road,
Modera.

With Best Compliments From

SWARNATEX (PVT) LTD

Manufacturers of Synthatic & Cotton Textiles
Wholesale & Retail Dealers & Importers & Exporters

85A 3rd Cross Street,
Colombo 11. Tel: 438641
&
176, keyzer Street, Colombo 11.
Tel: 438149 & 422810

With Best Compliments From

SARAVAN'S MUSIC CORNER

340 1/4, 1st Floor, Trust Complents
Sea Street, Colombo 11.
T.P: 330286

With Best Compliments From

Janatha Garment Manufacturers Ltd
Union Strand Ltd.
Cliftex Industries Ltd

Moor Plaza,
17, Vivekananda Hill, Colombo 13.
Cables:
"LUCKY STER"
"UNISTRAND"
"FASTCOLOUR"

Factory:
18, Weliamuna Road, Wattala.
Telex: 21467 TX BURO CE
21476 LUCKY STAR
T'Phone: 435711, 320458, 530223
Fax: 589055, 448903

With Best Compliments From

ஸ்ரீ கிருஷ்ண ஜெயம்

தமிழகத்தின் ஆஸ்தான வீணை வித்துவானும், "திருப்பதி" தேவஸ்தானத்து கலைஞருமான பிரபல வீணை வித்துவான் "வீணை சிட்டி பாபு" அவர்கள் 9. 2. 96 அன்று இறைவனடி சேர்ந்தமை வீணை பயிலும் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா இசைக்கலையில் சங்கமித்து இறைவனடி சேர "ஸப்தஸ்வராலயா" சார்பில் எமது அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவிகள்
செல்வி மதிவதனி பாலசுப்ரமணியம்
செல்வி ஜெயவதனி பாலசுப்ரமணியம்

குழந்தைகளும் முட்டாள்களும் பொய் சொல்ல மாட்டார்கள்.

– (ஜான் ஹேவுட் John Hegwood)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாடி வினா ?

1. "தையல்" என்னும் வாக்கியம் குறிக்கும் மாதம் எது ?
2. "இராத்திரி" என்று முடிவடைகின்ற இரு விஷேச புண்ணிய காலங்களுண்டு. அவை என்ன ?
3. "அம்மா" என்னும் முதற்சொற்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பதும், ஒரு மகன், தன் தந்தை இறந்திருந்தால் அவ-னன் செய்ய வேண்டியதொரு நாளாக குறிப்பாக, ஆடியில் விஷேஷமாகக் கூறப்படுகின்ற அந் நாள் எது ?
4. "மாசி மாதம்" என்ற சொல் ஒரு உணவு வகையை முன்னடியாகக் கொண்டுள்ளது. அது என்ன ?
5. "சித்திரை" மாதம் ஒரு உறவையும் குறிக்கும். அந்த உறவு என்ன?
6. "கை" என்கின்ற சொல் முடிவில் வரும் மாதப் பெயர் என்ன ?

*****

வினாக்களுக்கு விடை பகருங்கள்

1. தந்தி வாத்தியங்கள் சில கூறுக ?
2. நவராத்திரி எந்த மாதத்தில் நடைபெறும்?
3. நவராத்திரி விழாவில் கடைசி மூன்று தினங்களில் வழிபடும் தெய்வங்கள் எவை ?
4. தோல் வாத்தியங்கள் சில கூறுக ?
5. துளைக் கருவிகள் சில தருக ?

வினாடி வினா ?
விடைகள்

1. "தை" மாதம்
2. சிவராத்திரி, நவராத்திரி
3. அமாவாசை
4. மாசி
5. சித்தி
6. கார்த்திகை

வினாக்களுக்குரிய விடைகள்

1. வீணை, வயலின், யாழ், தம்பூரா, கோட்டு வாத்தியம்
2. புரட்டாதி
3. சரஸ்வதி
4. மிருதங்கம், மத்தளம், தபேலா, தவில், கெஞ்சிரா, டோலக்
5. நாதஸ்வரம், முகவீணை, புல்லாங்குழல்

ஆக்கம்
லோகா. சங்கரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஒரு முகாரி ராகம்

விடிகாலைப் பொழுது சூரியன் தன் ஆதிக்கத்தை மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டிருக்க பூஞ்சோலைகளாலும், மின் விளக்குகள் போன்று காய்த்துக் குலுங்கும் பழ மரங்களினாலும், சூழப்பட்ட அந்த வீட்டில் கற்பூர வாசனையும் சாம்பிராணியின் நறுமணமும் மூக்கைத் துளைத்தது. ஒலி நாடாவின் மூலம் சுப்ர பாதம் ஒலித்துக் கொண்டிருக்க கை, கால்களை உதறி சோம்பல் முறித்த வண்ணம் எழுந்த காதம்பரி மெல்ல எழுந்து வந்து ஜன்னல் ஓரமாக நின்று அந்த விடிகாலைப் பொழுதை ரசிக்கலானாள்.

சுற்றுச் சுவரின் மேல் பளிச்சென்ற சிவப்பில் கொத்துக் கொத்தாய் பல வர்ணங்களில் மலர்ந்திருந்த போகன்விலாவும், அந்தக் காகிதப் பூவுக்கு நேர் மாறாய் உள்ளே வந்ததுமே கும்மென்று மணம் பரப்பும் மல்லிகை சாதிகளும், தினம் பார்ப்பவை என்றாலும் புண்பட்ட அந்த இதயத்துக்கு அவை மகிழ்ச்சியையே அளித்தன.

"டொக், டொக்," என்று தன் அறைக் கதவை தட்டும் ஓசை கேட்டதும் போய் கதவைத் திறக்க, தனக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் தன்னை வளர்த்து ஆளாக்கி உலகம் போற்றும் ஓர் இசைமேதையாக்கிய அந்த ஆயா கையில் காப்பியும், தினப்பத்திரிக்கையுமாக நின்று கொண்டிருந்தார்கள். "என்னம்மா பெண் பிள்ளை இவ்வளவு நேரம் தூங்கக் கூடாதுனு எத்தனை தடவை சொல்லியாச்சு. கேற்கவே மாட்டேன்கிறாய்" என்று அதட்டலாகக் கூற அவள் கன்னத்தில் கிள்ளி "போகப் போக எல்லாம் சரியிடும் ஆயா" என்ற கூறி ஒரு சின்னப் புன்முறுவலுடன் அன்றைய தினப் பத்திரிக்கையை காப்பியை ருசித்துப் பருகியவாறு புரட்டிப்பார்த்தவள் அதில் விசேஷமான செய்திகள் எதுவும் இல்லை என்று அறிந்ததும் மடித்து மேஜையின் மேல் வைத்து விட்டு குளியலறையை நோக்கி அவசர அவரசமாக சென்றாள்.

சில மணி நேரங்களுக்குள் தன் காலைக்கடன் அனைத்தையும் முடித்தவள் பூஜை அறைக்கு சென்று காலைப் பிரார்த்தனையை முடித்துக்கொண்டாள். பின் தான் காலையில் எழுந்ததும் பாராயணம் செய்யக் கஷ்டப்படும் வர்ணங்கள் அத்தனையையும் பயிற்சி செய்தாள். இராகசஞ்ஞாரங்கள் நிறைந்த வர்ண ஆலாபனையை முடித்துக் கொண்டவள். தன் வீணையை மிகவும் பக்தியுடன் எடுத்தவள் அதன் நரம்புகளை நீட்டி கலைந்து போன சுருதியை சரி செய்தாள்.

அவளின் வாழ்க்கையும் கலைந்து போன கோலங்களே. தன் வீணை மட்டும் ஸ்ருதி கலையாமல் இருக்குமா என்ன ? காலைப்பொழுதில் வாசிக்கப்படும் பூபாள ராகத்தில் உள்ளக் கீர்த்தனைகள் சிலவற்றை அசைவுகளோடும் கமகங்களோடும் வாசித்தாள் காதம்பரி. இடைவிடாத கோவில் மணியோசையில் காற்றோ சங்கீத மயமாகி விடுகிறது. இந்த வீட்டிலோ ஆயாவிலிருந்து பக்கத்து வீட்டார் வரை எல்லோரும் காதம்பரி தன் இசைப்பாரயண அறைக்குச் சென்றால் தன்னை மறந்து அந்த நாத ஒலியில் மயங்கி விடுவார்கள். அறிவற்ற ஜந்துக்களையும், அசையாப் பொருள்களையும் கூட இசை தன் வசப்படுத்திக் கொள்ளும் போது ஆறறிவு படைத்த மனிதன் மயங்காமலா இருப்பான்.

காதம்பரி தன் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியில் வரும் போது அமர்ந்திருந்த வீட்டு வேலைக்காரர்கள் அனைவரும் கலைந்து போவதைக் கண்ட காதம்பரிக்கு சிரிப்பாகவும், சந்தோஷமாகவும் இருந்தது. தன் வாழ்க்கை சந்தோஷமற்று இருந்தாலும் தான் கற்ற இசையால் இந்த வையகமே சந்தோஷப்படும் அளவுக்கு தன்னை பெற்றோர் இல்லாமல் வளர்த்து ஆளாக்கிய அந்த ஆயாவிற்கும் தனக்கு இசை ஞானத்தை வரப்பிரசாதமாக குறைவில்லாமல் அளித்த அந்த தெய்வத்துக்கும் மனதுக்குள் நன்றி சொல்லிக் கொண்டாள். தினமும் அவள் அவளின் வாழ்க்கை அடுத்தவர்களுக்காக அர்ப்பணித்தாலேவொழிய அவளுக்காக அல்ல. ஆனால் ஒரு ஆத்ம திருப்தியை மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளால் அனுபவிக்க முடிந்ததையே பெரிய விஷயமாகக் கருதினாள்.

காலை உணவுக்காக ஆயா தனக்காக காத்திருப்பாள் என்ற உணர்வு வரவும் மெல்ல சாப்பாட்டு மேசைக்கு சென்று அமர்ந்தாள். சாப்பிட்டுக் கொண்டே காலைப் பொங்கும் பூம்புனலில் ஒலித்துக்கொண்டிருக்கும் பாடல்களை ரசித்தப்படியே காலை உணவை ருசித்தவளின் கண்களில் இருந்து நீர் மல்குவதைக் கண்ட ஆயா திகைப்புற்றாள். பின் காரணம் தானாகவே புரிந்தது ஆயாவுக்கு. வானொலியில் ஒலிஅலைகளாக காற்றோடு கலந்து வந்த "மறக்கமுடியவில்லை, மறக்கமுடியவில்லை" என்ற பாடல் ஒலித்ததுவே காதம்பரியின் கண்களில் கண்ணீர் மல்குவதற்கு காரணமாயிற்று. இந்தப் பாடல் எங்கு எப்போ ஒலித்தாலும் காதம்பரியின் மனம் பழைய நினைவுகளை அசைப் போட ஆரம்பிக்கும்.

காதம்பரிக்கு எட்டு வயதளவில் தன் பெற்றோர் இருவருமே பஸ் விபத்தொல இறந்து போனார்கள். இந்த நேரத்தில் காதம்பரியின் உறவினர்கள் யாரும் காதம்பரியை வளர்க்க முன்வரவில்லை. ஏனெனில் காதம்பரி பெண் குழந்தையாகப் பிறந்து விட்டதால். அன்று யாருமற்ற அநாதையாய் இருந்த காதம்பரியை தன் வீட்டில் இருந்து, தான் இன்று தெய்வமாக மதிக்கும் ஆயா தான் எடுத்து வளர்த்தாள். அதே வீட்டில் இருந்து தன் சந்தோஷங்கள் அனைத்தையும், ஏன் மண வாழ்க்கையைக் கூட துறந்து காதம்பரிக்காக தன் வாழ்வையே தியாகம் செய்தாள். மிகவும் சிரமங்களுக்கு அப்பால் அவளை ஒரு இசை மேதையாக்கினாள். காதம்பரியின் பெற்றோர் இசையில் மிகவும் நாட்டம் கொண்டவர்கள். அதே போல் காதம்பரியும் சிறு வயதில் இருந்தே இசையில் அதிக நாட்டம் காட்டி மிகவும் சிரத்தையுடன் ஆயா தனக்காக படும் கஷ்டங்களை உணர்ந்ததும், நன்றாக கற்று பெரும் இசை மேதையாகினாள்.

நிறைய கலை நிகழ்ச்சிகளை நடத்தி மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தினாள். ஆனால் காதம்பரியின் மனதுக்கு மட்டும் சந்தோஷமென்ற வார்த்தைக்கே அர்த்தமில்லாமல் போய் விட்டது. எட்டு வயதில் எப்படி தன் தாய் தந்தையை இழந்து துயரப்பட்டாலோ அதே போல் தன் கலையை ரசித்து தன்னைப் புரிந்து கொண்ட ஆயாவுக்கு அடுத்தபடியாக தான் உயிருக்கு உயிராக நேசித்த ஒரு ஜீவனையும் இழந்தாள்.

காதம்பரி எதிர்கால வாழ்க்கையைப் பற்றி நிறைந்த கனவுகளோடும், கற்பனைகளோடும் வாழ்ந்தாள். ஆயாவுடன் தினமும் எதிர்கால வாழ்க்கையை எப்படி திட்டமிட வேண்டும் என்றெல்லாம் தினந்தோறும் கதைப்பாள். அதே போல் ஹரிகரனும் அளவுக்கு அதிகமான அன்பை அவள் மேல் காட்டினான். ஹரிகரன் பரதம் கற்று, அதில் பட்டமும் பெற்றவன். எல்லாவிதத்திலும் காதம்பரிக்கு பொருத்தமானவனே. இசையும், நாட்டியமும் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாதபடி இருந்தால் அதைப் பார்ப்பவனையும், கேட்பவனையும் அதை விட்டுப் பிரிக்க முடியாது. அதே போல் காதம்பரியும் ஹரிகரனும் இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்கள். அப்போ அவர்கள் மட்டும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவா போகிறார்கள். பெற்றோரால் இழந்த சந்தோஷத்தை ஹரிகரன் பூர்த்தி செய்தான். ஆனால் காதம்பரியோ சந்தோஷம் என்ற வார்த்தைக்கு கொடுப்பனை அற்றவள். காதம்பரியின் கழுத்தில் மாங்கல்யம் ஏற எண்ணி மூன்று நாட்கள் இருக்க காதம்பரி தன் பெற்றோரை இழந்தது போல் தன் ஹரிகரனையும் விபத்தில் இழந்தாள். அதன் பின் பித்துப் பிடித்தவள் போல் இருந்த காதம்பரியின் வாழ்க்கை மீண்டும் சீராக்கப்பட்டது என்றால் அதற்குக் காரணம் தான் கற்ற இந்த கலையே என்பதில் ஐயமில்லை. இசைக்காகவே தன்னையும் தன் வாழ்க்கையும் அர்பணித்துக் கொண்டு உலகத்துக்கு இசை தொண்டாற்றினாள்.

சுகமான சங்கீதம் நெஞ்சுக்கு நிம்மதி. காதம்பரியின் வாழ்க்கையோ முகாரி ராகத்தையே தன் வசமாக்கிக் கொண்டது.

மஞ்சுளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

POLYPACK SECCO LTD

4th Floor, 108, W.A.D.Ramanayaka Mawatha,
Colombo 02.
T.P: 330128/9

With Best Compliments From

S. SRI THARAN
(Proprietor)

SRUWAN

IMPORTERS, EXPORTERS
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Hot Line: 078-42581
Fax: 447624

60/2, Mayfield Rd,
Colombo 13.

With Best Compliments From

S. Surendrakumar
(Handcut Raja)

S. Sanjeewanan
JEWELLERY WORKSHOP

192, Sea Street,
Colombo 11.
(Opposite Temple)

நவராத்திரி விழாவினை முன்னிட்டு ஸப்தஸ்வராலயா நடாத்தும் கலை நிகழ்ச்சிகள் சிறப்புறவும் நாட்டியாலயா மாணவ மாணவியர் மற்றும் அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரசுவாமி திருவருள் கிடைப்பதாக.

சுபம்

பீடாதிபதிகள் சபரிமலை குருஸ்சாமி
சிவஸ்ரீ பாலரவிசங்கரக் குருக்கள்
பிரதம குரு ஸ்ரீ ஞானபைரவர் தேவஸ்தானம்
42, டிலாஸ் லேன், கிராண்ட்பாஸ், கொழும்பு 14.

With Best Compliments From

CHELLIAH & COMPANY

DRY-FISH & GENERAL MERCHANTS

183B, Prince Street, Colombo 11.
Phone: 435253

With Best Compliments From

☆

Azmas
JEWELLERS

429, Grandpass Road, Colombo 14.
T'Phone: 431499

அஸ்மாஸ்
ஜுவலர்ஸ்

අස්මාස්
ජුවලර්ස්

With Best Compliments From

Suranjee Trading Company

IMPORTERS - EXPORTERS & COMMISSION AGENTS

T.P: 326317, 323171, 320869
Fax: 94 1 445069

179, Prince Street,
Colombo 11.
Sri Lanka.

With Best Compliments From

BALASAROJA STORES

192, Prince Street,
Colombo 11.
Phone: 423582, 330886

With Best Compliments From

A. A. SUNDRAM

Shoe Road,
Colombo 13.

With Best Compliments From

ISMALIA STORES

IMPORTERS & EXPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
153, Fourth Cross Street, Colombo 11.
Phone: 324403 Cable: ALLIBU

இஸ்மாலியா ஸ்டோர்ஸ்   ඉස්මාලියා ස්ටෝර්ස්

நீ பணியுமளவு கடவுள் உன்னைப் பெரியவன் ஆக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

SRI MAITHILY JEWELLERS

153 A, Sea Street, Colombo 11.
T.P: 434490, 449400
Fax: 434488

With Best Compliments From

W. H. HASSIM (DISTRIBUTORS) LTD

IMPORTERS & DISTRIBUTORS OF
MOTOR CYCLE SPARE PARTS, BATTERIES

232, Main Street, Colombo 11.
T.P: 329998, 323822

With Best Compliments From

PAMMNAS'S

No. 430, Main Street,
Dickoya.
T.P: 303

With Best Compliments From

Ranjanas

Specialist in Wedding Sarees

RANJANA STORES

WHOLESALE & RETAIL TEXTILE MERCHANTS

No. 103, Main Street, Colombo 11.
Phone: 325851, 421064 Fax: 331714

50 YEARS SINCE 1946

With Best Compliments From

S. Selvarajah
Managing Director

S. S. R. TRANSPORTS

154, Old Moor Street, Colombo 12.Sri Lanka.
TPhone: 433487 Fax: 439972

With Best Compliments From

Santhi Stores

No. 16, Sri Kathiresan Street,
Colombo 13.
Tel: 436028

With Best Compliments From

AMAAL HARDWARE

No. 343A, Old Moor Street,
Colombo 12.
T.P: 432167, 337099

With Best Compliments From

VINO TRANSPORT

No. 296/8, Wolfendhal Street,
Colombo 13.

With Best Compliments From

NEW LUCKMINI JEWELLERS

No. 16, Gree's Road,
Negombo

With Best Compliments From

NAVEEN STORES

GENERAL MERCHANTS & COMMISSION
AGENTS

No. 149, Maliban Street,
Colombo 11.
Telephone: 439661

வாழ்வு என்னும் இருள் சூழ்ந்த நெடும் பாதைக்கு நல்லறிவே கைவிளக்கு ஆகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக எழுதுக

1. ஜ, ன, ம், ன, கா, ம, ர, பா :
2. ஹ, த, நா, ம், அ, நா, த :
3. கீ, த, ம், ச, ங் :
4. த, ஸ், நா, ர, வ, ம் :
5. டி, பெ, ப், தி, சு, ரு, ட் :
6. நா, டா, ர், ட், ல், ட, பா :
7. ல், ங், கு, பு, பூ, லா, ல் :
8. கௌ, மா, ள, யா, வ, மா, ளை :
9. ஷ, ப, ரி, ம் :
10. தீ, ஸ், ஜ, ர, வ, ம் :

ஆக்கம்
சுகர்ணா பாலசுப்பிரமணியம்

மறைந்திருக்கும் சொற்களைக் கண்டு பிடியுங்கள்

1. ங், கீ, ம், த, ச ....
2. ணை, வீ ....
3. ல், ஸ், மே, யி, தா ....
4. ல, ங், அ, ர, கா, ம் ....
5. ள, தா, ம் ....
6. த, ம், கீ ....
7. ர், த, த், கீ, னை ....
8. தீ, ஜ, வ, ஸ், ம், ர ....
9. ல், வி, ப, ல ....
10. ர், வ, ம், ண ....
11. ஜ, வ, சை, டை, ரி, ண் ....
12. ரா, ம், க ....

ஆக்கம்
சி. கார்த்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை பாடும் இராகங்கள் இதமான காலங்கள்

இசை என்னும் சொல் தொடுத்து
இசைக்கப் போகும் இவ்வரிகள்
இசைத்தாயின் பாதம் பட்டு
இசைக்கட்டும் இப்புவியின் காதுகளில்

அந்த இசைக்கும் காற்றுக்கும் அப்படி
என்ன ஒற்றுமை உண்டாகியது
அழகாக இசை எடுத்துவந்த இந்தத் தென்றல்
அந்த உயிரின் காதுகளை மகிழ்விக்கின்றதே!
இவ் ஒற்றுமை இன்னும் மனித இனம் உணரவில்லையே பாவம்

இசைக்கு இவ்வுலகு கொடுக்காத மதிப்பில்லை
அந்த இசை கேட்டு மயங்காத உயிரும் இல்லை
அதற்கு எம் இறைவனும் சிக்கினான் ஐயமில்லை
அது இராவணனுக்கே தெரியும் அந்தக் கலை

அழுத குழந்தையை உறங்க வைக்க இசை தேவை
- அதுவே தாலாட்டு!
இறைவனை உயிர்கள் அடைய இனிய இசை தேவை
- அவையே துதிப்பாடல்கள்!
காதலன் காதலியை மகிழ வைக்க அந்த இசை தேவை
- அது காதல் பாட்டு
என வரிகள் தொடுத்துக் கொண்டே போகலாம்
- நல்ல இசை போட்டு

இசை என்ற கடலின் எல்லை தேடி
மூழ்கியவர் எத்தனை பேர்
இன்னும் முடியவில்லை அதற்கு
அக்கால இசை ராஜாக்கள் மட்டுமல்ல
இக்கால இளைய ராஜாக்களும் தான்

இறைவனை மகிழ வைக்க இனிய இசை வேண்டும்
இந்த உயிர்களை மகிழ வைக்க மதுரகீதம் வேண்டும்
மொத்தத்தில் இவ்வுலகு இயங்க இசை வேண்டும்
இதனை ஒவ்வொரு ஜீவனும் உணர வேண்டும்

நினைவூட்டும் இசைக் கைதிகளே
இந்த பூமி நிச்சயம் அது மாற்றமில்லை
வீசும் காற்றும் நிச்சயம் அது முடிவில்லை
எம் காதுகளை இசைக்கும் அந்த இசையும் நிச்சயம்!

ஆக்கம்.
திலகவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

*

* *

K. Balasubramaniam

98, Wolfendhal Street,
Colombo 13.
T.P: 436024

With Best Compliments From

❖

JAYANTHI TAXTILE

Importers, Wholesalers & Commission Agents

134, Keyzer Street,
Colombo 11, Sri Lanka.
T.P: 327937

With Best Compliments From

Dr. Mr. & Mrs. Kunalan

(IDEAL PHARMACY & COLOMBO MEDICAL CENTRE)

14, New Chetty Street,
Colombo 13.
Tel: 435827

70, Ginthupitiya Street,
Colombo 13.
Tel: 432038

With Best Compliments From

மாணவ மாணவிகளே

உயர்தர வகுப்புகளுக்கான விலங்கியல், தாவரவியல், பௌதீகவியல், இரசாயனவியல், மற்றும் கணித, கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கான பாடங்களும் G.C.E (O/L) லுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, வர்த்தகம் ஆகிய பாடங்களும் ஆண்டு 1 – 10 வரையிலான வகுப்புகளுக்கான சகல பாடங்களும் SPOKEN ENGLISH, GENERAL ENGLISH PROFESSIONAL ENGLISH N.C.E பரீட்சை, TOFEL ஆகிய ஆங்கில வகுப்புக்களும் சிறந்த முறையில் திறமையான ஆசிரியர்களினால் சிறுகுழுக்களாகக் கற்பிக்கப்படும். ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும். எனவே மேற்கூறிய பாடங்களில் குறுகிய காலத்தில் அதிக முன்னேற்றம் பெற ஆர்வம் உள்ள மாணவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

31, New Chetty Street, Colombo 13. T.P: 338887

With Best Compliments From

TRADE TEAM

Importers of Chemicals & Foodstuffs of Industrials Raw Materials

60, Shoe Road,
Colombo 13. Sri Lanka.

Tel/ Fax: 320276

இரத்தம், உழைப்பு, கண்ணீர், வியர்வை போன்றவைகளையும் தவிர உங்களுக்கு கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை.

– (வின்ஸ்டன்சர்ச்சில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A= Brown

B= Red

C=Yello

D= Blue

E= Brown

F=Green

G=Black

H= Green

I= Blue



Yassine

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாகான சொரூபியின் பாதங்களுக்கு வந்தனமே!

என் இனிய கவிதையே!
எந் நாளும் என்னுடன்
ஏகாந்தம் இசைக்கும்
ஏழிசை நண்பியே!
எட்டாத திக்கும் உன்
எதிரிலே!
ஏதுமறியாது நினைவிழக்குமே!

இசையே எனது இராகமே!
இன்னிசை பொழுதினில்
இழையோடிடும் உனது
இதழ்களின் வேகமும்
இதயத்தின் துடிப்பும்
இனிமை சேர்த்திடுமே!

கலையரசியின் உறுதுணையே!
காவியம் பாட வந்தவளே!
மற்றவர்களின் மனதில்
மத்தளம் போட வந்தவளே!
சுகமாய் நாமும் கேட்டிருக்க
சுருதியோடு பிறந்தவளே!
நமஸ்கரிக்கின்றேன்! உனது
நாதம் தனை!

லோகா சங்கரன்

* * * * *

ஓசை

வீணை என்றொரு பயிர்
விளைவித்து
இனிய மென் கரங்கள் கொண்டு
உரம் பதித்து
ஓசையெனும் பூ மலர்ந்து
வீசட்டும் இவ் உலகு தன்னில்
சுவாசிக்கட்டும் அதன் வாசம் தன்னை
என்றும் வியப்புடனே!

அந்த ஓசைக்கு இல்லை
என்றும் வேறு பாஷைகள்
இந்த ஓசைக்கு இல்லை
என்றும் வேறு இனங்கள்
எம்மில் ஐக்கியம் காணும் இசை
என்றும் இசைக்கட்டும் சாந்தியுடனே

பிரவீணா ஜெயராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

KALA JEWELLER'S

No. 61, Sea Street,
Colombo 11.
T.P: 433686

With Best Compliments From

RAVI TRADERS

318, Main Street,
Matale.
Tele: 066-2008

With Best Compliments From

Abila Advertising

A. Neil Jerome
58, Mayfield Road, Colombo 13.
Phone: 448048

With Best Compliments From

MANO J. SHIRANTHA.
ANTONY & CHINTHAKA

With Best Compliments From

RAGU STORES

No. 161, Gongawela Road,
Matale.
T.P: 066-3830

With Best Compliments From

Santha
Tex (Pvt) Ltd

PERFECT CHOICE FOR THE ENTIRE FAMILY
SPECIALIST IN WEDDING SAREES
212 Main Street, Colombo 11.
Telephone: 430750, 324459 Fax: 438644

With Best Compliments From

EBRAMJEE HASSANALLY & SONS

Importers of Paper, Paper Boards, Printing
Packaging Materials and Approved Dealers for
National Paper Company

195, PRINCE STREET,
COLOMBO 11.
TEL: 324117, 436872
FAX: 431922

With Best Compliments From

Poobalasingham Book Dept.

Colombo

With Best Compliments From

Kulan Traders

Colombo 13.

With Best Compliments From

TRY ONCE!! TRY ALL!!
Electrically Roasted & Ground
BHARATH
COFFEE POWDER
භාරත් කෝපි කුඩු
DELICIOUS & STIMULATING

பாரத்
கோப்பித் தூள்
மின்சாரத்தினால் வறுத்து
அரைக்கப்பட்டது
Obtainable at
BHARATH
COFFEE WORKS

256 & 258, MESSENGER STREET,
COLOMBO 12.

பேரானந்தத்தை மனிதன் புதிதாகப் பெறுவதல்ல. அவனே பேரானந்தம்; பேரானந்தமே அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப் பயணம்

அன்று மாலை இரண்டு மணியளவில் பாடசாலை விட்டு வந்த ரமியும் அவளது தங்கை ராதிகாவும் அவசர அவசரமாக முகம் கழுவிக் கொண்டு வந்து இரண்டு வாய் சோற்றை நின்ற நிலையிலேயே சாப்பிட்டு விட்டு வெளிக்கிட்டு கொப்பியோடு வெளியே வந்தவர்கள் "அம்மா போய் வாறம்" என்று சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டார்கள். அப்பொழுதுதான் கூட்பிட்ட குரல் கேட்டு வந்த தாய் கனகம்மா " ஏன்தான் இப்படி பறந்தடிக்கிறாளவை, என்ன தான் படிச்சுக்கிழிச்சிடப் போகிறாளவை" என்று முணுமுணுத்துக் கொண்டே மக்கள் இருவரும் பாடசாலையைத் தாண்டிவிட்டதைக் கண்டு "இன்றைக்காவது பொழுது சாயும் முன் வாருங்கள் அல்லது வீட்டுக்கு வெளியில் விட்டு பூட்டி விடுவேன்.." என்று அக்கம் பக்கத்து வீடுகளுக்கு கேட்கும் மட்டும் கத்தினார்.

"எப்பொழுதும் இப்படித்தான் இந்த அம்மா, நாங்கள் இரண்டு மைல் தூரத்துக்கு நடந்து போய் படிக்கிறது தெரியாது. ஏதோ காரிலும் பஸ்சிலும் போகிறது போல" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு சென்றாள் ரமி.

ஆம் ! ரமியும் ராதிகாவும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களது தந்தை ஒரு காலத்தில் சங்கீத வாத்தியாராக கடமையாற்றியவர்கள். தற்பொழுது இருதய பலவீனத்தால் தம் தொழிலை விட்டு விட்டு வீட்டோடு தான். ஆனால் "தந்தையோடு கல்வி போம்" என்ற வாக்கை பெய்மையாக்கும் நோக்குடன் அக்காவும் தங்கையும் இசைகலையிலே பெரிதும் ஆர்வம் செலுத்தினார்கள். இவர்களது பாடசாலையில் சங்கீத பாடத்தை கற்பிக்கும் ஆசிரியை ரமி, ராதிகாவுடைய இசை ஞானத்தை புரிந்து கொண்டு இவர்களை இசைமேதைகள் ஆக்கும் எண்ணத்துடன் வீசேட வகுப்பு எடுப்பதற்காக தனது வீட்டுக்கு வரச்செய்து இசையை புகட்டினார்.

ஆனால் ரமி ராதிகாவின் வீட்டிற்கும் சங்கீத ஆசிரியையின் வீட்டிற்கும் வெகுதூரம். ஆனால் பஸ்சிலோ வேறு வாகனத்திலோ செல்ல முடியாத கஷ்டநிலை. நடந்து செல்லுகையில் "இப்படியும் ஒரு வாழ்வு வேண்டுமா ? என்று சில சமயம் ரமி நினைப்பதுண்டு. ஆனால் அவளது நினைப்பு வீட்டை விட்டு வெளிக்கிடும் போதுதான். வெளிக்கிட்டு விட்டால் ஆசிரியையின் வீட்டை அடையும்வரை தங்கையின் அரட்டலும், பேச்சும், பாடசாலைக் கதைகளும் அவர்கள் நடையின் சுமையே தெரியாமல் செய்து விடும். அது மட்டுமன்று ஆசிரியை முன் அமர்ந்து ஸ்ருதிப் பெட்டியை போட்டதும் தங்களை மறந்து பாட்டில் லயித்து விடுவார்கள்.

உருப்படிகளைப் படிக்கும் ஆர்வத்திலும் இசையோடு லயம் பிசகாமல் பாடி அப்பியாசம் செய்வதிலும் நேரம் செல்வது தெரியாமல் இசையோடு ஒன்றிப் போவார்கள். அந்த வேளையில் தான் சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி "ரீச்சர், நேரம் 6.30 மணியாகி விட்டது. நாங்கள் செல்ல வேண்டும்" என்று ராதிகா அல்லது ரமி நினைவு படுத்தினால் "சரி போய் அடுத்த வகுப்புக்கு வாருங்கள்" என் ஆசிரியர் விடை கொடுத்து அனுப்புவார்.

அதன்பின் ஓட்டமும் நடையுமாக அக்கா, தங்கை இருவரும் வீடு வந்து நேர பொழுது சாய்ந்து வெள்ளி பூத்துவிடும். வீடு வந்ததும் அம்மாவின் மண்டகப் படியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக் கட்டிக் கொண்டு தமது பாடசாலைப் படிப்பில் இறங்கி விடுவார்கள். இப்படியாக ஒட்டமும் நடையுமாக இசைக்கலையை பயின்ற சகோதரிகளுக்கு ஒரு சோதனை நேர்ந்தது.

அன்றும் வழமைபோல் பாடசாலை விட்டு வந்தவர்கள் தமது சங்கீத வகுப்புக்கு போவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டார்கள். அப்போது ஊரெல்லாம் பரபரத்து ஊரை விட்டே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உடனே தங்களது உடமைகளையேல்லாம் விட்டுவிட்டு ஊர்விட்டு ஊர் சென்று அகதிகளாய் அலைந்து ஓர் நிலைமைக்கு வந்த போது! ரமி ராதிகாவின் வாழ்வு இருண்டுபோய் விட்டது என்று எண்ணினார்கள். ஆனால் அவர்கள் வாழ்விலும் ஓர் ஒளி உண்டாகும் என்பதை அப்போதைக்கு அவர்கள் அறியவில்லை.

என்னதான் இருந்தாலும் வாழ்வில் நடந்து முடிந்த சம்பவங்களை நினைப்பதற்கும் அசை போடுவதற்கும் மனம் என்ற ஒரு குரங்கு இருக்குதல்லவா ! கனகம் சதா பழையதையே நினைத்து நினைத்துக் குமுறுவாள். அப்படித்தான் அன்றும் "வீடும் போய் பொருளும் போய் என் பிள்ளைகளின் படிப்பையும் பாட்டையும் நாசமாக்கி விட்டார்களே" என்று ஆதங்கத்துடன் கூறிக்கொண்டு இருந்தபோது "ஏன்அம்மா இப்படி நினைத்து நினைத்து வருத்தப்படுகிறீர்கள். பொருள் தான் போய் விட்டது ஆனால் நாங்கள் படித்த படிப்பு எல்லாம் எங்களுடன் வந்து விட்டது ! என்று ஆறுதல் கூறினாள் ரமி. "அக்கா கூறுவது சரிதான் நாங்கள் படித்தது எல்லாம் வீண் போகவில்லையம்மா. இப்பொழுதும் ஒரு கீர்த்தனை படித்துக் காட்டட்டுமா" என்று தன் புலமையைக் காட்ட நின்றாள் சின்னவள். சங்கீதக் கல்வியை கசடறக் கற்றதன் திறமை அவளிடம் காணப்பட்டது. இவர்கள் தங்களது பாடசாலை வாழ்க்கையையும் படிப்பையும் நினைத்து பெருமைப்படுவதோடு, நல்லதொரு எதிர்காலம் அமைய வாய்ப்பில்லாமல் போய் விட்டதே என்று துக்கப்படுவதுண்டு. சில சமயம் தங்களது துன்பங்களை இறைவனிடமே ஒப்படைத்தும் விடுவார்கள்.

அப்படித்தான் அன்று வெள்ளிக்கிழமை ரமியும் ராதிகாவும் அவர்கள் தற்போது இருக்கும் வீட்டுக்கு சிறு தொலைவில் உள்ள அம்மன் கோயிலுக்கச் சென்றார்கள். தேவியை தரிசித்து விட்டு திரும்பி வருகையில் "ஹாய் ரமி" என்று ஒரு குரல் கேட்டது. உடனே திரும்பிப் பார்த்த ரமியும் ராதிகாவும் தங்களுடன் படித்த நண்பி கீர்த்தனா நிற்பதைக் கண்டு ஓடிச்சென்று "எப்பொழுதடி வந்தாய், சுகமாய் இருக்கிறாயா ? இப்பொழுது என்ன செய்கிறாய் ? ...... என்ற கேள்விக்கு மேல் கேள்வியை கேட்டவள் கடைசியாக எங்களது சங்கீத ஆசிரியைக் கண்டாயா ? என்று முடித்தாள் ரமி. அடுக்கடுக்காய்க் கேள்வி கேட்டதால் எந்தக் கேள்விக்கு பதில் கூறுவது என்று தெரியாமல் சற்று நேரம் ஒன்றும் பேசாமல் நின்ற கீர்த்தனா "ஓ உங்களின் சங்கீத ஆசிரியரைக் கண்டு கதைத்தனான்" என்று கடைசிக் கேள்விக்கு பதில் கூறினாள். இச்செய்தி அவர்கள் இருவரின் காதிலும் இனிப்பான செய்தியைக் கேட்ட மாதிரி இருந்தது. இதுமட்டுமன்றி சங்கீத ஆசிரியை எங்கு இருக்கிறார். வகுப்புக்கள் எல்லாம் தொடங்கி நடத்துகிறார் என்ற விபரங்களையும் ஒரே மூச்சாக கூறினாள் கீர்த்தனா.

ரமி கேட்ட தோரணையிலே கீர்த்தனாவும் பதிலைக் கூறியதால் அதை கேட்ட ராதிகா கலகலவென சிரித்தாள். "கீர்த்தனா நீ இந்தச் செய்தியை எங்களுக்குக் கூறியது நாங்கள் வழிபட்ட அம்மன்தான் உன் வடிவில் வந்து கூறியிருக்கிறார். "உனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கு சர்க்கரை போட வேண்டும்" என்று கூறிய ரமி அவளிடம் இருந்து விடைபெற்று வீட்டுக்குச் சென்றனர். அம்மா அம்மா .... உங்களுக்கு ஒரு செய்தி தெரியுமா ? என்று கூறிக்கொண்டே அம்மாவிடம் ஓடினால் ராதிகா. "ஏன் இப்படி விழுந்தடித்துக் கொண்டு வருகிறாய்" என்று சமையல் அறையில் நின்ற கனகம் கேட்டபடியே வெளியே வந்தாள். அம்மாவின் முகத்தை நோக்கிய ராதிகா குழைவாக "அப்படி ஒன்றுமில்லையம்மா" எங்களுடன் படித்தாளே கீர்த்தனா...... அவ.....ளை இன்று கண்டோமம்மா. அவள் எங்களது சங்கீத ஆசிரியையைக் கண்டாளாம். அவர் எங்களைத் தேடியதாகவும் கூறினாள். அதுதான்...... என்று மென்று விழுங்கினாள் ராதிகா. "அங்கு நீங்கள் போகப் போகிறீர்கள்" என்று முடித்தாள் கனகம். இல்லை இல்லையம்மா என்று மறுத்தவள் உங்கள் வசனத்தில் ஒரு திருத்தம் நாளை சாயங்காலம் தான் போகிறோம் என்று கூறி கலகலவென்று சிரித்தாள். அடுத்த நாள் மாலை எப்பொழுது வரும் என்று எதிர்ப்பாத்தப்படியே தனது வேலைகளில் முனைந்தாள் ராதிகா.

அடுத்த நாள் மாலை ஆசிரியரின் வீட்டையடையும் போது சகோதரிகள் இருவருக்கும் ஓர் புது உலகத்துக்குப் போகும் பிரம்மையுடன் சென்று ஆசிரியரைச் சந்தித்தார்கள். பின் ஒருவருக்கொருவர் குசலம் விசாரித்து தங்கள் துன்பங்களையும் இன்பங்களையும் பகிர்ந்து கொண்டே இருந்தபோது "ரீச்சர் உங்களைப் பார்க்கவும் உங்களது குரலைக் கேட்கவும் எவ்வளவு ஆசையாய் இருந்தது தெரியுமா ? உங்களைக் காணாமல் எங்கள் கண்களே பூத்து விட்டன ! என்று கவலையாய் கூறினாள் ராதிகா. "இருக்கும் ! இருக்கும் கண்டால் தான் கட ...." என்று தொடங்கிய ஆசிரியை சின்னவளின் முகம் போன போக்கைப் பார்த்து நிறுத்தி விட்டார்.

"இல்லை ரீச்சர் இல்லை. உங்கள் மேல் தூய அன்பு உள்ளவர்கள் நாங்கள்" எனறு ஆதங்கத்துடன் கூறினாள் ரமி. "ஓம் ரீச்சர் இனி உங்களைக் காண்போமோ என்று கூட நினைத்ததுண்டு என ஒத்தூதினாள் ராதிகா. "சரி சரி இவற்றையெல்லாம்" விட்டுத் தள்ளுங்கள் என்று சமாதானம் கூறியபடியே இன்று நல்ல நாள் இன்றே உங்களுக்கு வகுப்பு எடுத்து விடுகிறேன் என்று ஆசிரியை கூறியதும் சகோதரிகள் இருவரும் தங்கள் காதையே தங்களால் நம்ப முடியாமல் திகைத்து நின்றார்கள். ஆம் ! அன்று படிப்பதற்கும், இசை ஞானியாக வருவதற்கும் கனவு கண்டவர்கள். அந்தக் கனவு நிஜமாய் கனவாகவே போய் விட்டது என்று நினைத்திருந்தவர்கள் இப்பொழுது அந்தக் கனவு நிச்சயம் நனவாகப் போவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைந்தனர். அந்த மகிழ்ச்சியில் திளைத்த வண்ணமே ஆசிரியை முன் அமர்ந்து "வினாயக வணக்கம்" முடித்து

இசையால் உனைப்பாட இனிக்குதய்யா – தமிழ்
இணையில்லாப் பேரின்பம் ஜொலிக்குதையா

என்னும் ஷண்முகப்பிரிய ராக கீர்த்தனையை இசை லயம் ஒருங்கேயிணையப் பாடினார்கன்.

சுபம்

எஸ். கல்பனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A= Red

B= Yellow

C=Pink

D= Black

E= White

F=Purple

G=Brown



T.Aathithyaa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

Myster Micro Electronics

T. V, V.C.R, HI-FI RADIO பழுதுபார்த்தல்
கணணி மணித்தியால வாடகை முறையில்
(விசேட கழிவு மார்கழி வரை)

T. V, V.C.R, HI-FI RADIO REPAIRS AND COMPUTER
FOR HIRE ONE HOUR BASIC (DISCOUNT FROM
JULY TO DECEMBER 1996)
3C, GALLE ROAD, DEHIWELA, SRI LANKA.

வீணையில் பிறந்திடுமே இனிய கானமே!

மீட்டிடும் விரல் தனிலே
மின்னிடும் பொன்னழகே
சிந்திடும் நாதத்தில்
சிங்கார இராகங்கள்
பார் முழுதும் படைத்திடும்
பாட்டென்னும் காவியம்
தேனென தெவிட்டாத கனியே
தேடிய இராகத்தில்
தேவியவள் அணைத்திடும்
அழகிய மாணிக்க வீணையே

ஸ்ரீ. ஜெயந்தினி இராமசாமி

* * * * *

With Best Compliments From

LEELA ENGINEERS (PVT) LTD

Consultants, Designers, Engineers &
Contractors

400, K. Cyril Perera Mawatha,
Colombo 13.
T.P: 325933, 329182 Fax: 446077
Cables: "LEE GROUP"

உயிர் ஒவ்வொன்றும் இறைவனது நடமாடும் கோயிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகம் தரும் இசை

சுகம் தரும் இசையது ஸ்வர சங்கீதமே
இனியது உளமதை உவந்தது உணர்வினியே
இனியது இலையெனும் போதிலோர் உலகது
இலையென்றாகுமோ, இலை உயிரிலையென்றாகுமோ
புதியது உணர்வினை புணர்வது இசையதாகுமோ
புவியினில் இசையொரு உலகதை சமைத்திடுமுன்னமேயே
உயிரது உணர்வுடன் உழல்வது இன்னிசையாகுமே
மெலியது மலரினும், இனியது உணவினும்
இயைவது இறையினில் உறைவது உணர்வினில்
கனியதும் கனிந்திட கனன்றுதும், கவியிவன்
வரைந்திட, அடுக்கிட மொழியதை அளந்திட
அளபெடை அளந்ததும் இசைதானே, இசையது
இலையெனில் உலகதும் உணர்வதும் பனியது
போலவை உறைந்திடும் என்பதே மெய்யாகும்!!

*****

ஸப்தஸ்வரங்களில் சங்கீத ஸ்வர்ணம்
சந்தனத் தென்றலில் பொன்நிறவோடம்
இச்சை துளிர்த்திடும் இதயத்தினோரம்
இசைந்தே ஈந்திடும் இன்னிசை கானம்

காதலாற் கடவுளை கண்ணுற பாதையுமாகும்
கருணையும் அன்பும் கண்ணினில் கூடும்
காலமும் மிருகமும் கலந்தே போகும்
சாகசம் இனியதோர் இசை சுரமேயாகும்

ஓசையினால் உருவானதோர் இசையாவது
வாஞ்ஞையாய் உளத்தை வானிலீர்ப்பது
சாலவும் இறையுருக் காண இதயம் தூர்வது
கானமாம் கடலினும் உணர்ந்திட பெரியது

ஆதியுமான அந்தமுமான நேசனும் பேரிது உவந்தது
ஈசனை நாளும் பாதமும் போற்றும் இந்திரனாலும் இசைப்பது
காவியமாயினும் கவியினுமாயின் இசையினிற் கேதுமிணையேது
ஓசையினாலே உலகினை ஆழ்வது உயிரினுமான இசையாமே

அள்ளிடக் குழையும் மழலையினது குரலிசையானது
எள்ளிய நரம்பிசையினும் உயர்வாகும்
மெல்லிய மழலையின் சிரிப்பொலி சிவனுக்கும் உவப்பாகும்
கொல்லென சுழலும் குருவியின் குரலும் இசையாகும்
துள்ளிய நதியது நகர்ந்திடும் ஒலியும் இசையாகும்
இயற்கையின் இளமையின் இரகசியம் இசைதானோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

Sarath Import (Pvt) Ltd

Importers of Essences, Food Colours, Gelatine
Glucose, Chemicals Etc.

OFFICE:
180/4, People's Park,
Gasworks Street, Pettah, Colombo 11.
Tel: 329571, 332940

STORES:
21, St. Michael's Road,
Kollupitiya, Colombo 3.
Tel: 448768

With Best Compliments From

THILAK R.Q

ICED FISH

Colombo Central Super Market
Colombo 11

With Best Compliments From

G. N. Kumar Work Shop

"Srinivasa"
No. 297, Sea Street,
Colombo 11, Sri Lanka.

Tele: 341716, 332462
Celtel: 072-75438

UNDERTAKING ALL KINDS OF JEWELLERY ITEMS
(Rings, Sangitha Bangles, Breslet etc.)
in Maching Cut and Work Shop

With Best Compliments From

UNIE ARTS (PVT) LTD

48B, Bloemendhal Road,
Colombo 13.
Tel/ Fax: 330195

With Best Compliments From

Lanka Medica (Pvt) Ltd.,

62, 1st Floor,Bloemedhal Road,
Colombo 13.

T.P: 334900, 432512 Fax: 440665

சுறுசுறுப்புடன் வேலை செய்து வரும் தேனீக்களுக்கு அழுவதற்கு நேரமில்லை
– (ப்ளேக் Black)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டும் ... வசந்தம்

சிறகொடிந்த பறவை போல
சிறையினில் நீ வாழ
கண்ணிருந்தும் குருடர்களாய்
சொந்தங்களும் தானிருக்க
பெயர் தான் வாணியென்றால்
வெண்ணுடை தான் தரிக்க வேண்டுமா?
விதவையென்னும் முகாரி இராகத்தை விட்டுவிட்டு
கல்யாணி இராகமிசைக்க
எழுந்து வா வெளியிலே
சோகங்கள் பாதையில் மறித்தாலும்
தாபங்கள் அம்புகளாய் துளைத்தாலும்
மானுடராய்ப் பிறந்து விட்டோம்
வாழ்ந்து தான் ஆக வேண்டும்
யாரென்ன சொன்னாலும்
ஊரென்ன சொன்னாலும்
நமக்காகப் பாடி வைத்தான்
பாரதி தான் அந்நாளிலே
அதை நாம் மனதினிலே
ஏற்றி வைப்போம் தீபமென
தோல்விகளும் சோகங்களும்
இனிவருமோ நமை நெருங்க

*****

இன்னுமேன் தாமதம்

பூவையே பூவையே
இன்னுமேன் தாமதம்
பூவை நீ விழித்தெழ
ஏன் இன்னும் தாமதம்
காயங்கள் பல இருக்கலாம்
நீ வந்த பாதையில்
காரியத்தில் வெற்றியே
என்றும் வேண்டும் வாழ்விலே
பூமிதனில் எவருமில்லை
எமக்காக வாழ்ந்திட
நாமே தான் வாழ்ந்திடணும்
அனைவரின் மேலாக

ஸ்ரீதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடியுங்கள்

I

அ	மி	ரு	த	ங்	க	ம்	ஸ
கு	ட	த்	தோ	க	ட	டி	ம்
நா	த	ஸ்	வ	ர	ம்	ம்	அ
க	வி	து	ய	ம	ர	து	ம
க	ல்	வி	லி	க	ட	சு	த
க	ம	ல்	ன்	ச	ரி	தை	க
த	ம்	பு	ரா	க	ந	ட	த
பே	சு	த	க	ரி	மு	த	சி
லா	க	ன்	ப	ந	த	சு	க

பின்வரும் பெட்டிக்குள் 7 வாத்தியக்கருவிகள் அடங்கியுள்ளன. அவற்றை வெளியே கண்டு பிடித்துக் காட்டுக.

II

தொடர்பு படுத்துக.

1. தோற் கருவி
2. கும்மிப்பாடல்
3. ஸா, ரீ, கா, மா, பா, தா, நீ
4. ஸ்வர வரிசை
5. ஸ்ரீ கணநாதா என்னும் கீதம்

1. நெடில் ஸ்வரம்
2. ரூபகம்
3. மாயாமாளவ கௌளை
4. நாட்டார் பாடல்
5. மிருதங்கம்

****

பின்வரும் கேள்விகளுக்கு விடையளியுங்கள்.

1. நாதத்தின் பிரிவுகள் எவை ?
2. திஸ்ர நடையில் அமைந்த தாளத்தின் மொத்த எண்ணிக்கை யாது?
3. ஆதி தாளத்தில் வரும் அங்கங்கள் எத்தனை ?
4. தாளக் கட்டுப் பாடில்லாத உருப்படி எது ?
5. ; ; , , என்பதன் மொத்த எண்ணிக்கை யாது ?

விடைகள்

1. ஆஹத நாதம், அநாகத நாதம் 2. மூன்று 3. $1^{4}+0^{\cup}+0^{\cup}$
4. வெண்பா 5. ஆறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை என்னும் துயரிலும் இனிமை தரும் வீணையிசை!

இசை

அந்தி நேரத்
தென்றலில்
கலந்தது
ஓர் இசை -
அவள்
வீணையில் தருவித்தாள்
மோகன இராகம்

கூடு தேடிய
பறவைகள் எல்லாம்
ஒருகணம்
அந்தரத்தில்
ஸ்தம்பித்தன

ஆரவாரமாய்
ஆடியசைந்த
தாவரங்கள்
மெய்சிலிர்த்து நின்றன

துள்ளலோடு
கரையைத் தொட்ட
அலைகள்
கடலுக்குள் திரும்ப
மறந்தே போயின

இருளை
ஞாபகப்படுத்த வேண்டிய
கதிரவன்
பகலுக்கு ஒளியூட்டினான்

அவள்
இசை தொடர்ந்தது
கவலைகள்
இராகமாய்
கரைந்தோடின
அவள்
இதயத்தின் மூலையில்
சந்தோஷம்
முளைவிட்டது

வீணையுடன்
கைகுலுக்கிக் கொண்டதால்
புது உறவு
தேடிக் கொண்டாள்
தனிமை மறந்தாள்

இயற்கை
ஸ்தம்பித்தது
அவள் கண்களில்
ஆனந்த வெள்ளம்
ஆனால்....
அவள் விரல்களிலோ
வடிந்தது
குருதி

L. நிருபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I கட்டங்களில் இருந்து கண்டு பிடியுங்கள்.

ஆக்கம்
லோ. உஷாந்தனி

ஸ	ப்	த	ஸ்	வ	ர	ம்
1	2	3	4	5	6	7

1. மதிப்பிற்கு இன்னொரு சொல் இது. (3, 6, 7)
2. இதை முனிவர்கள் இறைவனிடம் இருந்து பெறுவார்கள் (5, 6, 7)
3. இதை விழாக்களில் இறைவனை உலாவர பயன்படுத்துவார்கள் (6, 3, 7)
4. இது சங்கீதத்திற்கு முக்கியமானது (4, 5, 6, 7)
5. முனிவர்கள் தங்களுக்கு வேண்டிய வரத்தை இதன் மூலம் இறைவனிடம் பெறுவர் (3, 5, 7)
6. இதை இன்ன ஸ்வரம் என்று கூறுவர் (1, 2, 3)

✤✤✤✤ ✤✤✤✤ ✤✤✤✤ ✤✤✤✤ ✤✤✤✤ ✤✤✤✤ ✤✤✤✤ ✤✤✤✤

II பாடியவர்களும், பாடியவையும். தொடர்பு படுத்துக.

1.	தியாகராஜ சுவாமிகள்	-	திருப்புகழ்
2.	ஆனந்த சமரக்கோன்	-	தேவாரம்
3.	அருணகிரிநாதர்	-	திவ்விய நாம கீர்த்தனை
4.	ஔவையார்	-	தேசிய கீதம்
5.	திருஞானசம்பந்தர்	-	வெண்பா

விடைகள்
(1). I - III (2). II - IV (3). III - I (4). IV - V (5) V - II

★★★★★★★★★★★★★★★★★★★★★★

III வினாக்களுக்கு விடையளிக்கவும்

கு	ம்	ஏ	வி	ர்	வீ
பு	கோ	த	கீ	ல	த
ணை	த	க	னை	கே	ம்
ரா	ம்	கீ	வை	ள்	த்

விடைகள்.
1. கோவை 2. ஏகம் 3. வீணை
4. கீதம் 5. லகு 6. தம்புரா
7. கீர்த்தனை 8. கேள்வி

1. ஸ்வரத்தின் மறு பெயர் என்ன ?
2. ஒரு அங்கத்தை எடுத்துக் கொள்ளும் தாளம்?
3. நரம்புக் கருவிகளில் ஒன்று ?
4. உருப்படிகளில் மிகவும் எளிமையானது?
5. ஸப்த தாளங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் அங்கம் ?
6. சுருதிக்கு உபயோகிக்கப்படும் ஒரு வாத்தியம்?
7. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று அங்க வித்தியாசம் உள்ள உருப்படி ஒன்று?
8. சுருதியின் மறுபெயர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

Well Wisher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

S. Srither

A2, F11, Bloemendhal Flats,
Kotahena,
Colombo 13.
T.P: 335716

With Best Compliments From

R. KUMAR

106, Sea Street,
Colombo 11.

With Best Compliments From

N. S. R & Co.

216, Bankshall Street,
Colombo 11.
T.P: 431262, 071-27921

With Best Compliments From

AD-X ENTERPRISES

DEALERS IN PROMOTIONAL PRODUCTS
IMPORTERS AND EXPORTERS

M. M. ZAKIR HUSSAIN
Managing Partner

610, Galle Road, Colpetty, Co. 3, Sri Lanka.
Phone: 691625/698368
Pager Centre: 686686
Pager No: 65814

With Best Compliments From

AJANTHAN JEWELLERY

Dealers in Genuine 22Ct - Gold Jewels

අජන්තන් ජුවලරි   அஜந்தன் ஜுவலரி

No. 188/190 - 9A, Sea Street, Colombo 11.

With Best Compliments From

N. Umalathas

N. U. Goldsmith

148, 3rd Floor, Sea Street, Colombo 11.
Phone: 342768

With Best Compliments From

H. M. SAMSUDEEN
Partner

SAFRAZ TRADERS

DIRECT IMPORTS AND GENERAL MERCHANTS

116-1/G, (1/4) PRINCE ST. COLOMBO 11.
Phone: 449751 Res: 699945
Fax: 94-1-445559 Attn: SAFRAZ

With Best Compliments From

S. V. S. COMPANY

DEALERS IN POULTRY & ANIMAL FEED AND FERTILIZER

T'Phone: 432751
328291

65, Wolfendhal Street,
Colombo 13.

With Best Compliments From

EMCO

Dealers in Textiles Wholesale & Retail

57/11, Keyzer Street,
Ameen Trade Centre
Colombo 11.
Tel: 336694
342032

With Best Compliments From

Shakthi Coconut Suppliers

DEALERS IN COCONUTS & VEGETABLES

274 - A594, Manning Market,
Pettah, Colombo 11.
T. P: 345529

சீரிய சிந்தனை உறையும் கோயில் போன்றது மௌனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இசை பாடும் இதயம்"

"ஸாரிகாபா தாஸ்ாநீதா......." என்று சங்கீதா இனிமையாக ஆரம்பித்த ஜதீஸ்வரத்தை ஏனடி இந்த காட்டுக் கத்தல் கத்துகின்றாய் காலையிலேயே? என்ற பார்வதியின் பேச்சிற்கு இடை நிறுத்தும்படியாக ஆகிவிட்டது. இது புதிதல்ல. ஒவ்வொரு விடியலும் இனிமையாக இருக்கவேண்டுமென்ற எண்ணங் கொண்ட சங்கீதா, இப்படி தனது இசை ஆர்வத்தை அடக்கிக் கொள்ள முடியாது பாடுவதும், அதை "சிவபூசையிற் கரடி புகுந்தாற் போல" அவளது தாய் பார்வதி ஏசுவதும், வழக்கமாகிவிட்டிருந்தது. அன்றும் அப்படித்தான்.

சங்கீதா தன்னையே அலுத்துக் கொண்டு எழுந்தாள். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பள்ளி செல்லும் அவள் அடுத்த உயர்தர பரீட்சையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாணவி.

தனது ஆற்றாமையை ஒருவாறு தன் நெருங்கிய தோழியான புவனாவிடம் கூறுவது வழக்கம். அன்றும் புவனா "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய் சங்கீதா? என்ன பழைய பல்லவிதானே? அல்லது வேறு ஏதேனுமா?" என்று கேட்டாள். "ம்.... அதேதான். என்னை என்ன செய்யச் சொல்கிறாய் புவனா? என்னிடம் திறமை இருந்தும் அதனை விருத்தி செய்ய முடியாத நிலை. என் தந்தை மட்டும் இருந்திருந்தால் நான் இந்நேரம் இசையில் பட்டம் பெற்றிருப்பேன். என்னுடைய துரதிருஷ்டம். பத்து வயதிலேயே அவர் இறந்துவிட்டார். அதன்பின் எல்லாமே என் தாய்தான்".

"ஏன் அப்படி கூறுகிறாய்? உன் தாயைப் பார்த்தால் அப்படி தெரியவில்லையே?" இது புவனா.

"என்ன அப்படித்தான் இருப்பார்கள். நான் காலையில் ஏதேனும் சுலோகம் பாடினால் போதும். இப்படி பெண்பிள்ளை வீட்டிலிருந்து கத்திப் பாடினால் அக்கம் பக்கத்தவர்கள் என்ன சொல்வார்கள்? என்று அன்னை அதட்டி வைத்து விடுவார். நானும் என்ன செய்வதென்று இருந்து விடுவேன். இதுவே வாடிக்கையாகிவிட்டது" என்றாள் சங்கீதா. பள்ளி ஆரம்பமாகும் மணி ஓசை கேட்கவே இருவரும் அங்கிருந்து சென்று விட்டனர்.

நாட்கள் செல்லச் செல்ல சங்கீதாவின் இசை ஆர்வம் வளர்ந்ததே தவிர, மறையவில்லை. தாயும் அவளை பேசாத நாளில்லை. சங்கீதாவுக்கோ வாழ்க்கையே வேண்டாம் என்றாகிவிட்டது. ஒருநாள் புவனாவிடம் "நான் ஒரு முடிவு எடுத்துவிட்டேன். எனது தேர்வு முடிந்ததும் நான் எங்கேனும் சென்று, முதலில் ஒரு வேலையைத் தேடி, பின் எனக்குப் பிடித்த இசையை பயின்று வரப் போகின்றேன். நான் இசைக்கலையை கற்று, ஒரு சிறந்த வித்வானாக வரவேண்டும் என்பதற்காக அல்ல. எனது ஆத்ம திருப்திக்காகவும், எனது ஆர்வத்தை அடக்க முடியாமலிருப்பதற்காகவுமே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு புவனா, "அப்படி ஒன்றும் செய்யாதே. உனது அம்மா அந்தக் காலத்திலுள்ளவள். அதனால் தான் அவ்வாறு பேசுகின்றாள். அதுவும் நீ ஒரேயொரு பிள்ளை என்பதால், அதிக ஈடுபாட்டுடனும் எதிர்பார்ப்புடனும் இருப்பதால் உனக்கு அது ஒரு தடையாக அமைகிறது" என்றாள்.

சங்கீதா நன்கு சிந்தித்தாள். இதற்கு, சீக்கிரமே ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடக்கலானாள்.

வழமை போல் அன்றும், "ஸமகரி ஸரிகம ரிபமக ரிகமப" என்ற பாட்டு வரிசையை தாளத்துடன் மிக அழகாக பாடிக் கொண்டிருந்தாள். தாய் பார்வதி கூட, அடுப்பங்களையிலிருந்து கேட்டுக் கொண்டே இருந்தாள். "தனது மகளுக்கு இவ்வளவு திறமையாக பாட முடியுமா? அவ்வளவிற்கு இனிமையான குரலா? என்று சிந்தித்து ஆச்சரியமடைந்தாள். தன் மகளின் மனதினுள் மறைந்திருக்கும் ஆர்வத்தினைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனாள்.

சங்கீதா, தான் எடுத்த முடிவினை புவனாவிடம் கூறியும் பயன் இல்லாததால், தன் மேல் அன்புகொண்ட ஆசிரியையிடம் இது பற்றிக் கூறினாள். அவரும் யோசித்தபின் "உனது தாயை என்னை வந்து சந்திக்கச் சொல்" என்றார். அவ்வாறே தாயையும் சந்தித்து கலந்துரையாடினார். தாயினுடைய எண்ணத்தினை அறிந்த ஆசிரியைக்கு அவர் சங்கீதாவை இசை பயில விடமாட்டார் எனத் தோன்றியது. மேலும், இசையை வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்காவிட்டால் சங்கீதா வேறு வழியிற் செல்லக் கூடும் என்பதையும் உணர்ந்தார். என்ன செய்வது?...

தன் மாணவர்களில் ஒருவரேனும் சீரழிந்து போகக்கூடாது என்ற நற் கருணையுள்ளம் கொண்ட அவர், சங்கீதாவிடம் "நீ தேர்வை முடித்து, அதன்பின் ஒரு வேலையை தேடிக் கொள். அதன் மூலம் வரும் வரவில் ஒருபகுதியை இசை கற்பதற்கு ஒதுக்கிவிடு. நான் உனக்கு எல்லா விதத்திலும் உதவி செய்கிறேன்" என உறுதியளித்தார்.

காலம் நிற்பேனா? என்று வெகு விரைவாக சென்று கொண்டிருந்தது. சங்கீதாவும் தனது உயர்தர படிப்பை முடித்துவிட்டு, எப்படியோ தாயிடம் வெகு சிரமப்பட்டு அனுமதியையும் பெற்று கற்ற கல்வி வீணாகக் கூடாது என்றெண்ணி, ஒரு வேலையையும் தேடிவிட்டாள்.

இனி அடுத்த கட்டமாக, இசையை மிகத் திறமைவாய்ந்த குருவிடம், சங்கீதத்தினை முழு மனதுடன் இனிதே கற்று வந்தாள். குரு, சங்கீதாவின் இசை ஆர்வத்தினையும், கலை நுணுக்கங்களை புரிந்து கொள்ளும் திறமையையும் கண்டு அகமகிழ்ந்து, தனிக் கச்சேரி நடத்துமாறு பணித்தார். எனினும், கச்சேரி நடத்துவதற்கு சற்றே பயந்திருந்த சங்கீதா குரு கூறிய வார்த்தைகளின் மூலம் அவள் மனம் தெளிந்திருந்தது.

என்னதான் இருந்தாலும், தன்னை வளர்த்து ஆளாக்கிய தன் தாய்க்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன் என்றுணர்ந்த அவள், தனக்கு எல்லா விதத்திலும் உதவி செய்த ஆசிரியையுடன் முதல் அழைப்பிதழை கொடுப்பதற்காக வீட்டை அடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், தன் மகள் கச்சேரி நடத்துவதற்கு முழு மனதுடன் சம்மதிக்கவில்லை. "ஊரார் என்ன சொல்வார்கள்?" என்ற ஒருவித உணர்வு அவர் மனதில் பதிந்திருந்தது. சங்கீதாவும், ஆசிரியையும் பார்வதியிற்கு நல்ல அறிவுரைகளை எடுத்துக் காட்டிய போது அவரும் ஒரு மாதிரியாக இதற்கு இசைந்தார்.

நாட்கள் மாதங்களாயின. கச்சேரி நடத்துவதற்கான நாளும் வந்தது. இந் நிகழ்ச்சியானது மிகப் பிரபல்யம் பெற்ற ஓர் அரங்கில் நடைபெற்றது.

தாய் பார்வதி, முன் வரிசையிலுள்ள ஆசனத்தில் அரைமனதுடன் அமர்ந்திருந்தார். சங்கீதாவின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது.

"ஸ்ரீ கணநாதா" எனும் பிள்ளையார் கீதத்தினை ஸ்வரம், தாளம் என்பவற்றுடன் இனிமையே உருவாக பாடியபோது அரங்கில் கைதட்டல்கள் மிக அமர்க்களமாக இருந்தது. மற்றும், "சங்கராபரணம்" இராகத்தில் அமைந்த "எனக்கொரு வரம் தருவாய் முருகையனே" எனும் கீர்த்தனையையும், "அன்னமே....." எனத் தொடங்கும் ஆரபி இராக வர்ணத்தையும் இனிமையான குரலில் அழகாகவும் தெளிவாகவும் பாடினாள்.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தாய் பார்வதி மலைத்தே போய்விட்டாள். அவளை அறியாமலேயே கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது.

இறுதியாக "நவரோஜ்" இராகத்தில் அமைந்த, அருணகிரிநாதர் பாடிய "பக்தியால் யானுனைப்........" எனும் திருப்புகழோடு தன் நிகழ்ச்சியை நிறைவு செய்தாள் சங்கீதா.

விழாவிற்கு வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர், சங்கீதாவின் திறமையைப் பாராட்டி ஒரு சிறிய பரிசையும் வழங்கினார். அவர் அங்கு உரையாற்றுகையில், "இந்த மாதிரி சங்கீதாவின் தாயைப் போல ஒவ்வொரு தாயும் தம் பிள்ளைகளின் உள்ளூரவிருக்கும் ஆர்வத்தினை அறிந்து, அவர்களின் கொள்கைகளுக்கு முக்கிய இடமளித்து, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்". அத்தோடு "இவ்வளவு திறமையும், ஆற்றலும் உடைய சங்கீதாவை கலைத்துறைக்கு அவளது பெற்றோர்கள் அர்ப்பணித்தது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமே" என்று அவளது பெற்றோரையும், அவளையும் புகழ்ந்து பேசினார்.

இறுதியாக தாய் தன் மகளை அணைத்து உச்சிமோந்து தான் செய்த பிழைக்காக வருந்தினாள். கண்ணில் நீர்மல்க தன் மகளை தீர்க்கமான பார்வையுடன் பார்த்தார்.

அந்தப் பார்வையில் சங்கீதா தன் எதிர்காலத்தை உணர்ந்தவளாக, தன்னுடைய குருவை நன்றியுடன் நோக்கினாள்.

தர்ஷினி வேல்சாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

Well Wisher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

ஓ
ஓஓ

R. Thangavelu Chettiar & Sons

Dealers in Coconut Oil, Charcoal Poonac &
Govt Transport Contractors

338, Main Street, Matale.
T.P: 2437, 2008

With Best Compliments From

GENERAL HARDWARE STORES

GOVT. & ESTATES SUPPLIERS, DEALERS IN
HARDWARE, PAINTS AND ELECTRICAL ASSESSORIES

33, Bazaar Street, Badulla.
Phone: 055-2375

ஸப்தஸ்வராலயா மாணவ, மாணவிகளுக்கு எமது
உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்

With Best Compliments From

JANALANKA

Dealers in Sanitaryware and Hardware

37, Bazzar Street, Badulla.
Phone: 055-3785

With Best Compliments From

S. Chadra

WESTERN TRAVELS

S-7, 2nd Floor,
Central Super Market Complex,
Colombo 11.
Telephone: 334142

With Best Compliments From

Well Wisher

With Best Compliments From

S.A. WELGAMA & SONS LTD

325, Sri Sangaraja Mawatha,
Colombo 10.
T.P: 432525, 447585
Fax: 325244

With Best Compliments From

Sriyani Jewellers

GOLD CUTTING CENTRE & JEWELLERS

47-2/1, 2nd Floor,
Sea Street (Gabos Lane)
Colombo 11
T'Phone: 341789
436413

With Best Compliments From

S. RAJU

No. 15, 1/2, Umbichy Place, Colombo 13.
T.P: 348410

With Best Compliments From

Rich Centre

SPECIALIST IN DENIM TROUSERS AND COTTON
TROUSERS, COTTON SHIRTS ETC.

No 124/4B
Super Paradise Super Market,
Keyzer Street,
Colombo 11
T'Phone: 437375

With Best Compliments From

SRI STORES

No 6, Main Street,
Balangoda.
T.P: 0457120

முக மலர்ச்சி ஆரோக்கியத்தின் அறிகுறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV குறுக்கெழுத்துப் போட்டி

ஆக்கம்
லோ. உஷாந்தனி



இடமிருந்து வலம்

1. இது செவிக்கு இன்பத்தைத் தரும்.
2. ஸப்த ஸ்வரங்களில் "ரி" என்னும் ஸ்வரத்தை தமிழ் இசையில் இப்படி வழங்குவர்.
3. ஸ்தாயியின் மறுபெயர்.

மேலிருந்து கீழ்

1. 4 அட்சரங்களைக் கொண்டது.
2. இசை, சாஹித்தியம் என்னும் இரண்டின் செயற்கையே இது ஆகும்.
3. சுருதிக்கு உபயோகிக்கப்படும் வாத்தியங்களில் இதுவும் ஒன்று.
4. 64 கலைகளையும் ஒன்றாகச் சேர்த்துச் சொல்லும் பொழுது இப்படி வரும்.
5. ஸ்வரங்களை இப்படியும் அழைப்பர்.

விடைகள். இ. வ.–	விடைகள். மே. கீ.–
1. சங்கீதம்	1. சதுஸ்ரம்
2. துத்தம்	2. கீதம்
3. நிலை	3. தம்புரா
	5. ஆயகலை
	6. தாது

............................★★★★★★★★★★★★..............................

குறுக்கெழுத்துப் போட்டி



மேலிருந்து கீழ்

1. நிஷாதத்தின் தமிழ்ப்பெயர் இது.
3. இதுவும் லகுவும் சேர்ந்த தாளத்தை ரூபகம் என்பர்.
5. எட்டு ஸ்வரங்களைக் கொண்ட ஸ்வரங்களை இவ்வாறு அழைப்பர்.
7. தாளத்தில் வரும் த்ருதத்தையும் லகுவையும் கொண்ட தாளம் இது.

இடமிருந்து வலம்

2. "ஸ" வின் தமிழ்ப் பெயர் இதுவாகும்.
4. லகுவை மட்டும் கொண்டுள்ள தாளத்தை இவ்வாறு அழைப்பர்.
6. ஸப்த ஸ்வரங்களுக்கு இதுவும் ஒரு பெயராகும்.
8. இதன் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் பாடலை நிபந்தம் என்று அழைப்பர்.
9. ஒரு செங்குத்துக் கோட்டைக் கொண்ட அங்கத்தை இவ்வாறு அழைப்பர்.

விடைகள். மே. கீ.–	விடைகள். இ. வ.–
1. தாரம்	2. குரல்
3. த்ருதம்	4. ஏகம்
5. அஷ்டகம்	6. ஸப்தகம்
7. ரூபகம்	8. தாளம்
	9. லகு

"ஆக்கம்"
இ. தர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை ஓசை

இனிய காலைப்பொழுது ஆதவன் உதித்து விட்டான். பறவைகளின் ஓசையும், மாணவ மாணவியரின் பள்ளிக்கூடம் செல்லும் பரபரப்பும் இன்னும் அடங்கவில்லை. படுக்கை அறையின் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி வெளியில் வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த காயத்ரி தன் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களைஎண்ணிப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது. கடலின் அலைகள் கரையோரம் வந்து மீண்டும் மீண்டும் செல்வது போல் அவளின்நினைவலைகள் மிதந்து வந்தன.

அப்பொழுது அவள் ஒரு 10 வயதுச் சிறுமி. ஒருநாள் தெருவில் கேட்ட ஓர் வித்தியாசமான ஒலியினால் ஈர்க்கப்பட்டு வாசலுக்கு விரைந்தாள். வாசலருகிலே அவளின் வயதை ஒத்த ஒரு பிச்சைக்கார சிறுமி நின்றிருந்தாள். கையிலே ஒரு தகரடப்பா வாத்தியம். அதை கையில் வைத்துத் தட்டியபடி இனிமையான அழகான குரலில் பாடிக் கொண்டிருந்தாள். பாவம் யார் பெற்ற பெண்ணோ, "ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது" ஆம், அவளின் நம்பிக்கையான பாட்டு. அம்மா என்னைக் கூப்பிட்டாள் காயத்ரி, இங்கே வா. இந்த 25 காசை போடு என்றார். நான் ஒடிச் சென்று அம்மாவிடம் காசை வாங்கி அவளின் அழுக்குப் பையில் போட்டேன். அவள் திரும்பவும் அந்த பாட்டை அந்த வாத்தியத்தில் இசைத்தபடியே மெல்லமெல்ல நடந்து சென்றாள். எனக்கோ அந்த வாத்தியத்தில் தான் ஈடுபாடு. அம்மா எனக்கும் அதுமாதிரி ஏதாவதொரு வாத்தியம் படிக்க வேண்டும்.

காயத்ரி அம்மாவை தினமும் நச்சரித்துக் கெண்டிருந்தாள். அப்பா எப்பொழுதும் வானொலியைத் திறந்தால் தனம்மாளின் வீணை இசையைத் தான் இரசிப்பார். மகளையும் வீணையில் சிறந்த இசைமேதையாக ஆக்க வேண்டும் என்பது முன்பே அவரின் ஆசைதான். மகளின் படிப்பு முடியட்டும் என்று இருந்தார். ஆனாலும் அவள் அடக்க முடியாத ஆர்வம் காரணமாக படித்துக்கொண்டே வீணை இசையையும் கற்றாள். அவளுக்கு ரொம்பவும் ஆர்வம் தான். தன்னை வீணையின் இசைக்கு அர்ப்பணித்தாள். வகுப்பிலும் முதன்மையாக இருந்தாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெருமைதான். பாடசாலைப் படிப்பும் முடிந்தது. திருமண வயதை எட்டிப்பிடித்த காயத்ரியைப் பெண்பார்க்க வந்தார்கள்.

"பொண்ணுக்கு வீணை வாசிகத் தெரியுமா?" என்று கேள்வி கேட்பார்களா என்ற நப்பாசையுடன் காத்திருந்தாள் காயத்ரி. ஆனால் வந்தவர்களிடையே, பொண்ணு என்ன படிச்சிருக்கா? பொண்ணுக்கு சமைக்கத் தெரியுமா ? என்ற வழக்கமான கேள்விகள் தவிர வீணையைப் பற்றிய பேச்சே இல்லை. அதில் காயத்ரிக்கு கொஞ்சம் வருத்தமே தவிர, மாப்பிள்ளைக்கு பெண்ணை பிடித்து விட்டது. திருமணம் தடபுடலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதே நடந்தது. மாப்பிள்ளையுடன் புகுந்த வீட்டுக்கு புறப்படும் நேரமும் வந்து விட்டது. பெற்றோரிடமும் உடன்பிறப்புகளிடமும் பிரியாவிடை போன்ற வழக்கமான காட்சிகள். வண்டி வந்த வாசலில் நின்றது. ஏனைய பொருட்களோடு வீணையும் வண்டியில் ஏற்றப்பட்டது. மாப்பிள்ளையின் முகத்தில் ஒரு சுளிப்பு. இது என்ன ? என்றார். எனக்கோ என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அப்பாதான் வாயைத் திறந்தார். "அவளின் உயிருக்குயிரான வீணை மாப்பிள்ளை" என்றார். வேறு ஒன்றும் சொல்லவில்லை. தனிக்குடித்தனமும் வந்து விட்டோம். வீட்டு வேளையும் பொழுதும் சரியாக இருந்தது. பூஜை அறையில் வைத்திருந்த வீணை மௌனமாக வீற்றிருந்தது. அன்று அதை எடுத்து மீட்டுவோம் என்றிருந்தது. ஒருவாறாக வேலை முடிந்தவுடன் உடை மாற்றிக் கொண்டு மிகவும் பயபக்தியுடன் வீணையை எடுத்து மடியில் வைத்து தந்திகளை சரிபார்த்து மீட்டத் தொடங்கினேன்.

எனக்குள் ஏதோ உணர்ச்சிகள், உடம்பே புல்லரித்தது. மயிர்க்கால்கள் சிலிர்த்தது. ஏதோ ஒரு புதிய உலகத்துக்குள் பிரவேசிக்கிற உணர்வில் உடம்பின் ஒவ்வொரு நரம்புகளும் உணர்ச்சியில் விறைத்தன. என்னையே மறந்து விட்டேன். எனக்கு மிகவும் விருப்பமான சஹானா இராகத்தை மீட்டிக் கொண்டிருந்தேன். என் உடம்பும் உள்ளமும் புளகாங்கிதத்தினால் நிறைந்தது. வாசலில் கதவைத் தட்டுகின்ற ஓசையும் என் காதில் விழவில்லை. மிகுந்த நேரம் கழித்து கதவைத் திறந்தேன். மிகுந்த கோபத்துடன் கணவர் வாசலில் நின்று முறைத்தார். இவ்வளவு நேரமும் என்ன செய்தாய் என்றார். வீணையைப் பார்த்தவுடன் கூட கொஞ்சம் எரிச்சல் அவருக்கு. ஆரம்பித்து விட்டாயா என்றார். நான் மௌனமாக நின்றேன். இப்படியே எத்தனையோ நாட்கள் போராட்டங்களினால் கழிந்தன. வாழ்க்கைச் சக்கரம் உருண்டோடியது. எங்கள் வாழ்வின் அச்சாரமாக ஒரு மகள் வளர்ந்து நின்றாள்.

அவளின் திருமணமும் முடிந்தது. எந்தக் கலையையுமே அவளுக்கு நான் பயிற்றுவிக்கவில்லை. கணவர் திடீரென மாரடைப்பு நோயினால் மறைந்தார். பாட்டி பாட்டி என்ற மழலைக்குரல் கேட்டு திரும்பினேன். தூசு படிந்து கிடந்த வீணையை சுட்டிக்காட்டி பாட்டி எனக்கு கத்துக்கொடு பாட்டி என்றாள். அவ்வளவு தான். எனக்குள் அணையை உடைத்த வெள்ளம் போல் பழைய நினைவுகள் புரண்டு கொண்டு வந்தன. "பவித்ரா" வாம்மா ! பாட்டி உன்னை சிறந்த வீணை அரசி ஆக்குகிறேன் என்றேன்.

"காற்றுக்கென்ன வேலி
கடலுக்கென்ன மூடி
கங்கைவெள்ளம் சங்குக்குள்ளே அடங்கிவிடாது" என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல்தான் நினைவுக்கு வந்தது. அலையின் ஓசையும் அடங்கவில்லை. ஆதவனின் ஒளியும் குன்றவில்லை. காலங்கள் எத்தனை சென்றாலும் சலை வாழ்க்கைக்கு முடிவுண்டோ !

அம்பிகா அகஸ்தியலிங்கம் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயத்துள் ஒலிக்கும் இசை இது

கலைவாணியின் கரங்கள் - வீணையை
மீட்டாவிடில் கேட்டிருப்போமா இத்தனை இசைகள்
சிவனே இலயித்த இசையல்லவோ - உலகை
உயிர்ப்பிக்க அவன் தந்த கொடையல்லவோ
சின்னக் குழந்தைகள் மழலைகள் பேசும் - போது
இனிக்கும் இசையே - கன்னிப்
பெண்களின் கொலுசில் தான் - நாளும்
சலங்கை ஒலியோ?
இதயமது துடிக்கும் போது
எழுமிசையோ இன்று மிருதங்க
இசையாய் ஒலிக்கும் இசையோ
குயிலினம் தான் கதைக்கும் இசை
கலந்த பாஷை - அது
இனிய புல்லாங் குழலாய்
வந்திட்ட குழலிசையோ
இயற்கை தந்த இசைகளெல்லாம் – இன்று
இத்தனை மடங்கு இசைத்தனவோ
வாழ்க்கை எனும் நாடகம் – உலகில்
அரங்கேறிடத் தந்த அரிய இசைகள் இது
கவலைகள் மறந்து கவிதைகள் சொல்ல
கண்ணன் தந்த இனிய இசையும்
வாணியின் கையால் எழுந்த இசையும்
வாழ்க்கையில் என்றும் இசைக்க வேண்டும்

மு. ராஜலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸப்தஸ்வராலயா" வின் உள்ளத்தின் ஓசை வழியே அலைமோதும் நன்றி உணர்வுகள் !

இறையருள் கை கொடுக்க அவனருளால் இவ் விழாவினில் சங்கீத சுகந்தம் பரிமளித்திட ஆதவன் போல் ஒளி கொடுத்து எம் நாவிலும் செவியிலும் நாதத்தினை அள்ளி வழங்கிடும் எம் இனிய குருநாதருக்கும் கலையழகை கண்டு இரசித்திட ஒளியமைப்புடன் கூடிய மண்டபமான "சரசவிபாய" வினை வழங்கிய உரிமையாளர், உதவியாளர்களுக்கும் நெஞ்சம் மகிழ் தமிழ் தொடுத்து நல்லாசிகளை நல்கி எம் விழாவினை வாழ்த்திய மதிப்புக்குரிய பெரியோர்களுக்கும் எங்கள் கலை இதழ் சிறப்புற வெளிவர நிதியினை உதவி விளம்பரம் தந்திட்ட வியாபார நிறுவனங்களுக்கும் தேனினும்இனிய இசையினை எழிலுருவாக்கி தத்ருபமாக வரைந்து அழகோவியமாக்கிய ஓவியருக்கும் வர்ணம் மிளிர்ந்திட கலைநயம் ததும்பிடும் எம் மலரினையும், அழைப்பிதழையும் வடிவமைத்துத் தந்த பதிப்பகத்திற்கும் மிருதங்கம், கடம், தபேலாவுடன், வயலின், ஓர்கன், புல்லாங்குழல் யாவும் ஒன்று சேர்ந்து இசைத்த பக்கவாத்தியக் குழுவினர்களுக்கும் முத்தமிழிசையினை நல் விருந்தாக்கி சுவை படைத்து அவையோரினை வசீகரிக்கச் செய்த ஒலியமைப்பாளருக்கும் என்றென்றும் நாம் இன்பமுடன் எம் நிகழ்வுகளை விருப்புடன் பார்த்து இரசித்திட வழியமைத்த வீடியோ நிறுவனத்தினருக்கும் இரஞ்சகமான கலை நெறியாள்கையில் எழில் மிகு நிழற் படங்களை எடுத்து மகிழ்வித்த புகைப்படக் கலைஞருக்கும் நிஜமாக எண்ணத் தோன்றிய எமது கற்பனைக்குரிய காட்சியமைப்பினை அமைத்துத் தந்த மேடைப் பின்னணியாளருக்கும் இந் நிகழ்வுக்கு உதவிய கலையுள்ளம் கொண்ட மாணவ மாணவியருக்கும் ஏனைய எல்லா வழிகளிலும் உதவிய

பெரியோர்களுக்கும் எமது இதயம் கனிந்த உணர்வு பூர்வமான
நன்றியலைகள் பலப்பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We humbly express our thanks and Salutations to the almighty god to invoke his blessinges to make this occassion a great success.

Orchestra:-

Miruthangam	:-	Mr. Pathmalathan Padanjali
Kadam	:-	Mr. P. Rathi Rupan
Tablà	:-	Mr. Muralidaran Varadharajan
Violin	:-	Mr. Kalasoori Mrs. Kamala Atchuthan
Flute	:-	Mr. K. Sivapalaratnam
Organ	:-	Mr. Cornelius Jackson
Hall	:-	Elphinstone
Videography	:-	Video Blossoms
Still Photo	:-	Mr. Surenthiran
Sound	:-	Parakaram Radio
Stage Decor	:-	Mr. K. Kathrgamathamby
Artist	:-	Miss. Vijitha
Printers	:-	Unie Arts (Pvt) Ltd.

We also thank all those present and not present but rendered their co-operations in various ways to make this eventfull programmes a success.

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANA[illegible]AH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

With Best Compliments From

Petric Oliver Fernando
CHAIRMAN

ST. ANNE'S CENTRE (PVT) LTD
FIO INTERNATIONAL DUTY FREE (PVT) LTD

83, New Chetty Street,
Colombo 13.

Tel: 446893

With Best Compliments From

DELMA TRAVELS

U. G. 36, People's Park Complex,
Colombo 11.
T.P: 334860, 436520
Fax: 436525
Mobile: 072 74278

நம்மைத் தொடர்ந்து நிழல் வருவது போன்று உலக இன்பத்தைத் தொடர்ந்து துன்பம் வருகின்றது.

UNIE ARTS (PVT) LTD.TEL. 330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org